விலை : 20.00
பக்கங்கள் : இருபது
Registered as a Newspaper in Sri Lanka
# வலம்புரி
Valampurii
website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com
சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 தை 25 வெள்ளிக்கிழமை (07.02.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 050

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

## 24 வருடங்களுக்கு மேலாக வலி.வடக்கில்

# 9,905 தமிழ்க் குடும்பங்கள்

# மீள்குடியேற்றத்திற்காக காத்திருப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ். வலிகாமம் வடக்கிலிருந்து இடம்பெயர்ந்துள்ள 9 ஆயிரத்து 905 தமிழ்க் குடும்பங்கள் 24 வருடங்களுக்கு மேலாகியும் மீள்குடியேற்றப்படவில்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது.**

யுத்தம் காரணமாக கடந்த 1990 ஆம் ஆண்டு தமது சொந்த இடங்களிலிருந்து இடம்பெயர்ந்த வலி.வடக்கைச்சேர்ந்த 33 ஆயிரம் குடும்பங்களில் 2009 ஆம் ஆண்டிற்குப்பின்பு இதுவரை 9 ஆயிரத்து 999 குடும்பங்கள் மட்டுமே இதுவரை மீள்குடியேற்றப்பட்டுள்ளனர்.



ஆனால் யுத்தம் முடிவிற்கு கொண்டுவரப்பட்டு 5 ஆண்டுகளை எட்டியுள்ள நிலையிலும் வலி.வடக்கைச் சேர்ந்த இடம்பெயர்ந்த 9 ஆயிரத்து 905 குடும்பங்கள் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் பதிவினை மேற்கொண்டுள்ளநிலையில் நலன்புரி நிலையங்களிலும் நண்பர்கள், உறவினர்கள் வீடுகளிலும் வாடகை வீடுகளிலும் தங்கி வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்துள்ள மக்கள் அவர்களின் சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தப் படுவர் என்றும், அதுவரை அவர்கள் ஆர்ப்பாட்டமோ, போராட்டமோ செய்ய வேண்டாம் என்றும் யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா கேட்டுக் கொண்டுள்ளார் எனத்தெரியவந்துள்ளது.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள நலன்புரி நிலையங்களின் தலைவர்களுக்கும், இராணு

19 ஆம் பக்கம் பார்க்க..

## சத்தியசீலனுக்கு தொலைபேசி மிரட்டல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலனுக்கு தொலைபேசி மூலம் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சத்தியசீலனினால் யாழ். பொலிஸ் நிலையத்தில் நேற்று மாலை முறைப்பாடொன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களாக மேற்படி செயலாளரின் தொலைபேசிக்கு வெளிநாடுகளின் முகவரியை உடைய தொலைபேசி எண்களிலிருந்து உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருவதாக அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-4)

## பிரான்சில் இன்று நோ பயர் ஸோன்

(பாரிஸ்)

பிரான்ஸில் இன்று வெள்ளிக்கிழமை மாலை தமிழருக்கான அனைத்துக்கட்சி பாராளுமன்றக் குழுவின் ஏற்பாட்டில் சனல் 4 கலம் மக்ரே தயாரித்து உலக அரச பீடங்கள், ஐக்கிய நாடுகள் சபை போன்ற இடங்களில் காண்பிக்கப்பட்ட பாதுகாப்புவலயம்(நோபயர்ஸோன்) ஆவணப்படம் பிரான்ஸ் பாராளுமன்றத்தில் காண்பிக்கப்படுகிறது.

19 ஆம் பக்கம் பார்க்க..

## மார்ச் 29-ல் மாகாண சபை தேர்தல்கள்

இலங்கையில் மேல் மற்றும் தென் மாகாண சபைக்கான தேர்தல் நடைபெறும் திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன்படி எதிர்வரும் மார்ச் 29 ஆம் திகதி இரண்டு மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்படும் என்று தேர்தல்கள் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இதேவேளை நேற்று நண்பகலுடன் இரண்டு மாகாண சபைகளுக்குமான வேட்புமனு தாக்கல் பணிகள் நிறைவடைந்தன.

19 ஆம் பக்கம் பார்க்க..

## உலகத் தரம் வாய்ந்தது யாழ்.பல்கலை!

### உயர் கல்வி அமைச்சர் புகழாரம்



(யாழ்ப்பாணம்)

சகல பீடங்களையும், கற்கை நெறிகளையும் கொண்டமைந்ததாக யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் அமையப் பெற்றுள்ளதாக உயர கல்வியமைச்சர் எஸ்பி திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி பொறியியல் மற்றும் விவசாய பீடங்களின் ஆரம்ப சமய நிகழ்வுகள் நேற்று கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள விவசாய பீட வளாகத்தில் இடம்பெற்றுள்ளது.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டிலுள்ள அனைத்து பல்கலைக கழகங்களிலும் சகல பீடங்களையும், கற்கைநெறிகளையும் கொண்டதாக பேராதனை பல்கலைக்கழகம் விளங்கி வருகின்ற நிலையில், அதற்கு அடுத்த படியாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகமே விளங்குகின்றது.

இதேபோன்று குறித்த இரு பீடங்களையும் நாட்டிலுள்ள ஏனைய பல்கலைக்கழகங்களில் தொடங்குவதற்கு தீர்

19 ஆம் பக்கம் பார்க்க..

## தமிழ் எழுத்துப்பிழைகளின் உச்சக்கட்டம்




## ஆதாரங்கள் அழிப்பு இராணுவம் மறுப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் யுத்தத்தின் இறுதி கட்ட்த்தின்போது ஒரு தடவையில் பெருமளவு மக்கள் கொல்லப்பட்டதாக கூறப்படுவதற்கு இருந்த ஆதாரங்களை இலங்கை படையினர் திட்டமிட்டு அழித்துவிட்டதாக கூறும் அண்மையில் வெளிவந்த அவுஸ்திரேலிய அறிக்கையை இலங்கை இராணுவம் நிராகரித்துள்ளது.

இந்த அறிக்கை ஆதாரமற்றது என இராணுவ பேச்சாளர் ருவான் வணிகசூரிய ரொய்ட்டருக்கு தெரிவித்தார். நேரில் கண்ட சாட்சியத்தின் ஆவணங்களின் உண்மைத்

19 ஆம் பக்கம் பார்க்க..



வடக்கு மக்களின் வசதிகள் பூர்த்தி
செய்திகள் பக்கம் 04

சர்வதேச ஆணைக்குழுவை ஐ.நா அமைக்கும்
செய்திகள் பக்கம் 13



மீனவர் விடயத்தில் ஜெயா தளர்வு
செய்திகள் பக்கம் 10

'இழப்பின் துயர் துடைக்க பொதுநிதி உருவாக்கப்பட வேண்டும்'
ஆசிரியர் தலையங்கம் பக்கம் 17

இலங்கைக்கு எதிராக பொருளாதார தடை
செய்திகள் பக்கம் 10



அந்தரத்தில் பீற்றர்சன்
விளையாட்டு பக்கம் 18

## இலங்கை மீனவர்கள் 31 பேர் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்தியாவில் தடுத்துவைக்கப்பட்ட இலங்கை மீனவர்கள் 31பேரை அவர்களின் இரு படகுகளுடன் நேற்று வியாழக்கிழமை அதிகாலை காங்கேசன்துறை கடல் எல்லையில் இலங்கை கடற்படையினரிடம் இந்திய கடற்படையினர் ஒப்படைத்ததாக யாழ். மாவட்ட கடற்றொழில் மற்றும் நீரியல்வளத்துறை பணிப்பாளர் என்.கணேஷமூர்த்தி தெரிவித்தார்.

மாத்தறை, திருகோணமலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மீனவர்களே இதில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த மீனவர்களை யாழ். மாவட்ட கடற்றொழில்

19 ஆம் பக்கம் பார்க்க..

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் காணிக்கை

### அமரர் கிருஷ்ணபிள்ளை வசந்தராஜா

எமது மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்ல துணை பொதுச் செயலாளர் கி.விக்னராஜா அவர்களின் அன்புச் சகோதரன் **கிருஷ்ணபிள்ளை வசந்தராஜா** அவர்கள் சிவபதமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைந்தோம்.

இவர்தம் பிரிவால் ஆறாத்துயரில் மூழ்கியிருக்கும் குடும்பத்தினருக்கும் உறவினருக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**இவ்வண்ணம்**
தலைவர் தி.இராசநாயகம், பணிப்பாளர்கள்,
பணியாளர்கள், இல்லக்குழந்தைகள்
**மகாதேவா ஆச்சிரமசிறுவர் இல்லம்,**
ஜெயந்திநகர், கிளிநொச்சி.

(சி-6428)

விளம்பரத் தொடர்புகளுக்கு...
0213210815,0215671532
valampurii@yahoo.com

## சேவைநலன் பாராட்டு



### திரு. தங்கவேலு கணேசமூர்த்தி

(நிர்வாக உத்தியோகத்தர்)

எமது பிரதேச செயலகத்தில் நியமனம் பெற்று 20 ஆண்டுகள் இச்செயலகத்திலே பணியாற்றியது மட்டுமன்றி நீண்டகாலம் நிர்வாக உத்தியோகத்தராக மாண்புறு சேவையாற்றி 08.02.2014 ஓய்வு பெற்றுச் செல்லும் திரு.தங்கவேலு கணேசமூர்த்தி அவர்களை ஓய்வு காலத்தில் சீருஞ் சிறப்புமாக வாழ அக மகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பிரதேச செயலரும் உத்தியோகத்தர்களும்,
பிரதேச செயலகம்,
வடமராட்சி கிழக்கு.

(சி-6433)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 19 - 02 - 1932 | | 09 - 01 - 2014 |



அமரர்

### கணபதிப்பிள்ளை சிவகுரு

(ஸ்தாபகர், தமிழ்ப்பூங்கா அச்சகம், நெல்லியடி, கரவெட்டி)

09.01.2014 அன்று அமரத்துவமடைந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் 08.02.2014 சனிக்கிழமை அதிகாலை 5 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

அன்னாரின் மறைவின்போது எம்முடன் இருந்து எமது துயரில் பங்குகொண்டு சகல வழிகளிலும் எம்மை ஆற்றுப்படுத்திய அனைவரையும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது நினைவுகளுக்கப்பால் எமது குடும்பத் தலைவரின் நிகழ்வில் கலந்து கொண்டோர் இவ் அழைப்பை உளமார ஏற்று பங்குபற்றுமாறு கேட்டுக் கொள்கின்றோம்

– குடும்பத்தினர்

(சி- 6435)



## 14 ஆம் ஆகவையின் நினைவலைகள்...

### தெய்வத் திருமகன்
### அருள்நங்கை சண்முகநாதன் அன்புச் செல்வன்
### சிரஞ்சீவி சந்துதன் அவர்கள்

ஒரு பத்து நான்கு ஆண்டுகள் சென்றுவிட்டன
ஒருநிமிடமாவது உன்னை இடைவிடாது
மறக்க முடியவில்லையே ............
அன்புத் திருவுருவே தெய்வத்திருமணம்
கமழும் சந்துதனே ............
நீ என்றும் நிதமானவனே
உண்மையாக நினைக்கின்றோமே............
என்றும் உன் நினைவுகளுடன் வாழும்



(சோமையா மாமா) குடும்பத்தினர், சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜாக்குருக்கள்,
பிரதி அதிபர், யா/அம்பன் அ.மி.த.க. பாடசாலை, தும்பளை நெல்லண்டைப்
பத்திரகாளியம்மன், ஸ்ரீ வீரமாகாளியம்மன், வட பத்திரகாளியம்மன் ஆதீனஹர்த்தா

(C-6434)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## சுவாமி சிவானந்தர்

''சேர்! ஒரு குருவிடம் சீடனாகச் சேர வேண்டும் என்று ஆசைப்படுகின்றேன். எங்கேயாவது ஒரு நல்ல குருநாதர் கிடைத்தால் சொல்லுங்கள்!'' என்றார் ஒருவர்.

இவர் சொல்வதைப் பார்த்தால்... குருநாதர் என்பவர் ஏதோ கடைகளிலே விலைக்கு வாங்க கூடியவர் மாதிரியல்லவா இருக்கின்றது. அதுக்கு நான் ஒரு புரோக்கர் மாதிரி நினைத்துக் கொண்டு என்னிடம் வந்து கேட்கின்றார் சேர் நல்ல குருநாதர் கிடைத்தால் சொல்லுங்கள் என்று!

நான் என்ன செய்தேன் தெரியுமா?உடனே அவரை என் எதிரிலே சீடர்மாதிரி உட்கார வைத்து சற்று நேரத்துக்கு நான் அவருக்கு "குரு" வாக மாறினேன். நாமெல்லாம் இதுமாதிரி சந்தர்ப்பத்திலே குருவாக மாறினாத்தான் உண்டு.

ஒரு குருவிடம் சீடனாக இணைவது எப்படி? என்பதற்கு சுவாமி சிவானந்தர் வாழ்க்கையிலே நடந்த சில நிகழ்ச்சிகளை அவரிடம் எடுத்துச் சொன்னேன். அப்போதாவது அதைப் புரிந்து கொள்வார் என்கின்ற நம்பிக்கையிலே!

இமயமலை அடிவாரத்திலே ரிஷிகேஸம் இருக்கின்றது. சுவாமி சிவானந்தர் அங்கேதான் இருந்தார். சிவானந்தர் ஆசிரமத்தை அவர்தான் உருவாக்கினார்.

அவரிடம் சீடராக ஆக வேண்டும் என்ற ஆசையிலே பல ஊர்களிலேயிருந்து பலபேர் தேடிக் கொண்டு வருகிறது உண்டு.

ஒரு தடவை மிகவும் படித்த ஒருத்தர் அவரிடம் வந்தார். ''சுவாமி! நான் மிகவும் படித்திருக்கிறேன். உங்களிடம் வர வேண்டும் என்று ஆசைப்பட்டு வந்திருக்கின்றேன்?'' என்றார்.

"என்ன படித்திருக்கின்றீர்கள்?'' என்று கேட்டார் சுவாமிஜி!

அவர் மிகவும் கர்வத்தோடு "எம்.ஏ...!'' என்றார்.

"ஓ! அப்படியா... அப்படியென்றால் 'மாஸ்டர் ஆப் அவித்யா' என்றாராம் சுவாமி சர்வ சாதாரணமாக.

மாஸ்டர் ஆப் அவித்யா என்றால் அறியாமையில் சிறந்தவன் என்று பொருள். அதைச் சுருக்கினால் எம்.ஏ என்று தானே வரும்.

இதைக் கேட்டதும் வந்தவருடைய கர்வம் பறந்து போய்விட்டதாம்.

இன்னொரு நாள் ஒரு பெரிய பணக்காரர் வந்தார். சுவாமி மகராஜிடம் சீடனாக வேண்டும் என்றார்.

சுவாமி நிமிர்ந்து பார்த்தார். வந்திருந்தவர் மிகவும் கட்டான உடை அணிந்திருந்தார்.

தான் பெரிய பணக்காரர் என்கின்ற கர்வம் அவரிடம் இருக்கின்றது.

சுவாமி அங்கே இருந்தவர்களை அழைத்து...

சரி அப்படியென்றால் அந்த டின்னை இவரிடம் கொடுங்கள் என்றார்.

ஒரு காலி டப்பாவை எடுத்து வந்து அவரிடம் கொடுத்தார்கள். அவர் வாங்கிவிட்டு முழித்தார்.

என்ன பார்க்கிறீங்கள்? இந்த டப்பாவை எடுத்துக் கொண்டு நான்கு இடத்துக்குப் போங்கள்.... பிச்சை எடுத்து மா கொண்டு வாங்கள். பின்னர் சப்பாத்தி தயார் செய்து எனக்கும் கொடுத்து நீங்களும் சாப்பிடலாம் என்றார்.

வந்த பணக்காரர் அங்கேயே நின்று கொண்டிருந்தார்.

ஆன்ம சாதனை என்றால் அது சாதாரண விடயம் இல்லை. வேடிக்கையான சமாச்சாரமுமில்லை. அகங்காரம் இல்லாமல் பிச்சை வாங்கி குருவுக்கும் கொடுத்து தானும் சாப்பிட வேண்டும் என்றார் சுவாமி.

அது மிகவும் கஷ்டமான காரியம் என்று நினைத்தார் அந்தப் பணக்காரர். மெதுவாக சொல்லாமல் போய்விட்டாராம்.

இன்னொரு நாள் ஒருத்தர் வந்தார். வேகமாக வந்தார். சுவாமியை வணங்கினார்.

சுவாமி இன்றிலிருந்து நீங்கள் தான் எனக்குக் குரு என்றார்.

அப்படி ஒரு வேலை எனக்குப் போட்டுக் கொடுத்ததற்கு மிகவும் நன்றி என்று ஆங்கிலத்திலே சொன்னாராம் சுவாமி. பின்னே என்ன?

இவர்போய் நின்றுகொண்டு நீதான் எனக்குக் குரு என்றால் அது அப்பாயின்ட்மென்ட் போட்டு கொடுக்கிறது மாதிரி தானே இருக்கின்றது.

சரி... இந்த நிகழ்ச்சியிலேயிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டிய விடயம் என்ன தெரியுமா?

ஒரு குருவைச் சீடன் தேர்ந்தெடுக்க முடியாது! ஒரு குருவே தான் தன்னுடைய மாணாக்கனைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அப்படிப்பட்ட பழக்கமெல்லாம் இல்லாததனாலேதான் இன்றைக்கு ஏகப்பட்ட அவஸ்தைகள்.

ஒரு பையன் ஆசிரியரைப் பார்த்து சொல்கின்றான்.

"சேர்... என்னையெல்லாம் நீங்கள் இப்படித் திட்டக்கூடாது. ஏன் என்றால் நான் பத்தாயிரம் ரூபா செலவு செய்து இங்கே சீட் வாங்கி இருக்கின்றேன்'' என்றான்.

அதற்கு ஆசிரியர். ''இருந்தாலும் நான் உன்னைத்திட்டலாம்டா.... ஏன் என்றால் இருபதாயிரம் ரூபா செலவு செய்து நான் இந்த வேலையை வாங்கியிருக்கின்றேன்'' என்றார்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# உள்ளூராட்சி மன்றங்களில் அநீதியான முறையில் நியமனங்கள் வழங்கப்படுகின்றன

## அரசாங்க பொதுஊழியர் சங்கம் சுட்டிக்காட்டு

(கல்முனை)

வடமாகாண உள்ளூராட்சிமன்றங்களில் முறையற்ற அநீதியான நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாகஅவர்வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு அறிக்கையொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அதில் அவர் குறிப்பிட்டுள்ள விடயங்கள் வருமாறு,

வட மாகாணத்திலுள்ள மாநகர சபை, நகரசபை, பிரதேச சபைகளில் அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளுக்குரிய நியமனங்கள் வழங்கலில் முறையற்ற அநீதியான செயற்பாடுகள் கடந்த காலங்களில் நடைபெற்றுள்ளன.

இதன் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள பல வருடகாலமாக கடமையாற்றும் ஊழியர்கள் தொடர்ந்தும் அவர்களுக்கு நிதி வழங்கக் கோரி பல சாத்வீக போராட்டங்களை அண்மைக்காலங்களில் செய்து வருவதை தாங்களும் அறிவீர்கள்.

இவ்விடயம்தொடர்பாகவடமாகாண சபை அமர்வில் தீர்மானம் கொண்டுவரப்பட்டுநிறைவேற்றப்பட்டு மாகாண சபையில் தீர்மானம் எடுத்திருந்தும் சில சபைகள் இத்தீர்மானத்தை கவனத்தில் கொள்ளாது புறந்தள்ளி செயற்பட்டிருப்பதனால் பாதிக்கப்பட்ட ஊழியர்கள் எமது தொழிற்சங்கத்திடம் முறையிட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள துணுக்காய் பிரதேச சபை, கரைதுறைப்பற்று பிரதேச சபைகளில் புதிய நியமனங்கள் சபைகளின் செயலாளரினால் வழங்கப் பட்டுள்ளதையும் அறியக் கூடியதாகஉள்ளன.

இந்நியமனங்கள் நிரந்தர அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதையும் அறிய முடிகின்றது.

இதன் காரணமாக பல வருடங்களாக குறித்த பதவிகளில் அமர்த்தப்படுவோம் என்ற நம்பிக்கையுடன் கடமை புரிந்த சாரதிகள் நூலிதப் பணியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதை மிக மனவேதனையுடன் தங்களது கவனத்திற்கு கொண்டு வருகின்றோம்.

வட மாகாணம் அமைக்கப்படுவதற்கு முன்னரும் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுவது உடன் நிறுத்தப்பட வேண்டும். உள் ளூராட்சி அமைச்சின் முன் அனுமதி பெறப்படாமல் புதிய நியமனங்கள் வழங் கப்பட்டிருப்பின் இதை உடன் இரத்துச் செய்வதற்கு ஆக்க பூர்வமான நடவடிக்கை எடு க்குமாறு தொழிற்சங் கம் சார்பாக கேட்டுக்கொள்கின் றோம்.

மேலும் வடமாகாண சபையின் தீர்மானத்திற்கு முரணாக செயற்பட்ட குறித்த சபைகளின் செயலாளர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்துகின்றோம்.

இவ்வாறானசெயற்பாடுகளை கண்டும் காணாதது போன்று இருப்பின் எதிர் காலத்தின் அச் செயற்பாடு வடமாகாணத்தின் கீழ் செயற்படும் சபைகளில் அதிகரித்து காணப்படுவதற்கும் தங்களது சபையின் தீர்மானத்தை உதாசீனப் படுத்துவதற்கும் சந்தர்ப்பத்தை வழங்குவதாக அமையும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இவ்வாறான முறையற்ற நிர்வாக செயற் பாடுகள் இடம்பெற்றதை தொழிற்சங்க பேச்சுவார்த்தையின் போதும் வடமாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவின் கவனத்திற்கும் நாம் முன்னர் கொண்டு வந்துள்ளோம் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். இதற்கான சாதகமான பதிலையும் பணிவுடன் எதிர்பார்க்கின்றோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இக்கடிதத்தின் பிரதிகள் வட மாகாண அவைத் தலைவருக்கும் மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கும் முல்லைமாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(அ-2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 100 | 40 | 80 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 40 | 60 | 60 |
| தக்காளி | 20 | 40 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 35 | 30 |
| கோவா | 40 | 40 | 40 |
| கரட் | 60 | 70 | 80 |
| பூசணி | 20 | 40 | 40 |
| புடோல் | 40 | 50 | 60 |
| வாழைக்காய் | 25 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 50-100 | 100 | 100 |
| பெரிய வெங்காயம் | 70 | 80 | 70 |
| பாகற்காய் | 100 | 130 | 140 |
| வெண்டிக்காய் | 50 | 50 | 100 |
| கருணைக் கிழங்கு | 20 | 40 | 40 |
| பயற்றங்காய் | 120 | 170 | 80 |
| லீக்ஸ் | 60 | 80 | 80 |
| பீற்றூட் | 40 | 70 | 60 |
| கறிமிளகாய் | 70 | 150 | 100 |
| முருங்கைக்காய் | 200 | 180 | 400 |
| போஞ்சி | 40 | 80 | 60 |
| கத்தரிதம்புள்ள | 50 | 40 | 70 |
| கீரை – 1 பிடி | 20 | 25 | 20 |
| தேசிக்காய் | 20 | 50 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 45 | 30-40 |
| இராசவள்ளி | 60 | – | 100 |

# இராசி பலன்

07.02.2014

(தை 25, வெள்ளிக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.29 மணிக்கு

அட்டமி மாலை 6.39 மணிவரை

பரணி முற்பகல் 11.15 மணிவரை

இராகுகாலம் 11.05-12.35 மணிவரை

சுபநேரம் 6.35-8.05 மணிவரை

**மேடம்** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வீட்டில் சில மாற்றங்களைச் செய்ய முன்வருவீர்கள், நீங்கள் தேடிச் சென்று சந்திக்க நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடி வரலாம்.

**இடபம்** ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், பித்த சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், சயன சுகக் குறைவான நாள்.

**மிதுனம்** சொல்லைச் செயலாக்கிக்காட்ட முற்படுவீர்கள், பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், தெய்வீக சிந்தனை மேலோங்கும், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும்.

**கடகம்** திட்டமிட்ட காரியங்கள் அனைத்தும் சரியாக நடைபெறலாம், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், தந்தைவழி உறவில் ஆதாயமுண்டு, ஆரோக்கியமான நாள்.

**சிங்கம்** சிந்தித்து செயற்பட்டு சிறப்புகளைப் பெறும் நாள், உறவினர் பகை அகலும், சொத்து பிணக்குகளுக்கு சுமுகமான தீர்வு கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு.

**கன்னி** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், போசன சுகமுண்டு, எடுத்த காரியத்தில் சில தாமதங்கள் ஏற்படலாம், பிரயாண பயமுண்டு.

**துலாம்** உறவினர் வருகையால் உற்சாகம் பெறுவீர்கள், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொழில் முன்னேற்றத்திற்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கலாம்.

**விருச்சிகம்** வருமானம் திருப்திதரும், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், போட்டிகளில் வெற்றி கிடைக்கும்.

**தனுசு** கோயில் வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும், வீட்டை அழகுபடுத்தும் எண்ணம் உருவாகும், வியாபார விருத்தியுண்டு.

**மகரம்** வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முற்படுவீர்கள், விருந்து விழாக்களில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, கற்பனை மிகுதியான நாள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**கும்பம்** சுதந்திரமாகச் செயற்படுவீர்கள், சமுதாயப் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், குடும்பத்தினர் உங்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பர், வருமானம் திருப்திதரும்.

**மீனம்** பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும் நாள், தொழில் வளர்ச்சிக்கு அதிக பிரயாசை காட்டுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு, மாதர் நட்புண்டு, பெரியோர்களின் உதவிகள் கிடைக்கலாம்.

வளவன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கோண்டாவில் பகுதியின் இரு வீடுகளில் திருட்டு!

இரு வீட்டுக்கதவுகளை உடைத்துக் கொண்டு உள்நுழைந்த திருடர்கள் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான சிடி பிளேயரையும் 5 ஆயிரம் ரூபா பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு கோண்டாவில் வடக்கு சோளன் தோட்டத்தில் இடம் பெற்றுள்ளது.

சம்பவதினம் குறித்த வீடொன்றில் திருமணத்தின் நான்காம் சடங்கு இடம்பெற்றுள்ளது. இதனை தமக்கு சாதகமாக கருதியே திருடர்கள் உள் நுழைந்துள்ளனர்.


வீட்டுக்கதவைநான்காம் சடங்கு வீடு உடைத்து உள்நுழைந்த திருடர்கள் வீட்டைச் சல்லடை போட்டு தேடியுள்ளனர். பொருட்கள் எதுவும் அகப்படாத நிலையில் 5 ஆயிரம் ரூபா பணத்தை மட்டும் திருடிக் கொண்டு அருகில் உள்ள மற்றைய வீட்டுக்குள் புகுந்தனர்.

அங்கும் அவ்வாறே நடந்து கொண்டதுடன் அங்கு வைக்கப்பட்டிருந்த 25 ஆயிரம் ரூபா பெறுமதியான சிடி பிளேயரை எடுத்துக் கொண்டு சென்று விட்டனர். வீட்டார் அதிகாலை எழும்பி பார்த்த போதே விடயம் தெரிந்தது.

வீட்டுக் கதவு உடைக்கும் போது தமக்கு சத்தம் எதுவும் கேட்கவில்லை என வீட்டு உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் தமது வீட்டு நாய் கூட குரைக்காததால் திருடர்கள் மயக்க மருந்து ஏதும் பயன்படுத்தியிருக்கலாம் எனவும் சந்தேகம் வெளியிட்டனர்.

இவ்விடயம் கோப்பாய் பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதை தொடர்ந்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)




# வடக்கு மாகாண மக்களின் அடிப்படை வசதிகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன

## வடக்கு ஆளுநர் கூறுகின்றார்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து மக்களினதும் அடிப்படை வசதிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

நாட்டின் 66 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு வலி.வடக்கு மீளக்குடியமர்ந்த மக்களுக்கு வாழ்வாதாரக் கொடுப்பனவு வழங்கும் வைபவம் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய முன்றிலில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வலி.வடக்கில் உள்ள மக்களின் ஆயிரக் கணக்கான ஏக்கர் காணிகளை இராணுவத்தினர் பிடித்து வைத்துள்ள நிலையிலும் அம் மக்கள் தற்போது முகாம்களில் வசித்து வருகின்ற நிலையிலுமே ஆளுநர் இங்குள்ள அனைத்து மக்களின் அடிப்படை வசதிகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என கூறியுள்ளார்.

நாட்டின் சுதந்திர தினத்தின் தன்மையை இங்குள்ள மக்கள் அனைவரும் உணர்ந்து கொள்ளவேண்டும்.

வடக்கு மாகாணம் நான்கரை வருடத்திற்கு முன்னர் இருந்ததை விட தற்போது பாரிய மாற்றத்தைக் கண்டுள்ளது. மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்குவதற்கு நாம் தயாராகவுள்ளோம்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 4 வருடத்திற்கு முன்னர் வடக்கின் வசந்தம் எனும் திட்டத்தை ஆரம்பித்து அதனூடாக வடக்கிற்கான வேலைத்திட்டங்களையும் அபிவிருத்திகளையும் நடைமுறைப்படுத்தி வருகின்றார்.

இங்குள்ள மக்கள் அனைவரதும் அடிப்படை வசதிகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதோடு அவர்களுக்கான வாழ்வாதார கொடுப்பனவுகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன.

மக்கள் அனைவரும் அரசியல்வாதிகளை அணுகி தமக்கான கல்வியை பெறுவதற்கு முயற்சிக்க வேண்டும்.

35 வருடங்களுக்கு பின்னர் வருவித்துக் கொண்ட சுதந்திரத்தை நாம் அனைவரும் கட்டிப் பாதுக்காக்க வேண்டும் என்றார்.

உதவி வழங்கும் இந்நிகழ்விற்கு மாகாண சபை உறுப்பினர்கள் எவரும் அழைக்கப்படவில்லை.

மேலும் இதில் திணைக்கள அதிகாரிகள், உத்தியோகத்தர் என பலரும் கலந்து கொண்டனர். (அ-4)


# சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



(வராத்துப்பளை)

வராத்துப் பளை பருத்தித்துறையை வசிப்பிடமாகக் கொண்ட பெருமாள் பத்மநாதன் நீதி அமைச்சினால் சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டு அண்மையில் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

இவர் யுத்தத்தால் பாதிப்படைந்த கிளிநொச்சி,முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள பொது அமைப்புக்கள், மதத்தலங்கள் சிலவற்றின் ஆவணங்கள் மீளமைத்தல்,கோவைகள் ஒழுங்குபடுத்தல்,கணக்குப்பதிதல் உட்பட நிர்வாக வேலைகளை இலவசமாக மேற்கொண்டார். கிளிநொச்சி இலங்கை காப்புறுதிக் கூட்டுத் தாபத்தின் காப்புறுதி ஆலோசகராகவும் பணியாற்றுகின்றார். (அ)





நாட்டின் 66 ஆவது சுதந்திரதின நிகழ்வை முன்னிட்டு வலி.வடக்கு மீளக்குடியமர்ந்த மக்களுக்கான வாழ்வாதாரக் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய முன்றிலில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி மீளக்குடியமர்ந்த பெண்ணொருவருக்கு வாழ்வாதாரக் கொடுப்பனவு வழங்குவதையும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:-உ.சாளின்)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சுதுமலை அருள்மிகு முருகமூர்த்தி கோவில் மஹோற்சவம் நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி திருவிழா நடைபெற்று வருகின்றது.

தினமும் காலை 10 மணிக்கு அபிஷேகமும் தொடர்ந்து வசந்த மண்டப பூசையும் காலை, மாலை இடம்பெற்று சுவாமி உள்வீதி, வெளிவீதி உலா வருவார்.

எதிர்வரும் 13 ஆம் திகதி காலை 7 மணிக்கு தேர் திருவிழாவும் மறுநாள் காலை 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் தொடர்ந்து 15 ஆம் திகதி திருக்கல்யாண உற்சவமும் காலை 10.30 மணிக்கு சங்காபிஷேகமும் இடம்பெறும். (அ)

# நெல் அழிவுக்கு நட்டஈடு பெற விவசாயிகள் பதிவு செய்யலாம்

(மானிப்பாய்)

கடந்த பெரும்போகத்தில் ஏற்பட்ட நெல் அழிவுக்கு நட்டஈடு வழங்கும் நோக்கில் கமநல சேவை திணைக்களத்தினால் பதிவு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் பதிவுகளை மேற்கொள்ளமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஏற்பட்ட காலநிலை சீரின்மை காரணமாக விவசாயிகளின் நெல்வயல்கள் அழிவடைந்துள்ளன. இதனால் விவசாயிகள் பல்வேறு பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளனர்.

பெரும்போக நெற் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளே இந்தப் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

ஒவ்வொரு பிரதேசத்திலும் உள்ள கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு இது தொடர்பான அறிவுறுத்தல் மாவட்டக் கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரினால் வழங்கப்பட்டுள்ளது.

எனவே, பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகள் தமது பாதிப்புக்கள் தொடர்பில் அவர்களின் பகுதிக்குப் பொறுப்பான கமநல அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் பதிவுகளை விரைவாக மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2-23)




# ஓய்வு பெறுகின்றார்

(தும்பளை)

மருதங்கேணி பிரதேச செயலகத்தில் கடந்த இருபது வருடங்களாக நிர்வாக அலுவலராக கடமையாற்றிய த.கணேஷமூர்த்தி இன்று முதல் ஓய்வு பெறுகின்றார். இவர் யுத்த காலங்களிலும் சுனாமி அனர்த்த காலங்களிலும் இங்கு கடமையாற்றியுள்ளார். இவர் ஓய்வு பெறுவதை தொடர்ந்து இவரது இடத்திற்கு பா.மேகவண்ணன் இன்று நியமிக்கப்படுவார். (அ-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா.சபையை நோக்கிய நீதிக்கான நடைபயணம்

ஐ.நா. நோக்கிய நீதிக்கான நடை பயணம வெற்றிகரமாக நேற்று முன்தினம் நகரத்தை வந்தடைந்தது.காலநிலை மழையும் குளிரு மாக இருநத பொழுதிலும் உறுதி தளராமல் தாய் மணணை மனதில் நிறுத்தி மனித நேயப்பணி யாளர்கள் நடைபயணத்தை தொடர்ந்தனர்.

நடந்து செல்லும் பாதையில் ஈழத் தமி ழர்களின் இன அழிப்பை வேற்றின மக்க ளுக்கு எடுத்துரைக்கும் முகமாக நான்கு மொழிகளில் துண்டுப்பிரசுரம் வழங்கப் பட்டது. நடை பயணம் செல்லும் பாதையில் தமிழ் மக்கள் மிகுந்த ஆர்வத்துடனும் உரிமையுட்னும் மனித நேய பணியா ளர்களை ஆதரித்து பங்களித்தனர். நகர இளையோர்கள் நடை பயணத்தில் இணை ந்தும் கொண்டனர்.

இதேவேளை, தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தலைவரை வேல் முருகன் உலகத் தமிழ் மக்களை ஐ.நா. முன்றலில் அலையெனத் திரளுமாறு அழைப்பு விடுத்து ள்ளார். எதிர்வரும் மார்ச் மாதத்தில் ஐ.நா கூடவுள்ளது. இந்த நிகழ்வில் உலகமெல் லாம் வாழுகின்ற ஈழ உறவுகளும், ஐரோ ப்பிய நாடுகளில் வாழுகின்ற ஈழ உறவுகளும் இளைய தலைமுறையினரும் பெரும் திர ளாகக் கலந்து கொண்டு, ஐநாவிற்கு முன்பாக கூடுவோம்.

60 ஆண்டு கால தமிழீழ சுதநதிர வடுத லைப் போராட்டத்திற்கு வெற்றியைக் காணு கிற தூரத்திற்கு வந்துள்ளோம்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் உயிரைத் துறந்த மாவீரர்களுடைய தியா கமும் பல்லாயிரக்கணக்கான தமிழீழ மக்களின் தியாகமும் முள்ளிவாய்க்காலில் இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ் உறவுகள் செத்து மடிந்ததற்கு நாம் நீதி கேட்டு, நியாயம் கேட்டு நமக்கான உரிமை கேட்டு, இந்த மாபெரும் பேரணியில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (அ-2)

# இலங்கை தமிழர் விவகாரத்தில் ராகுல்காந்தி தலையிடவேண்டும்

## சிறுத்தைகள் கட்சி கோரிக்கை

இலங்கைத் தமிழர் விவகாரத்தில் காங்கிரஸ் இளைஞர் அணித் தலைவர் ராகுல் காந்தி தலையீடு செய்ய வேண்டு மென தமிழகத்தின் விடுதலை சிறுத்தைகள் கட்சி கோரியுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனீவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் இலங் கைக்கு எதிரான தீர்மானத்திற்கு இந்திய மத்திய அரசாங்கம் ஆதரவளிக்க வேண் டுமென வலியுறுத்தி யுள்ளது.

விடுதலைச் சிறுத் தைகள் கட்சியின் தலைவர் தொல் திரு மாளவன், ராகுல் காந்தியுடன் இல ங்கை விவகாரம் குறித்து சுமார் 45 நிமிடங்கள் பேச்சு வார்த்தை நடத்தியுள் ளார்.ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங் கைக்கு எதிராக இந் தியா வாக்களிக்க வேண்டுமென மத் திய அரசாங்கத்தி டம், ராகுல் காந்தி யின் ஊடாக கோரி க்கை விடுப்பதாக தொல் திருமாளவன் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர் இனச் சுத்திகரிப்பிற்கு உட்படுத்தப்பட்டமை தொடர்பில் பக்கச்சார் பற்ற சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதே தமது கோரிக்கை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டு மென திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் ஆகிய கட்சிகள் மத்திய அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள் ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# அறிவித்தல்

மானிப்பாய் கிராம உப அலுவலகம் ஆனைக்கோட்டை
வட்டாரம்:- 04, ஆதன இலக்கம்:- 10/14
எச்சாட்டி வைரவர் கோயில் வீதி

வட்டாரம் 04 எச்சாட்டி வைரவர் கோயில் வீதி ஆதன இலக்கம் 10/14 இல் அமைந்துள்ள உறுதிப்படி வடமாகாணம், யாழ்ப்பாணம், வலிகாமம் மேற்குப் பகுதி, மானிப்பாய், கோவில்பற்று, சுதுமலை இறை ***கூரை தட்டிக்காடு*** என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு ஒன்று கொண்ட இவ்வாதனமானது சுதுமலை தெற்கைச் சேர்ந்த சுபாஸ்கரன் பெண் ரபிதா அவர்களால் அறுதி உறுதி மூலம் இதே ஊரைச் சேர்ந்த ராமர் சதீஸ்குமார் என்பவருக்கு குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் செல்வி. ஞானலோஜினி சிவஞானம் முகதாவில் நிறைவேறிய 7609 ஆம் இலக்க 2012.10.05 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். ***கூரைத்தட்டிக் காடு*** நிலப்பரப்பு ஒன்று உள்ள இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங் களுடன் எழுத்து மூலமாக 14 நாட்களுக்கு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வுரிமையும் 14 நாட்களுக்குள் கோரப்படாதவிடத்து இவ்வாதனம் ராமர் சதீஸ்குமார் என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

**தவிசாளர், வலிகாமம் தென்மேற்கு,**
**பிரதேச சபை, மானிப்பாய்.** (5533)

# சாவகச்சேரி பிரதேச சபையின் அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புதல்- 2014

சாவகச்சேரி பிரதேச சபையினால் 19.02.2013 ஆம் திகதிய வலம்புரி, தினக்குரல் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புதல் 2013 தொடர்பாக,

உள்ளூராட்சி ஆணையாளரின் NP/14/01/ET5/Ser.Min/Gen/2013 ஆம் இலக்க 23.09.2013 ஆம் திகதிய,NP/14/01/ET/ET5/Ser.Min/Gen/2013 ஆம் இலக்க 20.01.2014 ஆம் திகதிய கடிதங்களுக்குஅமைவாக,கீழ்வரும் பதவியணிகளுக்குரிய கல்வித்தகைமைகள் பின்வருமாறு மாற்றப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களைஅலுவலக நேரத்தில் பிரதேசசபையின் தலைமைப் பணிமனையின் விளம்பரப் பலகையில் பார்வை யிட்டுபிரதேச சபையினால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுவிண்ணப்பிக்க முடியும்.

**பதவிகள்:-** சுகாதாரத் தொழிலாளி,வேலை/ வெளிக்களத் தொழிலாளி,சாரதி

**கல்வித்தகைமை:-** பொருத்தமான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாதநிலையில் பின்வரும் பதவியணிகளுக்கான கல்வித் தகைமை கீழ்வருமாறு மாற்றிக் கொள்ளப்படும்.

| பதவிப் பெயர் | ஏற்கனவேகோரப்பட்ட கல்வித்தகைமை | தற்போதைய கல்வித்தகைமை |
|---|---|---|
| சுகாதாரத் தொழிலாளி | க.பொ.த.சாதாரணதரம் | 8 ம் வகுப்பு |
| வேலை/வெளிக்களத் தொழிலாளி | க.பொ.த.சாதாரணதரம் | 8 ம் வகுப்பு |
| சாரதி | க.பொ.த.சாதாரணதரம் | 8 ம் வகுப்பு |

**விண்ணப்பிக்கும் முறை:-** தபால் உறையின் இடதுபக்கமேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் எழுதப்பட்டுசெயலாளர்,சாவகச்சேரிபிரதேச சபை,கொடிகாமம் என்றமுகவரிக்குபதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

**விண்ணப்பமுடிவுத்திகதி:-** 21.02.2014.

**குறிப்பு:-** ஏற்கனவேவிண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

**செல்வி.தியாகராசா தர்சினி**
**செயலாளர், சாவகச்சேரி**
**பிரதேசசபை, கொடிகாமம்.**

திகதி:- 07.02.2014. (சி/6432)

# வலிகாமம் தெற்கு பிரதேச சபை

වලිකාමම් දකුණ ප්‍රාදේශීය

VALIKAMAM SOUTH PRAGESHIYA SABHA
CHUNNAKAM

## பொது அறிவித்தல்

எமது பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட அனைத்து தர வீதிகளின் இரு மருங் கிலும் எல்லைவேலி மற்றும் எல்லைச்சுவருக்கு வெளியே போக்குவரத்திற்கு இடையூ றாக நாட்டப்பட்டுள்ள பூமரக்கன்றுகள், புல்பூண்டுகள், பார்த்தீனியம் மற்றும் அலங் கார சீமெந்துக்கட்டுக்கள் போன்றவற்றை ஒரு வார காலத்தினுள் (07.02.2014-14.02.2014) அகற்றித் துப்புரவு செய்யுமாறு பணிவுடன் வேண்டுகின்றேன். தவறின் சபையினரால் அகற்றப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

**தி.பிரகாஷ் தவிசாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.** (சி/6431)

# கூறுவிலை கோரல்

வடக்கு மாகாண சபையின் 2014 ஆம் ஆண்டுக்கான சபை அமர்வுகள் மற்றும் கூட்டங்களின்போது வழங்கப்படும் உணவுகள், சிற்றுண்டிகள், தண்ணீர், பானங்கள் போன்றவற்றுக்கான கூறுவிலை கோரப்படுகின்றது.

கூறுவிலை கோரல் படிவங்களை ஏ9 வீதி, கைதடியில் அமைந்துள்ள வடக்கு மாகாண சபையின் பேரவைச் செயலக நிதிக் கிளையில் அலுவலக நேரத்தில் 07.02.2014 தொடக்கம் 21.02.2014 வரை பெற்றுக் கொள்ளலாம்.

**செயலாளர், பேரவைச் செயலகம்,**
**வடக்கு மாகாண சபை.** (சி/6429)

# கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 2<br>கி.பா: 29 ¼ செவ் 2 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BSc / Software Engineer (லண்டன் - Work Permit)<br>தொ.இ: B/1018 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 4<br>கி.பா: 46 செவ் 7 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BSc, SLAS / ADS (SLAS Trainee)<br>தொ.இ: G/1475 |
| பிறப்பு: 1971 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 4<br>கி.பா: 36 உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: MBBS / வைத்தியர்<br>தொ.இ: B/1021 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 1<br>கி.பா: 78 ¼ உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: College / விற்பனையாளர் (கனடா சிற்றிசன்)<br>தொ.இ: G/1477 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 21<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: BSc / அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>தொ.இ: B/1023 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: மகம் 1<br>கி.பா: 34<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L, CBF / வங்கியாளர்<br>தொ.இ: G/1480 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 20 ¾ செவ் 7 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BSc, MBA / நிரந்தர தனியார் வேலை<br>தொ.இ: B/1024 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 2<br>கி.பா: 27 ½ உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: HNDA<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் விரும்பத்தக்கது.<br>தொ.இ: G/1488 |

## கல்யாண மாலை

**(சர்வதேச திருமண சேவை)**
**இல. 144, பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்**
**பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே**
**தொடர்பு:- 021 720 1005**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
[illegible] காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
([illegible] செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தமிழையும் போற்றி வளர்த்த பெருமகன்

**தெல்லிப்பழை பாலர் ஞானோதய சபையின் 68 ஆவது ஆண்டு நிறைவும் கணேசலிங்கக் குருக்களின் நினைவும் இன்று நினைவு கூரப்படுகின்றது.**

**அவரின் நினைவு மலருக்கு அமரத்துவமடைந்த முன்னாள் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் அப்பாக்குட்டி தங்கம்மா எழுதிய அஞ்சலி உரையின் சிறு பகுதி பிரசுரமாக்கப்படுகின்றது.**

**''கரிய மாலினும் கண்ணுல தானினும்**
**உரிய தாமரை மேலுறை வானினும்**
**விரியும் பூதமோர் ஐந்தினும் மெய்யினும்**
**வெரியர் அந்தணர் பேணுதி உள்வத்தால்''**

என்பது இராமநாதன் கல்லூரியில் நான் படித்த காலத்தில் பாடமாக்கிய ஒரு செய்யுள் ஆகும்.

கணேசலிங்கக்குருக்கள் ஐயா அவர்கள் இன்று அமரர் ஆகிவிட்டார் சிந்தனைத் தெளிவும் செயலாற்றும் திறனும் கொண்டவர் இவர். கோயிற் பூசையை முட்டின்றி நிறை வேற்றுவதில் ஆர்வம் கொண்டவர் இவர் அந்தணப் பெருமகனாகிய இவருக்கு பிரார்த்தனை உரை வழங்குவதில் நான் திருப்தி அடைகின்றேன்

**தேர்த் திருப்பணியும் கலை பயிலும் மண்டபமும்**

கோயில் என்பது தனித்து பூசை வழிபாடுகளுக்கு மாத்திரம் உரியதன்று மக்களை கலா ரசனை உள்ளவர்களாக வளர்த்து எடுப்பது கோயில்களின் கடமை ஆகும்.

இதனை உணர்ந்த அமரர் கணேசலிங்கக் குருக்கள் ஐயா இசைத்தமிழை வளர்ப்பதற்கு ஏற்ற ஒரு இடத்தை கோயிலின் வட மேற்கு மூலையில் ஏற்படுத்திக் கொண்டார். அத்துடன் இசை ஆசிரியர்கள் பலரை அமர்த்தி வயலின், மிருதங்கம், வாய்ப்பாட்டு போன்றவற்றை பயிற்றுவித்தார்.

பெருந்தெரு வழியாகப் போகும் போது இந்த ஓசைகள் எமது செவியைக்குளிர வைக்கும்.

**அன்னதானம்**

வழிபட வந்தவர்களுக்கும் வயிற்றுப்பசியோடு வந்தவர்களுக்கும் இயன்ற வகையில் அன்னதானம் செய்து திருப்தியளித்தார். கோயில் வடக்கு வீதியிலே இந்த மண்டபத்தை நல்ல முறையில் அமைத்து கொண்டார்.

**பாலர் ஞானோதய சபை**

இவ்வாலயத்தின் சிறுவர், சிறுமியர்களின் அறிவை மேம்படுத்தற் பொருட்டு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு உருவாக்கப்பட்டது இச்சபையாகும்.

இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழையும் போற்றி வளர்த்த பெருமை இச் சபைக்கு உண்டு. எம்மவரில் பலர் இச் சபையின் மூலமே உயர்வு பெற்றவர்.

**சைவசமய அறிவை மேலோங்க வைக்கும் நூல் வெளியீடு**

வருடந்தோறும் திருமுறைகளிலும் புராணங்களிலும் விநாயகப்பிரபந்தங்களிலும் தெரிந்தெடுத்து ஒவ்வொரு நூலை அழகாக அச்சிட்டு வெளியிடுவது ஐயா அவர்களின் பாராட்டத்தக்க பணியாகும்.

இவ்வாறு பல நூல்கள் பாலர் ஞானோதய சபையின் வெளியீடாக அமைந்துள்ளன. குருக்கள் அவர்கள் எழுத்தாற்றல் மிக்கவர் ஆகையால் காலத்திற்கு ஏற்ற படி சைவ நூல்களை வெளியிட்டுவந்தார். இவற்றை காசிவிநாயகரின் அடியவர்கள் உவந்து பெற்று அன்பளிப்பும் வழங்கி உள்ளனர்.

எனவே சமீபத்தில் அமரத்துவம் அடைந்த கணேசலிங்கக்குருக்கள் ஐயா அவர்களின் திருவடிகளைப் போற்றுவோம்.


அன்னார் ஆற்றிய பணிகளைத்தொடர்ந்து நிறைவேற்றுவோம். காசிவிநாயகர் ஆலயத்தை முப்போதும் திருமேனி தீண்டிப் பூசிக்கின்ற அந்தணப்பெருமக்களிடம் ஒப்படைப்போம்.

பாலர் ஞானோதய சபையை வளர்த்தெடுப்போம். ஐயாவின் ஞாபகமாக அவருக்குச் செய்ய வேண்டிய நன்றி இவை என்பதை உணர்ந்து கொள்வோம். காசிவிநாயகரை அல்லும் பகலும் பூசித்து அவன செய்வோம்.

**''என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்**
**ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட**
**மற்று ளாரடி யாரவர் வான்புகழ்**
**நின்ற தெங்கும் நிலவி உலகெல்லாம்''**

-பெரியபுராணம்

# மாற்றுவலுவுள்ள மாணவிக்கு இலத்திரனியல் சக்கரவண்டி



கிளிநொச்சி புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாற்றுவலுவுள்ள மாணவி நாகப்பிரியா வாழ்வின் முயற்சிக்கு பலம் கொடுக்கும் வகையில், மாற்று வலுவுள்ளவர்களுக்கு ஆதரவு அளித்து வரும் உரும்பிராயை சேர்ந்த கௌரி பொன்னையா, இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட பெறுமதியுள்ள இலத்திரனியல் சக்கரவண்டியொன்றை கிளிநொச்சி புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலய அதிபர் கண்ணபிரான் முன்னிலையில் கையளித்துள்ளார். (அ)

# அவசரக்கூட்டம்

கிளிநொச்சி மாவட்ட உதவி ஆசிரியர் சங்கத்தால் கிளிநொச்சியில் ஆசிரிய உதவியாளர்களாக புதிதாக நியமனம் பெற்றவர்களுக்கான முக்கிய கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 9மணிக்கு கிளி நொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கிளிநொச்சி மாவட் டத்தில் ஆசிரிய உதவியாளர்களாக நியமனம் பெற்ற அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கிளி நொச்சி மாவட்ட உதவி ஆசிரியர் சங்கத்தலைவர் அறிவித்துள்ளார். (அ-2)

# மாந்தை கிழக்கு பி.செ.பிரிவில் மத்தியஸ்தர் சபை ஆரம்பம்

முதன்முறையாக மாந்தை கிழக்கு பிரதேச செயலகப் பிரிவில் மத்தியஸ்தர் சபை நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜாவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதற்கமைய முல்லைத்தீவு மாவட்டத்தில் மூன்றாவது மத்தியஸ்தர் சபையாக நேற்று முன்தினம் மாந்தை கிழக்கில் மத்தியஸ்தர் சபை முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜாவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இதன் போது நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா கூறுகையில், இம் மத்தியஸ்தர் சபை ஆரம்பிக்கப்பட்டதன் மூலம் மேடுபள்ளங்களையும் போக்குவரத்து நெருக்கடிகளையும் வறுமையையும் மீறி சிறு குற்றங்களுக்காக நீதிமன்றத்தை நாடவேண்டிய தேவை பெருமளவு குறைந்துள்ளதுடன் அப் பிரதேசத்திலே சிறுகுற்றங்களுக்கு தீர்வு காணக் கூடிய வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பிரதேச மக்களின் இன்னல்களையும் களைந்து அவர்களுடைய பிரச்சினைகளை சமாதான முறையில் தீர்த்து வைக்க வேண்டியதன் அவசியத்தை நீதிபதி எடுத்துரைத்தார்.

இந்நிகழ்வில் உதவி அரச அதிபர் பிருந்தாகரன் , சட்ட உதவி ஆணைக்குழுவின் சட்டத்தரணிகள், மாங்குளம், மல்லாவி பொலிஸ் உத்தியோகத்தர்களும் பங்குபற்றி இருந்தனர்.

16 மத்தியஸ்தர் சபை உறுப்பினர்களுக்கு நியமனக்கடிதங்களையும் மத்தியஸ்தர் சபை கைநூலையும் அவர் வழங்கினார். (அ-2)

உங்களுக்குத் தேவையான காணிகள் வீடுகளை வாங்கவும் விற்கவும் முதன் முதலாக வட பகுதியில் உதயமாகின்றது.



றியல் எஸ்ரேற்
Real Estate

தொடர்புகளுக்கு:-021 567 1543

இல. 50, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் (பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்திக்கும் நீராவியடி பிள்ளையார் கோவிலுக்கும் இடையில்) எனும் முகவரியில்

(சி-6356)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணன்கள் அடித்துக்கொள்ள நடுவில் நசுங்கும் கனிமொழி

முரசொலி நாளிதழ் ஆண்டு தோறும் பொங்கல் தினத்தன்று மலர் ஒன்றை வெளியிடும். அதில் இடம்பெற்ற கட்டுரைகள், கவிதைகளை தினந்தோறும் முரசொலியில் வெளியிட்டு வருகிறார்கள். அதில் இடம்பெற்ற கவிதைதான் 2 ஆம் திகதி முரசொலியில் வெளியிடப் பட்டது. அன்றைய தினம்தான் கனிமொழி திடீரென மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் என்பதால், அந்தக் கவிதை முக்கியத்துவம் பெறுகிறது!


ஸ்டாலின், கனிமொழி

## காங்கிரஸுடன் கூட்டணி – கனிமொழி

“ஊருக்குள் காட்டு யானைகள் வந்து செல்வதை மையமாக வைத்து இந்தக் கவிதையை கனிமொழி எழுதியிருக்கிறார். யானைகள் கூட்டமாக நடந்து வருகின்றன. அதற்கு அதனுடைய பழைய பாதைகள் தெரியும் என்பதால், அந்த வழியைக் கண்டுபிடித்து வருகின்றன. பழைய பாதைகளில் இப்போது புதிய கட்டடங்கள் எழுந்துவிட்டன. யானைகள் தங்கள் குடியிருப்புகள் வழியாக வருவதைப் பார்த்து மனிதர்கள் கல்லெறிந்து வீசுகிறார்கள். இதனால் யானைகள் பயந்துபோகின்றன. கற்கால மனிதர்களைப்போல யானைகளைத் தாக்குகிறார்கள். காயம்பட்ட யானைகள் கையில் கிடைத்ததை வைத்து சிக்கிய மனிதர்களைத் தூக்கி வீசுகின்றன. கண்ணீர், ஒப்பாரி, ஓலம், பயம், தற்காப்பு, அச்சம், இருப்பு, வாழ்வு ஆகியவை மாறிமாறி ஏற்படுகிறது. ஒருபக்கம் வன் விலங்குகளின் அட்டகாசமும் இன்னொரு பக்கம் காட்டுப் பகுதியின் ஆக்கிரமிப்பும் இருக்க, நியாயம் மட்டும் மௌனமாக உட்கார்ந்து இருக்கிறது என்று முடிகிறது அந்தக் கவிதை”

**“கவிதைக்குள் கட்சி அரசியல் வருகிறதா?”**

“கட்சிக்காரர்கள் எழுதினால் கட்சி அரசியல் வராதா? ஸ்டாலினும் அழகிரியும் போட்டுக்கொள்ளும் சண்டையை பாரும்! இரண்டிலும் கலந்துகொள்ளாத கனிமொழியின் மௌனத்தைக் காணும்!”


“இப்படி எல்லாமா முடிச்சு போடுவார்கள்?”

“அண்ணன்கள் இருவருக்கு மத்தியில் சிக்கிய தங்கையாக சமீப காலமாக கனிமொழி வலம்வருகிறார். அழகிரிக்கு சமீபத்தில் பிறந்தநாள் வந்தது. அன்று கனிமொழி வாழ்த்துச் சொல்லவில்லை. அதனால் அழகிரிக்கு கோபம். தனக்குப் பிடிக்காதவர்கள் அனைவரும் கனிமொழி பக்கமாகப் போகிறார்கள் என்ற கோபத்தால் ஸ்டாலினுக்கும் இவரைப் பிடிக்கவில்லை. இப்படி ஒரு நெருக்கடியில் சிக்கிவிட்டார் கனிமொழி. அவர் நடத்திய பொங்கல் விழாவுக்கு வருவதை ஸ்டாலின் தவிர்த்தார். ‘அழகிரி அண்ணன் மீது கோபம் இருந்தால், என்னை ஏன் புறக்கணிக்க வேண்டும்?’ என்று கலங்கினார் கனிமொழி. ஆனாலும், ஸ்டாலின் இறங்கி வரவில்லை. இந்த நிலையில்தான், கூட்டணிப் பேச்சுவார்த்தைகள் நடக்க ஆரம்பித்தன. ‘ஏராளமான பிரச்சினைகள் இருப்பதால் காங்கிரஸ் கூட்டணியே சரியானது’ என்பது கனிமொழியின் வாதம். “காங்கிரஸுடன் கூட்டணியே வேண்டாம்’ என்பது ஸ்டாலின் முடிவு. சில நாட்களுக்கு முன்பு, இது சம்பந்தமாக கருணாநிதிக்கும் கனிமொழிக்கும் பேச்சுவார்த்தை நடந்துள்ளது. ‘விஜயகாந்த் நம்முடன் வரமாட்டார். அதற்காக தனித்து நிற்பதும் சரியல்ல. காங்கிரஸுடன் கூட்டணி அமைத்தால்தான் வெற்றிபெற முடியும். டில்லியில் செல்வாக்கை நிலைநிறுத்த வேண்டுமானால், கணிசமான எம்.பி.க்கள செல்ல வேண்டும். அதற்கு இந்த கூட்டணிதான் சரியானது’ என்று கனிமொழி சொன்னதாகவும், ‘காங்கிரஸ கூட்டணி வேண்டாம் என்பதில் ஸ்டாலின் உறுதியாக இருக்கிறாரே’ என்று கருணாநிதி பதில் அளித்ததாகவும் கூறப்படுகிறது. ‘ஏற்கனவே கஷ்டத்தை அனுப விச்சாச்சு. மறுபடியும் நான் கஷ்டத்தை அனுபவிக்க வைக்கும் முடிவை எடுத்துடாதீர்கள்’ என்று கனிமொழி கோபமாகச் சொன்னதாகச் சொல்கிறார்கள்.”

“ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மரண தண்டனையை நோக்கி இருக்கும் மூவர் விவகாரத்தில் மறைமுகமாக காங்கிரஸ் ஏதாவது ஒரு வகையில் கருணை காட்டினால், அது தமிழக வாக்காளர்கள் மத்தியில் எடுபடுமா என்று மத்திய உளவுத்துறை தனியாக கருத்து கேட்பு படலம் மும்முரமாக நடந்து வருகிறது. காங்கிரஸுடன் கைவசம் இருப்பது இந்த ஒரே ஒரு துருப்புச்சீட்டுதான். இதைத்தவிர, புதிய அஸ்திரங்களை அரசியல் ரீதியாக கையில் எடுத்துள்ளார்கள். 2ஜி ஊழல் வழக்கு விவகாரத்தில் கனிமொழியை நோக்கி முதலாவது அஸ்திரம் பாய்ச்சப்படும் என்று தெரிகிறது. இதெல்லாமே இயற்கையாக நடந்ததாகவே வெளியில் பார்ப்பவர்களுக்குத் தெரியும். காங்கிரஸின் ரூபத்தை தெரிந்த விபரமான அரசியல் பிரமுகர்களுக்குத்தான் நிஜம் தெரியும்.”

**“2ஜிதான் பழைய விவகாரம் ஆச்சே?”**

“சமீபத்தில் சொலிசிட்டர் ஜெனரல் மோகன் பராசரன் சொன்ன ஒரு விடயத்தை உற்றுக் கவனியும். 2ஜி வழக்கில் குற்றம்சாட்டப்பட்டுள்ள கனிமொழி உள்ளிட்டோர் மீது பண மோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் மத்திய அமுலாக்கத் துறையினர் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யலாம் என்று மத்திய சட்டத்துறைக்கு கருத்து தெரிவித்துள்ளார் அவர். ஆக, நிதி அமைச்சர் ப.சிதம்பரத்தின் கன்ட்ரோலில் வரும் மத்திய அமுலாக்கத் துறை யினர் சார்பில் புதிய வழக்கு ஒன்று கனிமொழி மீது போடப் படலாம். ‘கலைஞர் டி.வி. நிறுவனத்துக்கு 200 கோடி ரூபாய் அளவுக்கு இலஞ்சம் கொடுத்து 2ஜி அலைக்கற்றை உரிமங்களைத் தனியார் நிறுவனங்கள் பெற்றன’ என்பதுதான் குற்றச்சாட்டு. கலைஞர் டி.வி-யின் ஆரம்ப கால இயக்குநர்களில் ஒருவராக இருந்தார் கனிமொழி. மத்திய அமுலாக்கத் துறையினர் மத்திய சட்டத் துறையினரிடம் இதே விவகாரத்தில் கருத்து கேட்கப்போக, ‘கனிமொழி மீது பண மோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யலாம்’ என்று சொல்லி விட்டாராம்!”



“கனிமொழி உள்ளிட்டவர்கள் பண மோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவுசெய்ய எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்கள். 2ஜி அலைக்கற்றை உரிமம் வழங்கியது 2008 ஆம் ஆண்டு.

## காங்கிரஸ் வேண்டாம் – ஸ்டாலின்

ஆனால், பண மோசடி தடுப்புச் சட்டத்தில் 2009 ஆம் ஆண்டு திருத்தம் செய்யப் பட்டது. எனவே, இந்த சட்டத்தின் கீழ் கனிமொழி உள்ளிட்டவர்கள் மீது வழக்குப்போட முடியாது என்றனர். ஆனால், மோகன் பராசரனோ, ‘கலைஞர் தொலைக்காட்சிக்கும் சில தனியார் நிறுவனங்களுக்கும இடையே 2008 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையில் பண பரிவர்த்தனை நடந்துள்ளது. இதற்கு இடையில்தான் பண மோசடி தடுப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்பட்டது. எனவே, அந்த சட்டத்தின் கீழ் கனிமொழி மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யலாம்” என்று சொல்லி விட்டாராம். எனவே எந்த நேரமும் அது பூதாகாரம் ஆகும்.

2ஜி அலைக்கற்றை வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட கனிமொழி உள்ளிட்டவர்கள் தங்கள் மீதான குற்றச்சாட்டுகளை இரத்து செய்யக் கோரி உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருக்கிறார்கள். இதற்கு சி.பி.ஐ., மத்திய அமுலாக்கத் துறை இரண்டும் பதில் அளிக்க உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இங்கும் மத்திய அமுலாக்கத் துறை கனிமொழி மீது கடுமையான குற்றச்சாட்டுகளை அடுக்கி உச்ச நீதிமன்றத்துக்கு பதில் தயார் செய்துவருகிறதாம். இதையெல்லாம் தி.மு.க. தரப்பு உன்னிப்பாக கவனித்து வருகிறது. ‘முதலில், அடிக்கிறார்போல அடிப்பதும் பின்பு ஒன்றும்தெரியாத மாதிரி நடிப்பதும் காங்கிரஸுக்கு புதியதல்ல’ என்று ஒரு சம்பவத்தை உதாரணம் சொல்கிறார்கள்!”

“ காங்கிரஸ் கூட்டணியை விட்டு தி.மு.க. விலகிய இரண்டாவது நாளே வெளிநாட்டு சொகுசு கார் வாங்கியதில் இறக்குமதி வரி மோசடி என்று சொல்லி மு.க.ஸ்டாலின் வீட்டுக்கு சி.பி.ஐ. போனது. அடுத்த சில மணிநேரங்களில், சோனியா காந்தி, பிரதமர் மன்மோகன் சிங், மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் ஆகியோர், எங்களுக்குத் தெரியாமல் நடந்துவிட்டது என்று மன்னிப்பு கேட்டனர். அப்படிப் பட்டவர்கள் காங்கிரஸ்காரர்கள்!”

“கடந்த ஆண்டு அழகிரி பிறந்தநாள் விழாவில் கலந்துகொண்ட அவருடைய நிழலான பொட்டு சுரேஷ், மறுநாள் (ஜன-31) படுகொலை செய்யப் பட்டார். கொலை நடந்து ஒரு வருடமாகிவிட்டது. அந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 18 பேரில 11 பேர் சரணடைந்தனர். ஆறு பேரை கைது செய்தது பொலிஸ். ஆனால், அந்த வழக்கின் முக்கிய குற்றவாளியான அட்டாக் பாண்டியை பொலிஸாரால் இன்னும நெருங்க முடியவில்லை.”

“8 ஆம் திகதிக்குப் பின்பு தன்னுடைய அரசியல் நிலைப்பாட்டை அறிவிக்கப்போவதாகச் சொல்லியிருக்கிறார் அழகிரி. தன் பிறந்த நாள் விழாவில் கலந்துகொண்ட சென்னையைச் சேர்ந்த பாஸ்கரன் என்பவருக்கு பட்டாசு வெடித்து காலில் காயம் ஏற்பட்டுள்ளதை அறிந்து சென்னை சென்று பார்த்து வந்தார் அழகிரி. மதுரையில் இருந்து காரில் வந்து, காரிலேயே போய்விட்டார். சென்னையில் யாரையும் சந்திக்கவில்லையாம்!”

“பார்த்தால் மீண்டும் ரணகளம் ஆகி இருக்குமே?”

**ஜூனியர் விகடன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

712

## காணிக்கை


அவந்திபுரத்தை ஆண்டு வந்த சூரசேனருக்கு வஜ்ரசேனன், விக்கிரமசேனன் என்று இரு புதல்வர்கள் இருந்தனர்.




முதுமைப் பருவததை அடைந்ததும், தன் மூத்த மகன வஜ்ர சேனனுக்கு ஆட்சிப் பொறுப்பைக் கொடுத்துவிட்டு, தன் மனைவியுடன் வானப்பிரஸ்தம் மேற்கொண்டு, அடர்ந்த காட்டினில் வாசம செய்தார்.தன் தந்தையைப் போலவே வஜ்ர சேனனும் செங்கோல் ஆட்சி புரிந்து குடிமக்களின் நலனைப் பேணி வந்தான். அவனுடன் குரு குலத்தில் பயின்ற மணிதரன் என்ற பக்கத்து நாட்டு இளவரசனுடன் சிறுவயது முதல் நெருங்கிய நட்பு ஏற்பட்டது.

வஜ்ரசேனன் ஆட்சிப்பொறுப்பில் அமர்ந்ததும், மணிதரன் தன் தங்கையை வஜ்ரசேனனுக்குத் தருமணம் செய்து வைத்து, தானும் அவந்திபுரத்திலேயே தங்கிவிட்டான். அவந்திபுரத்தைத் தனதாக்கிக் கொள்ளத் திட்டமிட்ட மணிதரன் சிறிது சிறிதாக வஜ்ரசேனனிடமிருந்து அதிகாரங்களைக் கைப் பற்றிக் கொண்டான். இசை, சற்பம், நடனம் என்று அருங்கலைகளில் தன் நேரத்தை செலவிட்ட வஜ்ரசேனன் நாளடைவில் ஆட்சியின் முழு அதிகாரத்தையும் மணிதரனிடமே ஒப்படைத்து விட்டான்.

மணிதரனின் ஆதிக்கத்தில் அவந்திபுரத்தில் அராஜகம் தாண்டவம ஆடியது. மணிதரனின் கொடுங் கோலாட்சியைக் கண்டு கலக்கமுறற பிரமுகர்கள் பலமுறை வஜ்ரசேனனை சந்தித்து உண்மை நிலவரத்தைத் தெரிவிக்க முயன்றபோது, மணிதரன் அவர்களைத் தடுத்துவிட்டான. அதனால் இளையவன் விக்கிரம சேனனிடம் சென்று பிரமுகர்கள் நாட்டின் நிலைமையை எடுத்துக் கூறி, அவனை மன்னனாகப் பொறுப்பேற்கச் சொனனார்கள்.



ஆனால் தன் அண்ணன் ஆட்சி செய்வதுதான் சரியென்றும், மறுத்துவிட்டான். வேறு வழியினறி,



அவர்கள் காட்டினை அடைந்து பெரியவரான சூரசேனரை சந்தித்து முறையிட்டனர்.

அனைத்தையும் கேட்ட பிறகு சூரசேனர், "ஒருமுறை ஆட்சிப் பொறுப்பை என் மூத்த மகனிடம் ஒப்படைத்துவிட்டு ராஜ்யத்தை விட்டு வெளியேறிய பிறகு....... ....

(தொடரும்)

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

02.2014
07

➢1238 - மங்கோலியர்கள் ரஷ்யாவின் விளாடிமிர் நகரைத் தீயிட்டுக் கொளுத்தினர்.

➢1807 - நெப்போலியனின் பிரெஞ்சுப் படைகள் ரஷ்யா, மற்றும் புரூசியாப் படைகளின் மீது போலந்தில் தாக்குதலைத் தொடங்கினர்.

➢1812 - மிசூரி மாநிலத்தில் நியூ மாட்ரிட் என்ற இடத்தில் பெரும் நிலநடுக்கம் தாக்கியது.

➢1904 - மேரிலாந்தில் பால்ட்டிமோர் என்ற இடத்தில் பரவிய தீயினால் 1,500 கட்டடங்கள் 30 மணி நேரத்தில் தீக்கிரையாகின.

➢1914 - சார்லி சாப்ளினின் முதல் திரைப்படம் முனை Auto Races at Venice வெளியானது.

➢1962 - கியூபாவுடனான ஏற்றுமதி, மற்றும் இறக்குமதி தடைகளை ஐக்கிய அமெரிக்கா கொண்டு வந்தது.

➢1971 - சுவிட்சர்லாந்தில் பெண்களுக்கு வாக்குரிமை கிடைத்தது.

➢1974 - ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து கிரனாடா விடுதலை பெற்றது.

➢1977 - சோவியத் ஒன்றியம் சோயுஸ் 24 விண்கலத்தை இரண்டு விண்வெளி வீரர்களுடன் விண்ணுக்கு ஏவியது.

➢1979 - புளூட்டோ நெப்டியூனின் சுற்றுப் பாதைக்குள் நுழைந்தது.

➢1986 - எயிட்டியில் 28 ஆண்டுகள் குடும்ப ஆட்சி நடத்திய ஜனாதிபதி ஜீன்-குளோட் டுவாலியர் கரிபியன் நாட்டிலிருந்து வெளியேறினார்.

➢1990 - சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு தனி ஆதிக்கத்தை கைவிட இணங்கியது.

➢1991 - எயிட்டியின் முதலாவது மாக்களாட்சித் தலைவராக ஜீன்-பேட்ரண்ட் ஆர்ட்டிஸ்டே பதவியேற்றார்.

➢1991 - ஐரிஷ் குடியரசு இராணுவம் லண்டனில் 10 டவுனிங் வீதியில் அமைச்சரவைக் கூட்டம் இடம்பெற்றபோது அங்கு குண்டுத் தாக்குதலை நடத்தியது.

➢1992 - ஐரோப்பிய ஒன்றியம் அமைப்பதற்கான மாஸ்ட்ரிக்ட் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது.

➢1999 - உலகத்தமிழிணைய மாநாடு சென்னையில் ஆரம்பமானது.

### பிறப்புகள்

➢1812 - சார்ள்ஸ் டிக்கன்ஸ், ஆங்கில நாவலாசிரியர் (இ. 1870)

➢1902 - **தேவநேயப் பாவாணர், தமிழறிஞர் (இ. 1981)**

➢1905 - ஊல்ஃப் வொன் இயூலர், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1983)

### இறப்புகள்

➢1919 - ஹென்றி யூலன், யாழ்ப்பாண ஆயர்.

➢1937 - எலிஹூ ரூட், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1845)

### தேவநேயப் பாவாணர்



தேவநேயப் பாவாணர் 1902 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி பிறந்தார். இவர் மிகச்சிறந்த தமிழறிஞரும், சொல்லாராய்ச்சி வல்லுநருமாவார். இவர் 40க்கும் மேலான மொழிகளின் சொல்லியல்புகளைக் கற்று மிக அரிய சிறப்புடன் சொல்லாராய்ச்சிகள் செய்துள்ளார். மறைமலை அடிகளார் வழியில் நின்று தனித்தமிழ் இயக்கத்திற்கு அடிமரமாய் ஆழ்வேராய் இருந்து சிறப்பாக உழைத்தார். இவருடைய ஒப்பரிய தமிழறிவும் பன்மொழியியல் அறிவும் கருதி, சிறப்பாக **மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர்** என்று அழைக்கப்பட்டார்.

தமிழ் உலக மொழிகளில் மூத்ததும் மிகத்தொன்மையான காலத்திலேயே செம்மையான மொழியாக வடிவம் பெற்றது எனவும் திராவிடத்திற்குத் தாயாகவும் ஆரியத்திற்கு மூலமாகவும் விளங்கிய மொழியென வாதிட்டவர். கிரேக்கம், இலத்தீன், சமஸ்கிருதம் உள்ளிட்டவைகளுக்குத் தன் சொற்கள் பலவற்றை அளித்தது என்று நிறுவியவர் பாவாணர் ஆவார். தமிழின் வேர்ச்சொல் வளத்தையும் செழுமையையும் சுட்டிக்காட்டி, அதன் வளர்ச்சிக்கான வழியையும் அவரின் நூல்களின் வழி உலகிற்கு எடுத்து இயம்பினார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்



தாணிப்பாறை(தோணிப்பாறை) மூலிகை வனம்

சதுரகிரி மலையின் நுழைவாயில் தான் இந்த தாணிப்பாறை. ஆதியில் தாணிப்பாறைக்குச் செல்வதற்கு, மலையடி வாரத்தின் நான்கு பக்கங்களிலிருந்தும் நான்கு மலைப்பாதைகள் இருந்தனவாம். தெற்குவழியே சென்றால், தாணிப்பாறை கருப்பண்ண சாமியையும், வடக்கு வழியே சென்றால், முனீசுவர ஐயனையும் மேற்கு வழியே சென்றால், பண்டாரத்தையநாரையும் கிழக்கு வழியே சென்றால் பச்சை மலையப்பனாகிய மலையாண்டி சாமியையும் தரிசனம் செய்துவிட்டு மலையேறலாம் என்று வாகடங்கள் தெரிவிக்கின்றன. ஆனால் இப்பொழுது இரண்டு பாதைகள் மட்டுமே சதுரகிரி மலைக்குச் செல்வதற்கு உபயோகத்திலுள்ளன. ஒன்று சாப்டூர் வழியே செல்லும் மலைப் பாதை. இது செங்குத்தான ஏற்ற இறக்கங்களை உடையது. இரண்டாவது, தாணிப்பாறை வழியே செல்லும் மலைப் பாதை. இது சற்று சமதளமுடைய ஏற்ற இறக்கங்களை உடையது. அதனால் சதுரகிரி செல்லும் பக்தர்கள் யாவரும் இந்தத் தாணிப்பாறை வழியையே பயன்படுத்துகின்றனர். சதுரகிரி செல்லும் பாதை நான்கையும் சித்தர்களின் பாடல்கள் மூலம் அறியலாம். அவற்றில் தோணிப் பாறை வழியான பாதைதான் இலகுவானது எனவும் அதில் குறிப்பிடப் பட்டுள்ளது.

தோணிப்பாறை மலையிலிருந்து வடக்கு முகமாய்ப் போகிற பாதை வழியே வந்தால், அம்பு விடும் தூரத்தில் கறுப்பண்ண சாமி கோயில் இருக்கிறது. அதைக் கடந்து கூப்பிடு தூரம் சென்றால் படிவெட்டிப் பாறையைக் காணலாம். அதையும் கடந்து அம்பு விடு தூரம் வந்தால், ஒரு காட்டாறுவருகிறது. அதற்கு வடக்குப் பக்கம்போகிற வழியில் அரை நாழிகை, பயணம் செய்தால். கவுண்டின்னிய ஆறு வருகிறது. அந்த ஆற்றுக்கு மேற்பக்கத்தில் பத்தடி தூரத்தில் இருக்கிற அத்தி ஊத்துக்கு வடக்குப் பக்கத்தில் அத்திரி மகரிஷி யாகம் செய்த பாறையும் அதன் மேற்பக்கத்தில் அவருடைய ஆசிரமமும் இருக்கிறதுஎன்பது கோரக்கர் காட்டும் வழித்தடம்.

அனைத்துச் சித்தர்களும் காட்டும் வழித்தடம் கோரக்கர் குகை வழியே ஒன்றாகவே இருப்பதால், அதுவரையில் அவர்கள் காட்டும் வழியையே பின்தொடரலாம்.



படிவெட்டுப்பாறை(சங்கிலிப்பாறை)

சித்தர்கள் வாழ்ந்த காலத்துக்கும் தற்போதைய நிலைக்கும் வழித் தடங்கள் சிலமாறிவிட்டாலும் பெரும்பாலான இடங்கள் அவர்கள் சொல்லிய வழியிலேயே காணும்படி இருப்பது தான் பக்தர்களுக்கு ஆறுதல் அளிக்கும் விடயமாகும்.

சித்தர் பாடல்களில் தோணிப்பாறையென்று குறிப்பிடப்படும் இடம்தான், இன்று தாணிப்பாறை என்று அழைக்கப்படுகிறது. *மூலிகைவனம் தாணிப்பாறை* என்ற வளைவுடன் கூடிய நுழைவாயில் சதுரகிரி யாத்திரை செல்லும் பக்தர்களை அன்புடன் வரவேற்கிறது. வளைவு முடிவில் இடது பக்கம் ஓலைச்சுவடி எழுதும் ஒரு சித்தரும் வலது பக்கம் மருந்து இடிக்கும் நிலையில் ஒரு சித்தரும் சிலைவடிவில் பக்தர்களை வரவேற்கின்றனர். மூலிகை வனம் நம்மை வரவேற்க உள்ளே அடியெடுத்து வைத்தவுடனேயே இந்த வனத்திலே எந்த வகையான மூலிகைகளெல்லாம் இருக்கின்றன என்ற வனத்துறையின் அறிவிப்புப் பலகை நம் கண்ணில் படுகிறது.

**ஆன்மீகம் 26**




# பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர்




38

பக்கத்தில் இருந்த ராமதாஸிடம் "அந்த ஆளு என்ன, குறையுதுன்னு பார்க்கறாரா? இல்லே கள்ள நோட்டா, நல்லநோட்டான்னு பார்க்கறாரா? இனிமே எனக்குப் பின்னணி பாட வேற ஆளைப் பாருங்க" என்று சொல்லிவிட்டு போய்விட்டார் செம்மல். இணைந்த கைகள் கதையை தன் மனதுக்குப் பிடித்தபடி ஐந்து முறை எழுதச் சொன்னார். அடிமைப் பெண் படத்தில் நிறைவேறாதா ஒரு ஆசை. வெகுநாள் அவர் மனதில் பதிந்த ஆசை. தந்தையும் மகனுமாக நடிக்க வேண்டும் என்பது. சிவகாமியின் சபதத்தை (கதை உரிமையை) வாங்கிய நோக்கமே மகேந்திர பல்லவன், நரசிம்ம பல்லவனாகத் தாம் நடிக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் தான். அந்த ஆவலை இதில் பூர்த்தி செய்யச் சொன்னார்.



உலகம் சுற்றும் வாலிபன்

இன்னொரு நிகழ்ச்சி. இணைந்த கைகள் கதை ஆயிரத்தில் ஓர் இரவு நாயகன் ஹரரூன் அல் ரஷீதின் காலத்தில் நடந்ததாக கற்பனை. பின்னால் செய்த மாற்றமே தந்தை மகன் கதை. அந்த மன்னன் பாத்திரத்தை வேண்டாம் என்று, பெரியவர் எம்.ஜி. சக்கரபாணி சொல்லிவிட்டு, கதா நாயகனை சிறுவயதில் வளர்க்கு மூசா, என்றொரு ஏழை பாத்திரப் படைப்பை ஏற்றார்.

"அந்த வேஷம், கிழிந்த உடை, அழுக்கடைந்த முகமாக இருக்குமே. காவியப் புகழ் ஹரரூனாக நடிக்கலாமே" என்று கூறியதற்குப் பெரியவர் சொன்னார்: "என் தம்பியின் பிள்ளையை வளர்க்க நிஜ வாழ்க்கையில் கொடுத்து வைக்கலே. படத்தில், நடிப்பிலாவது வளர்த்து மன ஆறுதல் பெறலாமே என்று தான் மூசா கரெக்டரை கேட்கறேன்" என்றார் கண்கலங்க. அந்த கரெக்டரை வலுப்படுத்தினேன். விதியில்லை. கதை படமாக வருவதற்கு...

சூர்ய தரிசனம்

ஒவ்வொரு நாட்டுக்கும் ஒவ்வொரு விஷயத்தில் பெருமை உண்டு!

ஜப்பான் நாட்டு மக்கள், உலகில் எங்கள் நாடுதான் கிழக்கே முதலில் சூரியனைப் பார்க்கிறது என்று பெருமைப்பட்டுக் கொள்வார்கள். அவர்களது தேயசியக் கொடியின் சின்னமே சூரியன் தான். அந்த சூரியன் அவர்களது கொடிச்சின்னமாக இருப்பதுக்கு உதயம் மட்டும் காரணமல்ல; அதன் கடமை, காலம் தவறாத அதன் ஓட்டம் இரண்டும் காரணம். ஜப்பான் நாட்டின் உயிரோட்டமே காலம் தவறாமைதான். தாமதம் என்பதை அவர்கள் தங்கள் சாவு மணி எனக் கூறுவர்.

அங்கு ஒவ்வொரு ரயில் நிலையத்திலும் ஒரு அறிவிப்பு இருக்கும். 'ரயில் 5 நிமிடம் தாமதமாக வந்தால், பயணச் சீட்டுப் பணத்தில் பாதியையும், 10 நிமிடங்கள் தாமதமாக வந்தால் முழுக் கட்டணப் பணமும் பயணிகளுக்கு, அரசு, அபராதமாகத் திருப்பிக் கொடுக்கும்' என்ற அறிவிப்பு! இதுரை அதற்கு வாய்ப்பு நிகழவில்லை!

எக்ஸ்போ 70 பற்றிய விபரம் தெரிந்துவர சித்ரா கிருஸ்ணசாமி போய்விட்டார்.

"செண்டிமெண்ட் அதிகம் வேண்டாம். அண்ணன் தம்பி கதை. டுயட் ரோல் தேவை. என்டர்டைன் மெண்டுக்காக ஒரு ப்டம். விறுவிறுப்பு முக்கியம். ஒவ்வொரு *சீனும்* புதுமையாக இருக்கணும். ஜப்பானில் மட்டுமல்ல் ஹாங்காங், பேங்காக், சிங்கப்பூர் நாடுகளில் கதை நடக்குது. ஆரம்பம் இந்தியா..." என்று சொன்னார் செம்மல்.

"சரி ஜப்பானைத் தவிர வேறு நாடுகளுக்குப் போயிருக்கிறேன். சித்ரா சார் வந்ததும் எக்ஸ்போ சம்பந்தமா சேர்த்துக் கொடுத்துடுறேன். மத்ததையும் எழுதிக்கிறேன்" என்று சொன்னேன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர் விடயத்தில் ஜெயாவின் தளர்வுப்போக்கு இலங்கைக்கு கிடைத்த பாரிய வெற்றியாகும்

## மீன்பிடி அமைச்சர் ராஜித தெரிவிப்பு

**வடபகுதி மீனவர்களின் உறுதியான நிலைப்பாட்டின் காரணமாக தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் விடாப்பிடியான போக்கிலும் தமிழக மீனவர்களின் செயற்பாடுகளிலும் பாரிய தளர்வுப் போக்கு ஏற்பட்டிருப்பதாக கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.**



இலங்கை, இந்திய மீனவர்களுக் கிடையிலான பேச்சுவார்த்தை குறித்து விளக்கமளிக்கும் ஊடகவிய லாளர் மாநாடு அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இங்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர், தமிழக மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடிப்பது முற்றாக நிற்கும் என்பதில் எதுவித சந்தேகமும் கிடையாது. இதன் மூலம் இலங்கைக்கு வருடாந்தம் 95 பில்லியன் ரூபா வருமானத்தை ஈட்டமுடியும் இதுவரை நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் இலங்கைக்கு மிகவும் சாதகமாக அமைந்துள்ளது.

இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தை இம் மாத இறுதியில் இலங்கையில் நடைபெறும்.

இரு நாட்டு மீனவ பிரதிநிதிகளுக் கிடையிலான பேச்சுவார்த்தையில் எட்டப்பட்ட இணக்கப்பாடுகளை தமிழக முதல்வர் ஜெயலலிதா தமிழக சட்டசபையில் வெளிப்படையாக ஏற்றுக்கொண்டுள்ளார்.

மீனவர் விவகாரத்தில் இவ்வளவு காலமும் கடும்போக்கை கடைப் பிடித்து வந்த அவரின் இந்த தளர்வுப் போக்கு இலங்கைக்குக் கிடைத்த பாரிய வெற்றியாகும்.

தமிழக ஊடகங்களும் அண்மைக் காலமாக இலங்கை தரப்பு நியாயத்தை ஆதரித்து செய்திகளை வெளியிட்டு வருகின்றன. இந்த மனமாற்றம் எதிர்காலத்தில் மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையைத் தோற்றுவித்துள்ளது.

இரு தரப்புக்கிடையிலான பேச்சுவார்த்தைக்குப் பின்னர் இதுவரை 87 தமிழக மீனவர்கள் 17 படகுகளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆனால் இலங்கை மீனவர்கள் எவரும் இந்தியாவில் கைதாகவில்லை.

எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் ஒரு மாத காலத்திற்கு இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடிக்காது இருப்பதற்கு தமிழக மீனவர்கள் இணங்கியுள்ளனர்.

இந்தக் காலப்பகுதியிலும் எமது கடற்பரப்புக்குள் அத்து மீறும் இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்படுவார்கள்.

எதிர்காலத்தில் இலங்கைக் கடற்பரப்பில் தமிழக மீனவர்கள் சட்டவிரோதமாக மீன்பிடிப்பது முற்றுப் பெறும் என நம்புகிறோம். அதே நேரம் இந்தியாவுக்குள் எமது மீனவர்கள் சட்டவிரோதமாக நுழைந்தால் அவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

இலங்கை கடற்பரப்பில் தாங்கள் பாரம்பரியமாக மீன்பிடித்து வருவதால் தங்களுக்குக் குறிப்பிட்ட காலம் மீன்பிடிக்க அவகாசம் வழங்குமாறு தமிழக மீனவர் தரப்பில் பல தடவைகள் கோரப்பட்டன. தமிழக முதல்வரும் 3 தடவைகள் தமிழக தரப்பு மீனவர்களைத் தொடர்பு கொண்டு இந்த விடயத்தில் அழுத்தம் கொடுத்தார்.

இருந்தாலும் வடபகுதி மீனவர்கள் விடாப்பிடியாக இருந்து அந்தக் கோரிக்கையை நிராகரித்தனர். யுத்தத்திற்கு முன் நாட்டின் மொத்த மீன் உற்பத்தியில் '43 வீதம் வடபகுதியிலிருந்தே கிடைத்தது. அது 7 வீதமாக பின்னர் குறைவடைந்தது.

தற்பொழுது மீன் உற்பத்தி 18 வீதமாக உயர்வடைந்துள்ளது. வடக்கில் மீன்பிடித்துறையை முன்னேற்றாது நாட்டின் மீன்பிடித்துறையை மேம்படுத்த முடியாது. வடபகுதி மீனவர்கள் மத்திய அரசாங்கத்துடனேயே உள்ளனர். இந்த மீனவர் விவகாரத்தில் வடமாகாண சபையின் நிலைப்பாடு எவ்வாறு உள்ளது என்பதில் தெளிவில்லை என்றார். (அ-2)

## நிஸ்கோ கிளைக் குழு அமைக்கப்படும்

வலி தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் நிஸ்கோ கிளைக்குழு அமைக்கப் படவுள்ளது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கூட்டுறவு வங்கியான நிஸ்கோ மூலம் சேமிக்க முடிவதுடன் சுய தொழிற் கடனையும் பெற்றுக்கொள்ள முடியும்.

இவ் நிஸ்கோ அமைப்பில் 15 வயது முதல் 35 வயது வரையான இளைஞர், யுவதிகள் இணைய முடியும்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத் திற்குட்பட்ட பகுதியில் இவ் நிஸ்கோ கிளைக்குழுவானது நாளை சனிக்கிழமை அமைக்கப்படவுள்ளது.

இதற்கான கூட்டமொன்று அன்றைய தினம் மாலை 3 மணிக்குசண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாகவும் ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகள் தவறாது கலந்து கொள்ளுமாறும் பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தர் ஆர்.நவசக்தியா கேட்டுள்ளார். (அ-2-23)

# பாலித எம்.பிக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற குழுக் கூட்டத்தின் போது கலகம் விளைவிக்கும் வகையில் செயற்பட்ட களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பாலித தெவரப்பெருமவிற்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகள் முன் எடுக்கப்படவுள்ளதாக எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கட்சியின் நாடாளுமன்ற குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்ற போது அமைதியற்ற முறையில் செயற்பட்டமை மற்றும் எதிர்க்கட்சி தலைவரை தாக்க முற்பட்டமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலே ஒழுக்காற்று விசாரணைகள் முன் எடுக்கப்படவுள்ளன.

இதுபற்றி நாடாளுமன்ற உறுப்பினர் பாலித்த தெவரப்பெரும கருத்து தெரிவிக்கையில்,

மேல் மாகாண சபைத் தேர்தலின் போது வேட்பாளராக நிறுத்தப்பட்ட ஒருவர் தொடர்பில் அதிருப்தி ஏற்பட்டுள்ளது.

குறித்த வேட்பாளர் ஒரு பாலியல வன்புணர்வு சம்பவத்துடன் தொடர்பு கொண்டுள்ளார் என நான் வாதாடினேன்.

எனினும் அவருக்கு வேட்புரிமை வழங்கப்பட்ட நிலையில் எனது மகனை தேர்தல் போட்டியில் இருந்து விலக்கிக்கொள்ள தீர்மானித்துள்ளேன் என்றார். (அ-2)




மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் இரண்டாம் கட்டமாக வேலணை பிரதேச செயலகத்தினால் தெரிவு செய்யப்பட்ட 40 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்ட போது...

# இலங்கைக்கு எதிராக பொருளாதாரத்தடை

## கோருகிறது கனேடியத் தமிழர் பேரவை

தமிழருக்கு எதிரான 66 ஆண்டு கால அடக்குமுறை நீங்கி அமைதியான அரசியற் தீர்வொன்று உருவாக்கப்பட வேண்டியது அவசியமாகும். ஜெனீவாவில் சர்வதேசத்தின் உறுதியான முடிவுகளே இதற்கு வழிகோலும் எனத் தெரிவித்தார் கனேடியத் தமிழர் பேரவையின் தேசியப் பேச்சாளர்.

இலங்கை 66ஆவது சுதந்திர நாளை கொண்டாடும் இந்த வேளை இலங்கையிலும் மற்றும் உலகெங்கும் பரந்து வாழும் தமிழர் அமைதியையும் நீதியையும் சம உரிமையையும் நிலை நாட்ட சர்வதேசத்தின் ஆதரவை வேண்டி நிற்கின்றனர்.

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராகப் போர்க் குற்றங்கள், மனித நேயத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் தமிழின அழிப்புத் தொடர்பாகச் சர்வதேச சுயாதீன விசாரணை மேற்கொள்ளும் பயனுள்ள தீர்மாணம் ஒன்று நிறைவேற்றப்படும் என நம்புகின்றனர்.

இலங்கை சுதந்திரம் பெற்ற காலம் முதலே தமிழருக்கெதிரான திட்டமிட்ட இன அழிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. நிலம், கல்வி, வேலைவாய்ப்பு என அனைத்து வகைகளிலும் இலங்கையில் தமிழர் திட்டமிட்டுப் புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர்.

பொதுநலவாய நாடுகள் மாநாட்டின் போது கனடாவின் உறுதியான நிலைப்பாடு தொடர்பாகக் கனேடிய அரசுக்குக் கனேடியத்தமிழர் பேரவை நன்றி தெரிவிக்கிறது. இத்தோடு நின்று விடாமல் இலங்கைக்கு எதிராக பொருளா தார மற்றும் அரசு முறைத்தடைகளை விதிக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம்.

கனேடிய அரசின்பக்கச்சார்பற்ற குழுவின் 2009ஆம் ஆண்டு அறிக்கையில் இலங்கை ஒரு சுயாதீன விசாரணையை மேற்கொள்ளத் தவறுமி.த்து இத்தடைகளை விதிக்குமாறு பரிந்துரை செய்திருந்தது. (அ-2)

## 95 இலட்சம் ரூபா பெறுமதியான ரின்மீன்கள் மீட்கப்பட்டுள்ளன

காலாவதியான 95 இலட்சம் ரூபா பெறுமதியான ரின் மீன்கள் உட்பட பல்வேறு பொருட்களை நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை கைப்பற்றியுள்ளது.

இந்த காலாவதியான ரின் மீன்கள் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் மாவட்ட பொறுப்பாளர் ரஞ்சித் வீரவர்தன தெரிவித்துள்ளார்.

நீர்கொழும்பு, தலாதூவ வீதியில் அமைந்துள்ள "ஜிம்மி இன்டர்நெசனல்" என்ற தனியார் நிறுவனத்தில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்ததாகவும், தற்போது அந்த நிறுவனத்திற்கு சீல் வைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இதன் போது சீனாவிலிருந்து குறைந்த விலையில் இறக்குமதி செய்யப்பட்ட காலாவதியான 30 ஆயிரம் ரின் மீன்கள், 10 ஆயிரம் கிரீன் பீஸ் ரின்கள் 5 ஆயிரம் தானிய ரின்கள் மற்றும் 20 இலட்சம் ரூபா பெறுமதியான லேசர் இயந்திரம், பிளாஸ்டிக் டின்னர் கலன் உட்பட இயந்திரங்கள் பல கைப்பற்றப்பட்டுள்ளன.

காலாவதியான டின்களில் உள்ள திகதிகளையும் விபரங்கள்ளையும் அழித்துவிட்டு, லேசர் இயந்திரம் மூலமாக புதிய திகதிக்ளை பதித்து கொழும்பிலுள்ள மொத்த விற்பனை நிலையங்கள் மூலமாக நாடெங்கும் இவற்றை விநியோகித்துள்ளனர்.

இதனையடுத்து, நிறுவனத்தின் உரிமையாளரும் களஞ்சிய சாலை பொறுப்பாளரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றார். (அ-2)

# பெயர்ப்பலகைகளில் தமிழ்ப் பிழைகள்; மன்னிப்பு கோரினார் அமைச்சர் வாசு

(கொழும்பு)

**இலங்கையில் இனங்களுக்கு இடையில் நல்லுறவை ஏற்படுத்தவும் அரச கரும மொழி நடைமுறைப்படுத்தலுக்காகவும் தனியான அமைச்சொன்று இயங்குகின்றது. அதுதவிர அரச கரும மொழிகள் ஆணைக்குழு, அரச கரும மொழிகள் திணைக்களம் மற்றும் பல செயற்றிட்டங்களும் மொழிக்கொள்கை அமுலாக்கலுக்காக செயற்படுகின்றன.**

மும்மொழிக் கொள்கைக்காக 10 ஆண்டு நிகழ்ச்சித் திட்டமொன்றை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் 2 ஆண்டுகளுக்கு முன்னர் அரசு தொடங்கியது.

இந்த மும்மொழிக் கொள்கையின் நோக்கம் பற்றி தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டுக்கான அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவிடம் தமிழோசை வினவியது. இதற்கு பதிலளித்த அவர்,

ஆங்கில மொழி மூலம் மக்களிடையே ஆங்கிலத் திறமைகளை வளர்ப்பதும், சிங்கள- தமிழ் மொழி பெயர்ப்புகள் மூலம் இனங்களுக்கு இடையில் தேசிய ஒற்றுமையை ஏற்படுத்துவதும் மும்மொழி நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமாகும்.

இலங்கையில் பிரதான இரண்டு மொழிகளான சிங்களமும் தமிழும் அரசியலமைப்பின்படி அரசகரும மொழிகள். ஆங்கில மொழி இணைப்பு மொழி என்ற நிலையிலுள்ளது.

இணைப்பு மொழியான ஆங்கில மொழியையும் அரசியலமைப்பு ரீதியாக அல்லாமல்- நடைமுறை ரீதியில் அரசகரும மொழி என்ற அந்தஸ்துக்கு அரசாங்கம் உயர்த்தியிருக்கிறது.

நாட்டின் சகல அரச நிறுவன கட்டடங்களிலும் பெயர்ப் பலகைகளும் ஆவணங்களும் மூன்று மொழிகளிலும் அமைய வேண்டும் என்பது தான் மும்மொழி நிகழ்ச்சித் திட்டத்தின் முதற்கட்ட பணி.

ஆனால், அரசின் மொழிக்கொள்கை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் தமிழ்பேசும் மக்கள் விரக்தியடைந்துள்ளதாக சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

பொதுப் போக்குவரத்து வாகனங்கள், அரச கட்டடங்கள் உள்ளிட்ட பொது இடங்களில் தமிழ் எழுத்துக்கள் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு வருவதாகவும் எழுத்து மற்றும் அர்த்தப் பிழைகளுடன பிரசுரிக்கப்பட்டு வருவதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

தமிழ்மொழி இன்னும் மாற்றாந்தாய் மனப்பான்மையுடனேயே அரச நிறுவனங்களில் நடத்தப்பட்டு வருவதாக அரசின் மொழி அமுலாக்கங்கள் பற்றி முன்னைய காலங்களில் பல்வேறு பரிந்துரைகளை முன்வைத்தவர்களில் ஒருவரான எஸ். பாலகிருஷ்ணன் தமிழோசையிடம் கூறினார்.

அரச பேருந்தொன்றில் **கர்ப்பிணித் தாய்மார்களுக்காக** என்று சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் சரியாக எழுதப்பட்டிருக்க தமிழில் மட்டும் **கர்ப்பிணி நாய் மார் களுக்காக** என்று தவறாக எழுதப்பட்டிருக்கின்றமை பற்றி உள்ளூர் ஊடகங்கள் சுட்டிக்காட்டியமை தொடர்பில் தமிழோசை அமைச்சரிடம் வினவியது.

அவ்வாறு தவறுகள் நடந்துள்ள இடங்களை நாங்கள் கேள்விப்பட்டு திருத்தியுள்ளோம். நாங்கள் தான் அவற்றுக்குப் பொறுப்பேற்கிறோம் என்றார் அமைச்சர்.


பேருந்து டிப்போ ஒன்றை எடுத்துக்கொண்டால், அங்கு தமிழ் எழுத்துக்களை தமிழ் தெரிந்தவர்களிடமிருந்து எழுதிக் கொள்கின்றனர். ஆனால் தமிழ் எழுத்துக்களைப் புரியாத ஒருவர் தான் அவற்றை வரைந்து வர்ணம் பூசுவார். அதனால் தான தவறு நடக்கிறது. நாடாளுமன்ற பெயர்ப் பலகையிலும் இவ்வாறான தமிழ்ப்பிழை நடந்திருக்கிறது. அந்தப் பிழையை அண்மையில் திருத்தியிருக்கிறோம" என்றார்.

இவ்வாறான எழுத்துப் பிழைகள் மூலம் ஒரு சமூகமே அவமரியாதை செய்யப்படுவதாக சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுவதை தெரிவித்தபோது- அந்தத் தவறுகளுக்கான பொறுப்பை ஏற்ற அமைச்சர், தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர்களிடமும் தமிழ் பேசுபவர்களிடமும் மன்னிப்புக் கோருகின்றேன் என்று பிபிசியிடம் கூறினார்.

எழுத்துப் பிழைகள் பற்றிய முறைப்பாடுகளை தமக்கு அறிவிக்குமாறு பத்திரிகைகளில் அறிவித்தல்கள் விடப்படும். ஆனால் அரசாங்கம் உண்மையில் மும்மொழிக் கொள்கையினூடாக நாட்டில் இன நல்லுறவை ஏற்படுத்த வேண்டுமானால், இதுவரை பெரும்பாலும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் நடந்துவரும் மொழி நடைமுறைப்படுத்தல் செயற்பாடுகளுக்கு அரசாங்கம் வரவுசெலவுத் திட்டத்திலேயே போதிய நிதி ஒதுக்க வேண்டும் என்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

1956 ஆம் ஆண்டு தனிச் சிங்கள சட்டம் கொண்டுவரப்பட்டமையை, இலங்கையில் உள்நாட்டு மோதல்கள் ஏற்படுவதற்கான முக்கிய காரணங்களில் ஒன்றாக அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

1987 ஆம் ஆண்டில் இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின் பின்னர் வந்த அரசியலமைப்புத் திருத்தத்தின் படியே, தமிழ் மொழிக்கும் அரசகரும மொழி அந்தஸ்து கிடைத்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)



யாழ். கொக்குவில் கிருஷ்ணா அறநெறிப் பாடசாலை நடத்திய பட்டிப் பொங்கல் விழா அண்மையில் கொக்குவில் கிழக்கு கோணாவில் ஒழுங்கையிலுள்ள யாழ். விசனில் இடம்பெற்றது. இவ்விழாவின் போது வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட பத்து மாணவ, மாணவியருக்கு யாழ். விசனால் துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் மாணவன் ஒருவன் துவிச்சக்கர வண்டியை பெற்றுக் கொள்வதைப் படத்தில் காணலாம். (படம்:- மானிப்பாய் செய்தியாளர்)

## பேஸ்புக்கில் வந்தது புகைப்படம்; மாணவி சுருக்கிட்டு தற்கொலை

பேஸ்புக் எனப்படும் முகப்புத்தகத்தில் வெளியிடப்பட்ட புகைப்படம் ஒன்றினால் 16 வயது பாடசாலை மாணவி தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இந்தச் சம்பவம் குருநாகலில் பதிவாகியுள்ளது.

இது குறித்து பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் வெளியிட்டுள்ள தகவல்படி மேலும் தெரியவருவதாவது,

குருநாகல் பாடசாலை ஒன்றில் 11 ஆம் தரத்தில் கல்வி பயிலும் மாணவி தொடர்பான புகைப்படம் ஒன்று முகப்புத்தகத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த மாணவி ஒரு ஆணுடன் நிற்பது போன்றே அப்புகைப்படம் வெளியிடப்பட்டுள்ளது. குறித்த ஆண் மாணவியின் காதலன் என சந்தேகிக்கப்படுகிறது.

இந்தப் புகைப்படத்தை அவதானித்த பாடசாலை அதிபர் மாணவியை அழைத்து கடுமையாக திட்டி எச்சரித்துள்ளதுடன் பெற்றோரை பாடசாலைக்கு அழைத்து வரும்படி பணித்துள்ளார்.

பாடசாலை முடிந்து வீடு சென்ற மாணவி நேற்று முன்தினம் பெற்றோரிடம் இவ்விடயத்தை கூறாமல் தனது அறைக்குள் சென்று சேலை ஒன்றின் உதவியில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்படும் என கூறப்படுகிறது. (அ-2)

## இலங்கை கடற்படையின் செயல் பேச்சுக்களுக்கு முட்டுக்கட்டை

### அமைச்சர் ஜி.கே.வாசன்

(கொழும்பு)

இலங்கை கடற்படையினரின் செயல் இருநாட்டு மீனவர்கள் பேச்சுவார்த்தைக்கும் குந்தகம் ஏற்படுத்துவதாக உள்ளதென மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் ஜி.கே.வாசன் தெரிவித்துள்ளார்.

சென்னை வந்த அவர் சென்னை விமான நிலையத்தில் நிருபர்களுக்கு பேட்டி அளித்த போது மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவ்தொடர்ந்துகூறுகையில்,

இந்திய-இலங்கை மீனவர்கள் இடையே சுமுகமான தீர்வு காண முதற்கட்ட பேச்சுவார்த்தை முடிந்துள்ளது. விரைவில் இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை நடக்கவுள்ளது.

இந்நிலையில் தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்தி அவர்களது படகுகளை கைப்பற்றுவது, கைது செய்வது ஆகியவை பேச்சுவார்த்தைக்கு குந்தகம் விளைவிக்கும் வகையிலுள்ளது.

இலங்கை கடற்படையினரின் செயலை தடுத்து நிறுத்தவேண்டும் என இலங்கை அரசுக்கு மத்திய அரசு வலியுறுத்தி வருகிறது. இந்த பிரச்சினையில் மத்திய அரசு தலையிட வேண்டுமென அவர் கூறியுள்ளார். (அ-2)

## இந்தியக்கொடி எரிப்பு வழக்கில் கைதான நபர் விடுதலையானார்

(கொழும்பு)

2008 தொடக்கம் 2009 ஆம் ஆண்டுகளில், இலங்கை அரசுடன் இணைந்து தமிழீழத்தில் தமிழினப் படுகொலையில் ஈடுபட்ட இந்திய அரசைக் கண்டிக்கும் வகையில், இந்தியக் கொடியை எரித்துக் கைதான, தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி சென்னை மாநகரச் செயலாளர் தோழர் நாத்திகன் கேசவன் என்ற தமிழ்ச்சமரன் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டார்.

தமிழீழ இனப்படுகொலைப் போரில் ஈடுபட்ட இந்திய அரசைக் கண்டிக்கும் வகையில், தமிழகத் தலைநகர் சென்னை அண்ணாசாலையில் 07.01.2009 ஆம் ஆண்டு காலை, தனியாகச் சென்று இந்திய அரசுக் கொடியை எரித்துப் போராட்டத்தில் ஈடுபட்ட நபரை பொலிஸார் கைது செய்தனர்.

அவர் மீது, தேசியக் கொடி அவமதிக்கப்படுவதை தடுக்கும் சட்டம் 1971 பிரிவு 2 மற்றும் இ.த.ச. பிரிவு 188 இன் படி வழக்குப் பதிவு செய்த பொலிஸார், அவரை நீதிமன்றத்தின் முன் நிறுத்தி சென்னை புழல் நடுவண் சிறையில் அடைத்தனர்.

வழக்கு விசாரணையின் போது, தமிழீழ இனப்படுகொலையில் இந்தியாவின் பங்கைக் கண்டிக்கும் வகையில் இந்தியக் கொடியை தாமே எரித்ததாக நீதிபதியிடம் குறித்த நபர் தெரிவித்தார். இதனையடுத்து அவர் சிறையில் இருந்த காலத்தை தண்டனையாக கருத்தில் கொண்டு நீதிமன்றம் அவரை விடுதலை செய்வதாக அறிவித்தது. (அ-2)

## போகம்பரை சிறைக் கைதிகள் தும்பரை சிறைக்கு மாற்றம்

போகம்பரை சிறைச்சாலையிலுள்ள அனைத்து கைதிகளும் இன்றைய தினம் அங்கிருந்து தும்பரை சிறைச்சாலைக்கு மாற்றப்பட வுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

போகம்பரை சிறைச்சாலையில் இருந்து ஆயிரத்து 200 கைதிகள் வேறு சிறைச்சாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தற்போது எஞ்சியுள்ள சுமார் 500 கைதிகளும் தும்பரை சிறைச்சாலைக்கு மாற்றப்படவுள்ளதாகவும் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் சந்ரரத்ன பல்லேகம கூறியுள்ளார்.

எதிர்வரும் 10ஆம் திகதி சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீரவினால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடம் இந்த சிறைச்சாலை அரசாங்கத் திடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் சந்ரரத்ன பல்லேகம மேலும் சுட்டிக்காட்டினார்.

இதன்படி 10ஆம் திகதிக்குப் பின்னர் பொதுமக்கள் இந்த சிறைச்சாலையை பார்வையிடவும் அனுமதிக்கப்படுவர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஸ்ரீதலதாமாளிகை அமைந்துள்ள புனித பூமிக்கருகில் சிறைச்சாலையும் தூக்குமேடையும் அமைந்திருப்பது உசிதமல்ல என ஜனாதிபதி பலமுறை சுட்டிக்காட்டியதையடுத்தே, இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சியில் இல்லாத அழகை, முகத்தில் மூடியாக அணிந்துகொள்ளத் துடிக்கும் அரசு!

ஜெனிவாவில் முதல் முறையாக அமெரிக்கா, தீர்மானம் கொண்டு வரப்போவது உறுதியானதும், 2012 பெப்ரவரியில் இராணுவத் தலைமையகம் ஒரு அறிக்கையை வெளியிட்டது. போரின் இறுதிக் கட்டத்தில் இராணுவத்தினர் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தி, போர்க்குற்றங்களை இழைத்தனரா என்பது குறித்தும், சனல் 4 வெளியிட்ட ஆவணப் படம் குறித்தும், விசாரணை நடத்த மேஜர் ஜெனரல் கிரிசாந்த டி சில்வா தலைமையில் 5 பேர் கொண்ட இராணுவ விசாரணை நீதிமன்றத்தை ஜனவரி மாத தொடக்கத்திலேயே இராணுவத் தளபதி நியமித்துவிட்டதாக அந்த அறிவிப்பில் கூறப்பட்டிருந்தது. இந்த இராணுவ விசாரணை நீதிமன்றத்தின் முதற்கட்ட அறிக்கை கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் ? இரண்டாவது தீர்மானம் ஜெனிவாவில் கொண்டு வரப்படுவதற்கு முன்னதாக, இராணுவத் தளபதியாக இருந்த லெப்.ஜெனரல் ஜெகத் ஜெயசூரியவிடம் கையளிக்கப் பட்டது. அதில், பொதுமக்களை இலக்கு வைத்து படையினர் தாக்குதல்களை நடத்தியதாக கூறப்படும் குற்றச்சாட்டுகள் முழுப்பொய் என்றும், புலிகள் ஆட்டிலறிகளை பயிற்சியின்றி கையாண்டதாலும், தரமற்ற குண்டுகளைப் பயன்படுத்தியதாலும் தான், பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்பட்டது என்றும், பொதுமக்களுக்கு சேதமின்றி போரை நடத்துவதில் படையினர் உறுதியாக இருந்தனர் என்றும் கூறப்பட்டிருந்தது. ஆனால், சனல் 4 ஆவணப்படம் குறித்து விசாரணை நடந்து கொண்டிருப்பதாகவும், அது பற்றிய அறிக்கை அடுத்த கட்டமாக சமர்ப்பிக்கப்படும் என்றும் இராணுவ நீதிமன்றம் கூறியிருந்தது. முதலாவது குற்றச்சாட்டில் இருந்து இராணுவத்தை விடுவித்த இராணுவ நீதிமன்றம், இரண்டாவது குற்றச்சாட்டுக் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருவதாகக் கூறியது. அந்த அறிக்கை இதுவரை கையளிக்கப்பட வில்லை.

இராணுவ நீதிமன்றத்தின் முதல்கட்ட அறிக்கையை அரசாங்கம் பகிரங்கப்படுத்த வேண்டும் என்று ஐ.நா மனிதஉரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை பலமுறை கோரியிருந்தார். ஆனால், அது இராணுவ இரகசியம் என்றும், அதை வெளிப்படுத்த இராணுவச் சட்டம் இடமளிக்காது என்றும் கூறிவிட்டது அரசாங்கம்.

இராணுவம் மீதான குற்றச்சாட்டை இராணுவத்தைக் கொண்டே விசாரித்தால், இந்த நிலை தான் ஏற்படும் என்பதற்கு இதுமட்டும் உதாரணமல்ல. இந்திய இராணுவமும் கூட அதற்கு விதிவிலக்கல்ல. ஜம்மு- காஷ்மீர் மாநிலத்தில் உள்ள பத்ரிபால் என்ற இடத்தில், 13 ஆண்டுகளுக்கு முன் 5 அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்ட விவகாரத்தை விசாரித்த இந்திய இராணுவ நீதிமன்றமும் கடந்த வாரம் இதுபோன்ற தீர்ப்பையே வழங்கியது. 'குற்றச்சாட்டுகளைச் சந்தேகமின்றி நிரூபிக்கப் போதிய ஆதாரங்கள் இல்லை' என்று கூறி மூடிமறைத்தது இந்திய இராணுவ நீதிமன்றம்.

'வெளிநாட்டைச் சேர்ந்த தீவிரவாதிகள் இவர்கள், சட்டிசிங்புராவில் சீக்கியர்களைப் கொன்றவர்கள், காட்டில் பதுங்கியிருந்த அவர்களை உளவுத் தகவல் அடிப்படையில் சுற்றி வளைத்தோம், அப்போது நேரிட்ட மோதலில் கொன்றோம்? என்று ஆரம்பத்தில் இந்திய இராணுவம் கூறியது. கொல்லப்பட்டவர்களின் உறவினர்களுடன் நடத்திய தொடர் போராட்டத்தின் விளைவாக, சிபிஐ, விசாரணையில் இறங்கிய போது, உண்மை வெளியே வரத் தொடங்கியது. இந்திய ராணுவத்தின் 7வது ராஷ்ட்ரிய ரைபிள்ஸ் படைப்பிரிவைச் சேர்ந்த ஒரு பிரிகேடியர், ஒரு லெப்.கேணல், இரு மேஜர்கள், ஒரு சுபேதார் ஆகியோர் மீதான குற்றச்சாட்டை விசாரித்தது சிபிஐ. இதன் முடிவில், 'கொல்லப்பட்ட வர்கள் அனைவரும் அப்பாவிகள், தமது படைப்பிரிவின் செயற்பாட்டை இராணுவத் தலைமை பாராட்ட வேண்டும் என்பதற்காக இவர்களைத் திட்டமிட்டே படுகொலை செய்து விட்டு, மோதலில் அவர்கள் இறந்து விட்டதாக ராஷ்ட்ரீய ரைபிள்ஸ் பிரிவு நம்ப வைக்க முயன்றிருக்கிறது' என்ற உண்மையையும் சிபிஐ அம்பலப்படுத்தியது. இதன் பின்னரும். இராணுவத் தலைமையகம் குறிப்பிட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. சிவில் நீதிமன்ற விசாரணைக்கு ஒத்துழைக்க மறுத்தது. குற்றம்சாட்டப் பட்ட இராணுவ அதிகாரிகள் சிபிஐ விசாரணை அறிக்கையை ஏற்க மறுத்தனர்.

'காஷ்மீரில் உள்ள ஆயுதப் படைகள் சிறப்பு அதிகாரச் சட்டப்படி, தமக்கு எதிராக வழக்கு தொடுக்க முன் அனுமதி பெற்றிருக்க வேண்டும் என்றும், எந்த அனுமதியும் பெறப்படாததால், இந்த விசாரணை அறிக்கையை ரத்து செய்ய வேண்டும்' என்றும் அவர்கள் வாதிட்டனர். இதன் பின்னர், இராணுவச் சட்டப்படி இராணுவ நீதிமன்றமே இந்த வழக்கை விசாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த விசாரணைகளின் முடிவில் தான், குற்றச்சாட்டுகளை நிரூபிக்க ஆதாரங்கள் இல்லை என்று இராணுவ நீதிமனறம் கூறியிருக்கிறது. இந்த தீர்ப்பை, இந்திய இராணுவத்தை தவிர வேறு எவராலும் ஜீரணிக்க முடியவில்லை. ஊடகங்களில் கடுமையான கருத்துகள் வெளியிடப்படுகின்றன. இலங்கை இராணுவம் மட்டுமல்ல, இந்திய இராணுவமும் கூட, தமக்கெதிரான குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் போது, அதை ஏற்றுக் கொள்ளும் பக்குவத்தில் இல்லை. இந்தநிலையில் தான், சர்வதேச போர்க்குற்ற விசாரணை என்று வந்தால், இந்தியாவும் தப்பிக்க முடியாது என்று பலரும் எச்சரிக்கின்றனர்.



வொசிங்டனில் றொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்துக்கு அளித்திருந்த பேட்டியில் இலங்கை ஜனாதிபதியின் செயலர், 'சர்வதேச விசாரணை என்று வந்தால், 1980இல் இருந்து நடந்த சம்பவங்களை விசாரிக்க வேண்டி ஏற்படும்' என்றும், 'இராணுவத்தினர், முன்னாள் புலிகள், இந்திய அமைதிப்படையினர் குறித்தும் விசாரணை நடத்தப்படும் நிலை உருவாகும்' என்றும் கூறியுள்ளார். இலங்கையில் இந்திய அமைதிப்படையினர் நிலைகொண்டிருந்த காலத்தில், பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர். அந்தப் படுகொலைகள் குறித்து எந்த முறையான விசாரணைகளும் நடத்தப்படவும் இல்லை, அதற்குப் பொறுப்பானவர்கள் தண்டிக்கப்படவும் இல்லை. இப்போதைய நிலையில், இத்தகைய குற்றச்சாட்டை இந்தியா ஏற்றுக் கொள்ளப் போவதுமில்லை.

இலங்கையில் நடந்த போர்க் குற்றங்கள் குறித்து சர்வதேச விசாரணை நடத்தப்பட்டால், இந்திய அமைதிப்படையினரின் கொலைகள் குறித்தும் விசாரிக்கப்படும் என்ற அரசாங்கத்தின் மிரட்டல், ஜெனிவாவில் சர்வதேச விசாரணைக்கு ஒத்துழைக்கக் கூடாது என்பதை மையப்படுத்தியதாகவே உள்ளது. எவ்வாறாயினும், உள்ளக விசாரணை என்பது இலங்கையில் நடந்த போர்க்குற்றங்களை ஒரு போதும் வெளிச்சத்துக்குக் கொண்டு வரப் போவதில்லை என்பது உறுதி. அந்த விசாரணையை, இலங்கை இராணுவம் நடத்தினாலும் சரி, நீதித்துறை நடத்தினாலும் சரி பெரிய வித்தியாசத்தை எதிர்பார்க்க முடியாது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம், வெலிக்கடைச் சிறையில் 27 கைதிகள் கொல்லப்பட்ட சம்பவம் குறித்து ஆராய நீதிபதி நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் அறிக்கை இப்போது மூடி மறைக்கப்படுகிறது. அங்கு நடந்த உண்மைகள் வெளியானால், படையினரின் குணவியல்பை அம்பலப்படுத்தி விடும் என்பதால், அவை அறிக்கையில் மூடிமறைக்கப்பட்டுள்ளதாகத் தகவல். விசாரணைக்குழுவின் அறிக்கையில், படையினரால் கைதிகள் கொல்லப் படவில்லை என்றும், கைதிகள் தமக்கிடையே மோதிக்கொண்டு மரணமானதாகவும் கூறப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. ஆனால், அந்த அறிக்கையை மூடிமறைத்து வருகிறது அரசாங்கம். ஏனென்றால், அந்த அறிக்கை வெளியானால், உள்நாட்டு விசாரணையின் சுயாதீனத்தன்மை குறித்து சர்வதேச அளவில் கேள்வி எழுப்பப்படும். அதனால், ஜெனீவா கூட்டத்தொடர் முடியும் வரை கூட அது வெளியிடப்படாமல் மறைக்கப் படலாம். அதைவிட, இராணுவ விசாரணை நீதிமன்றத்தின் அறிக்கையில், இழப்புகளின்றி போரை நடத்திய படையினரால், பொதுமக்களில்ஒருவர்கூட கொல்லப்படவில்லை என்று கூறப்பட்டிருந்தது.

புலிகள் ஆட்டிலறிகளை சுடத் தெரியாமல் சுட்டதால் பொதுமக்களுக்கு பாதிப்பு எற்பட்டதாகவும் அதில கூறப்பட்டது. **ஆனால், வொசிங்டனில் றொய்ட்டரிடம் கருத்து வெளியிட்ட லலித் வீரதுங்க, விடுதலைப் புலிகள், பொதுமக்களை மனித கேடயங்களாகப் பயன்படுத்தியதால், மோதலில் அகப்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்று ஒப்புக்கொண்டுள்ளார். இது இராணுவ நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு முரணானது. இப்படி முன்னுக்குப் பின் முரணான, தகவல்களை வெளிப்படுத்தி அரசாங்கமே உள்நாட்டு விசாரணையின் நம்பகத்தை சிதைத்து விட்டது. இந்தநிலையில், சர்வதேச் விசாரணைக் கோரிக்கை ஜெனிவாவில் வலுப்பெற்று வருவது ஒன்றும் ஆச்சரியமானதல்ல. ஆனால், அத்தகைய விசாரணையை உறுதிப்படுத்தும் பிரேரணை வருமா என்பது தான் கேள்வி.**

-சுபத்ரா-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சர்வதேச விசாரணை ஆணைக்குழுவை ஐ. நா. அமைக்கும் சாத்தியம் உண்டு

## மனிதவுரிமை ஆணையாளர் தெரிவிப்பு

**ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக தீர்மானங்கள் நிறைவேற்றினாலும் ரோம் நியதிச் சட்டத்தை ஏற்று கையொப்பமிடாததனால் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் விசாரணைகளை நேரடியாக மேற்கொள்ளும் சாத்தியமில்லை என்று இலங்கை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் கலாநிதி பிரதீபா மகா நாம ஹேவா கூறியுள்ளார்.**

கொழும்பில் நடைபெற்ற மனித வுரிமை விழிப்புணர்வு நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

மேற்படி தீர்மானங்கள் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபைக்கு அனுப்பப்படாது விடின் நாட்டுக்கு பாதிப்பு அல்லது கெடுதி ஏற்பட இடமில்லையெனவும் அவர் கூறினார்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் இஸ்ரேலுக்கு எதிராக பல பிரேரணைகள் நிறைவேற்றப்பட்ட போதும் இஸ்ரேலுக்கு எதிராக எதுவும் நடக்கவில்லை.

இது போலவே இந்த பிரேரணை ஐ.நா. பாதுகாப்பு சபைக்கு அனுப்பப்படாதுவிடின் இலங்கைக்கு எதுவும் நடைபெறாது என்றும் அவர் கூறினார்.

இலங்கையானது ரோம் நியதிச் சட்டத்தை ஏற்று கையொப்பமிடவில்லை. இதனால் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் இலங்கைக்கு எதிராக யுத்தக் குற்ற விசாரணைகளை நேரடியாக மேற்கொள்ளும் சாத்தியமில்லை என்றும் அவர் கூறினார்.

ஆயினும், இலங்கைக்கு எதிரான யுத்தக் குற்றச்சாட்டுகளை விசாரிக்க ஒரு சர்வதேச விசாரணை ஆணைக குழுவை அமைக்கும் சாத்தியம் உள்ளதென மகாநாமஹேவா கூறினார்.



எனவே, இலங்கைக்கு இப்படியான தீர்மானம் வருமிடத்து அதனை தோற்கடிக்க நட்பு நாடுகளின் ஆதரவை திரட்ட வேண்டுமென அவர் கூறினார். (அ-2)

# அமெ. இராஜதந்திரிக்கு விசா மறுக்கவில்லை

(கொழும்பு)

அமெரிக்க இராஜதந்திரிக்கு வசா மறுக்கவில்லை என இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.


அமெரிக்காவின் பெண்கள் தொடர்பிலான விசேட பிரதிநிதி கெதரீன் ரஸல் இந்த மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யத் திட்டமிட்டிருந்ததாகவும், விசா மறுக்கப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

எனினும், அமெரிக்க இராஜதந்திரிக்கு விசா மறுக்கப்படவில்லை என இலங்கை வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

கெதரீன் ரஸலுக்கு விசா மறு ப்பதற்கு எவ்வித தேவையும் கிடை யாது என குறிப்பிட்டுள்ளது.

சந்திக்க வேண்டிய சிலரை சந்திக்க முடியாத காரணத்தினால் அவரது பயணத் திகதி திருத்தி அமைக்கப்பட்டதாக தெரிவித்துள்ளது. (அ-2)

# வடமாகாணத்தில் 234 மில்லியன் ரூபா செலவில் கடந்த வருடம் நெல் கொள்வனவு செய்யப்பட்டது



வடக்கில் கடந்த வருடம் 234 மில்லியன் ரூபா நிதிசெலவில் நெல் கொள்வனவு செய்யப்பட்டதாகவும் இதில் வவுனியா மாவட்டத்தில் 150 மில்லியன் ரூபா செலவில் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி வ. மதுமதி தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள், நெல்கொள்வனவாளர்கள் மற்றும் திணைக்கள அதிகாரிகளுக்கிடையிலான யாழ். பொதுநூலகத்தில் அண்மையில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் கடந்த வருடம் நெல்கொள்வனவு நடவடிக்கைகளுக்கு மட்டும் 234 மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளது.

இதில் யாழ். மாவட்டத்தில் 22 மில்லியன் ரூபாவிற்கும் கிளிநொச்சி மாவட்டத்தில் 22 மில்லியன் ரூபாவிற்கும் வவுனியா மாவட்டத்தில் அதிகப்படியாக 150 மில்லியன் ரூபாவிற்கும் முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் தலா 20 மில்லியன் ரூபா செலவிலும் நெல் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் வவுனியா மாவட்டத்தில் வவுனியா வடக்கு, வவுனியா, வவுனியா தெற்கு, செட்டிகுளம் ஆகிய நான்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக நெற்கொள்வனவு மேற்கொள்ளப்பட்டு அதிகளவான இலாபத்தை பெற்றுள்ளனர்.

இதனைவிட மன்னார் மாவட்டத்தில் மாந்தை மேற்கு, மாந்தை வடக்கு, மடு நானாட்டான், மன்னார், மாந்தை தெற்கு, முசலி போன்ற பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாகவும் கடந்த வருடம் நெல் கொள்வனவு மேற் கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை, வடக்கு மாகாண விவசாய அமைச்சரின் பெரு முயற்சியினால் இந்தவருடம் பல நோக்கு கூட்டுறவுச்சங்கங்களின் ஊடாக அதிகளவான நெல்லை கொள்வனவு செய்வதற்கான நிதியை மக்கள் வங்கியூடாக பெற்றுக் கொடுக்க நடவடிக்கைமேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுவரைகாலமும் மாவட்ட அரசாங்க அதிபரின் முற்பணத்திலிருந்து பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் நிதியைப்பெற்று நெல் கொள்வனவு நடவடிக்கையில் ஈடுபட்டுவந்தபோதும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களிடம் நிதி போதாமையாகவுள்ளதாக கூறப்பட்டது.

ஆனால் தற்பொழுது வங்கிக் கடன் வழங்கப்பட்டு நெல் கொள்வனவு நடவடிக்கை ஊக்கப்படுத்தப் பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண விவசாய மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சர் பொ. ஐங்கரநேசன் மற்றும் அந்த அமைச்சின் செயலாளர் உட்பட பலர் பங்கு கொண்டிருந்தனர். (அ-6)

# முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா ஓர் அகம்பாவம் பிடித்த பெண்

## சமித தேரர் தெரிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க ஓர் அகம்பாவம் பிடித்த பெண் என ஓர் பௌத்த பிக்கு குற்றம் சுமத்தியுள்ளார்.

முன்னாள் மாகாணசபை உறுப்பினரான பெத்தேகம சமித தேரர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அக்மீம்மன பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பங்கேற்ற போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

சந்திரிகா தமது குடும்பத்தை அழித்தது மட்டுமன்றி ஜனநாயகத்தையும் சீர்குலைத்துள்ளார்.

சந்திரிகா பொது ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட கனவு காண்கின்றார்.

அவர் நாட்டை ஆட்சி செய்த காலத்தில் மக்களுக்கு இழைத்த துன்பங்களை மக்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு சந்திரிக்கா துரோகம் இழைத்தார்.

ஜனாதிபதியை இழிவுபடுத்த எவருக்கும் அனுமதியளிக்க முடியாது என சமித தேரர் தெரிவித்துள்ளார்.

சமித தேரர் ஆளும் கட்சியின் சார்பில் தென் மாகாணசபைக்கு போட்டியிட உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# மீனவர் பிரச்சினை தொடர்பில் மத்தியரசு அசமந்தப் போக்கு

## பொன்.ராதாகிருஷ்ணன் தெரிவிப்பு

(சென்னை)

இலங்கை கடற்படை தொடர்ந்து தமிழக மீனவர்களை கைது செய்வதும் துன்புறுத்தி வருவதும் மிகுந்த கண்டனத்துக்குரியது. தற்போது 24 மீன்வர்களை கைது செய்திருப்பது கடுமையான கண்டனத்திற்குரியது என பா.ஜனதா மாநில தலைவர் பொன். ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.


இது தொடர்பாக அவர் சென்னையில் நிருபர்களிடம் கூறியதாவது,

இவ் விடயம் தொடர்பில் முதலமைச்சர் ஜெயலலிதா பிரதமருக்கு கடிதமும் எழுதி இருக்கிறார். ஆனால் மத்திய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பிரதமராக நரேந்திர மோடி வந்தால் மட்டுமே மீனவர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு ஏற்படும்.

இலங்கை அரசு பாகிஸ்தானையும், சீனாவையும் நம்புகிறது. இதை இந்திய மத்திய அரசு புரிந்து கொள்ள வேண்டும்.

கூட்டணியை பொறுத்தவரை பா.ம.கவுடன் சுமுகமான பேச்சு வார்த்தை நடந்து வருகிறது. நாளைக்குள் பேச்சுவார்த்தை பூர்த்தியாகும். தே.மு.தி.க.வை பொறுத்தவரை விஜயகாந்த்தான் இனி முடிவை அறிவிக்க வேண்டும். சகல கட்சிகளும் அனைத்து தொகுதிகளிலும் வெற்றி பெற வேண்டும் என்று நினைப்பது இயற்கையானதுதான்.

அதுபோல பிரதமர் வேட்பாளராக நிற்க வேண்டும் என்று [illegible] யும் கட்சி தலைவர்[illegible] இருக்கத்தான் செய்யும்.



தமிழகத்தை பொறுத்தவரை பாராளுமன்ற தேர்தலில் பா.ஜ.க. கூட்டணி முதல்நிலை கூட்டணியாக இருக்கும் .

தற்போது வெளியாகி உள்ள [illegible] என அவர் கூறினார். (அ-2)

# பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களை நியமிப்பதற்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் உள்ள பாடசாலைகளில் நிலவும் ஆங்கில பாட ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு ஒப்பந்த அடிப்படையிலான பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களை சேவையில் இணைப்பதற்காக தகுதி வாய்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுவதாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இதன்பிரகாரம் விண்ணப்ப தகைமையாக,

க.பொ.த. சாதாரண தரத்தில் புதிய பாடத்திட்டமாயின் ஆங்கில பாடத்தில் ஏ தரத்துடனும் பழைய பாடத்திட்டமாயின் ஆங்கில பாடத்தில் டி தரத்துடனுமான சித்தி

அல்லது

க.பொ.த. சாதாரண தரத்தில் புதிய பாடத்திட்டமாயின் ஆங்கில பாடத்தில் பி தரத்துடனும் பழைய பாடத்திட்டமாயின் ஆங்கில பாடத்தில் சி தரத்துடனுமான சித்தியுடன் க.பொ.த. உயர்தர பொது ஆங்கிலத்தில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

ஓய்வு நிலை பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர்கள் க.பொ.த. உயர் தரத்தில் மூன்று பாடங்களில் சித்தி.

க.பொ.த. சாதாரண தரத்தில் அடிப்படைத் தகைமையினை பெற்றிருத்தல் வேண்டும். ஆங்கிலம் கற்பித்தலோடு தொடர்புடைய வேறு ஆங்கில பாட தகைமைகள் மேலதிக தகைமையாக கருதப்படும்.

விண்ணப்பபடிவங்களைவலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும். தகுதியான விண்ணப்பதாரிகள் எழுத்துப் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். (அ-2)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# ஆசிரிய மாணவர்களின் கற்றல் குணவியல்புகள்

ஆசிரிய மாணவர்கள் சுய விமர்சனத்திலும் சுய மதிப்பீட்டிலும் ஆர்வத்துடன் செயற்படுவதை கல்வியியல் ஆய்வுகள் வெளிக்காட்டுகின்றன. ஓர் வளர்ந்த கற்போனிடம் சுய விமர்சனமும் சுய மதிப்பீடும் ஏற்படுத்தப்படும்போது, அவனிடம் சுய நம்பிக்கை (self-reliance), ஆக்கத் திறன் (creativity) மற்றும் மற்றவரைச் சாராது செயற்படும் தன்மை (independent) என்பன விருத்தியாக்கப்படும்.

ஓர் ஆசிரிய கல்வியியலாளர் ஆசிரிய மாணவர்களுக்கு பரிசோதனை ஊடாக கற்பித்தலை மேற்கொள்ளும்போது அவர்களிடம் நேர் மனப்பானமை ஏற்படும் விதத்தில் நடக்க வேண்டும். ஏனெனில் வளர்ந்த கற்போரிடம் நேர் மனப்பான்மையுள்ள போது கற்றல் அர்த்தமுள்ளதாக அமையும். அத்துடன் அவர்களுக்கு கற்பதன் நோக்கங்களையும் தெளிவுபடுத்த வேண்டும். அப்போதுதான் கற்பதன் பயனை அவர்கள் உணர்ந்துகொள்ள முடியும். பரிசோதனை ரீதியான கற்பித்தலை மேற்கொள்ளும் இடத்து, கிடைக்கக்கூடிய தேவையான கற்பித்தற் சாதனங்களை பெற்றுக்கொடுக்க




ஆசிரிய கல்வியியலாளர் முனையவேண்டும். அவ்வாறு தேவையான கற்றல் சாதனங்கள் கிடைக்குமாயின் வளர்ந்த கற்போரைப் பொறுத்தவரை தாமாகவே கற்றுக்கொள்ளும் தன்மை காணப்படும். கற்பித்தலின் போது பகுத்தறிவிற்கும் மனவெழுச்சிக்குமிடையே ஓர் சமநிலையை ஆசிரிய கல்வியியலாளர் ஏற்படுத்த வேண்டும்.

வளர்ந்தோர் கற்றல் துறை தொடர்பாக அவதானம் செலுத்தியவர்களான ரெனன்ற் (Tennant), ஜரிஸ் (Jarris), நொஸ்(Knox), வுறொக்பீல்ட்(Brookfield) போன்றவர்கள்

## சுய நம்பிக்கை (Self-reliance)

வளர்ந்தோர், அனுபவத்தினூடாகக் கற்பதனூடாகப் பின்வரும் குணவியல்புகளை (ஆற்றல்கள் அல்லது திறன்கள்) கொண்டுள்ளனர் என இனங்கண்டுள்ளனர். அவை பின்வருமாறு:

கற்கும் ஆர்வத்தை விருத்தி செய்வதனூடாக சிந்தனையை விருத்திசெய்யும் திறன்.

ஆராய்ச்சியின் அடிப்படையில் அல்லது விசாரணையின் அடிப்படையில் விடைகளை அல்லது தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளத்தக்க வகையிலான வினாக்களை அல்லது பிரச்சினைகளை (உய்த்தறி, தொகுத்தறி நியாயங்களைப் பயன்படுத்தி) உருவாக்கும் ஆற்றல்.

பல்வேறு வகையான வினாக்களிற்கு விடை காண்பதற்குத் தேவையான தரவுகளை இனங்காணும் திறன்.

நம்பகரமானதும், பொருத்தமானதுமான மூலாதாரங்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய மார்க்கங்களை கண்டறியும் ஆற்றல்.


> பரிசோதனை ரீதியான கற்றலில் சுய ஈடுபாட்டுடன் ஈடுபட்டு தாமாகவே பிரச்சினையை தீர்ப்பர்

கண்டறிந்த மார்க்கங்களிலிருந்து தேவையான தரவுகளை சேகரிப்பதற்கு வினைத்திறன்மிகு ஆற்றல்களைக் கண்டறியும் திறன்.

சேகரிக்கப்பட்ட தரவுகளை ஒழுங்கமைப்பதற்கான, பகுப்பாய்வு செய்வதற்கான, மதிப்பீடு செய்வதற்கான ஆற்றல்.

உருவாக்கிய பிரச்சினைகளுக்கு அல்லது வினாக்களிற்குப் பொருத்தமான பதில்களை அல்லது தீர்வுகளை பொதுமைப்படுத்தல், பயன்படுத்துதல், தொடர்புபடுத்துதல் தொடர்பான திறன்.


எனவே ஆசிரிய மாணவர்களின் கற்றல் குணவியல்புகளை தொகுத்து நோக்கின், அவர்கள் வாழ்க்கைக்குத் தேவையான அறிவை அனுபவங்களினூடாக பெற்று சுயாதீனமாக கற்க முயல்கின்றனர். மேலும் பிரச்சினையை மையமாகக் கொண்ட கற்றலை அன்றாட வாழ்க்கையுடன் தொடர்புபடுத்தி உடனுக்குடன் பிரயோகித்துப் பார்த்து அவற்றிற்கு தீர்வுகாண முயல்கினறனர்.



எதையும் ஆராய்ந்தறியும் குணம் காணப்படுவதால், கற்பதற்கு வழிகாட்டியாக செயற்படும் ஆசிரிய கல்வியியலாளருடன் தாமும் இணைந்து பாடத்திட்டமிடலை மேற்கொள்வர். பரிசோதனை ரீதியான கற்றலில் சுய ஈடுபாட்டுடன் ஈடுபட்டு தாமாகவே பிரச்சினையை தீர்க்க முயல்வர். கற்றல் செயற்பாட்டின் பொறுப்பை தாமே எடுத்து, சுய அறிவை விருத்திசெய்யும் கற்றலை, விடயங்களை விளங்கிக் கற்க முயல்கின்றனர். கற்றலில் மற்றையோரை சாராது நேர் மனப்பான்மையுடன் ஈடுபட்டு, அதை சுய விமர்சனம் செய்யவும் சுய மதிப்பீடு செய்யவும் முயல்வர்.

**வளர்ந்த ஆசிரிய மாணவர்களைக் கவரும் கற்றல் பாங்குகள்.**

ஆசிரிய கல்வியியலாளரானவர் கற்பித்தற் செயற்பாடுகளைச் சிறந்த முறையில் ஒழுங்குபடுத்திக் கொள்வதன் மூலம், வகுப்பறையில் உகப்பானதொரு சூழ்நிலையை உருவாக்கிக் கொள்ளவேண்டும். அதாவது சிறந்ததொரு வகுப்பறைக் கவின் நிலையை உருவாக்கவேண்டும். அப்போது தான் ஆசிரிய மாணவர்கள் கற்றலில் கூடியளவு நாட்டம் காட்டுவார்கள். ஆசிரிய கல்வியியலாளர் எவ்வித முன்னாயத்தமுமின்றி வகுப்பறையில் நுழைவாராயின், அவரின் கற்பித்தலை வளர்ந்த கற்போராகிய ஆசிரிய மாணவர்கள் அதிகம் விரும்பமாட்டார்கள். பல்வேறு பாடங்கள் தொடர்பாகவும் அவற்றிற்குப் பொருந்தும் விதத்திலும் வகுப்பறைச் சூழ்நிலையை சிறப்பாக அமைத்துக் கொடுக்கவேண்டியது ஆசிரிய கல்வியியலாளரது கடமையாகும். அதாவது செய்முறையுடன் கூடிய பரிசோதனை ரீதியிலான கற்பித்தலாயின் ஆய்வுகூடத்திலும், கட்புல செவிப்புல சாதனங்களைப் பயன்படுத்தி கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை நிகழ்த்துவதாயின் Audio Video அறையிலும், நாடகம், நாட்டியம், பாட்டு போன்றவற்றிற்கு கலையரங்கிலும் வகுப்புக்களை ஒழுங்கு செய்யவேண்டும். இவ்வாறு பொருத்தமான இடத்தை தெரிவுசெய்து கொடுத்துவிட்டால் ஆசிரிய மாணவர்கள் தாங்களாகவே தங்கள் கற்றல் செயற்பாடுகளை விருப்புடனும் ஆர்வத்துடனும் முன்னெடுத்துச்செல்வர்.




வளர்ந்த கற்போருடன் சிநேகபூர்வமானதும், சுவாரஸ்யமானதும், நியாய பூர்வமானதுமான வகையில் சிறப்பான விதத்தில் ஆசிரிய கல்வியியலாளரானவர் இடைத் தொடர்புகளைப் பேணவேண்டும். வளர்ந்த கற்போரைப் பொறுத்தவரை தமக்கு ஒரு கணிப்பு இருப்பதை அதாவது தான் மதிக்கப்படுவதை விரும்புவர். பாடசாலை மாணவர்களை நடத்துவது போல் இவர்களை நடத்தினால் அவர்கள் கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகளில் தமது பூரண ஒத்துழைப்பை வழங்கமாட்டார்கள். எனவே ஆசிரிய மாணவர்களுக்கும் ஆசிரிய கல்வியியலாளர்களுக்கும் இடையில் நல்லதொரு சுமுகமான இடைத்தொடர்பு அவசியமாகும்.

> சிநேகபூர்வமான, சுவாரசியமான, நியாய பூர்வமானதுமான இடைத் தொடர்புகள்

ஆசிரிய மாணவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் கற்கவிருக்கும் பாடவிடயத்தை அமைப்பாக்கி ஒழுங்குபடுத்திக் கொடுத்தால் அவர்களால் இலகுவாகக் கிரகித்துக்கொள்ள முடியும். இவ்வகைக் கற்பித்தல் முறைமை வளர்ந்த ஆசிரிய மாணவர்களைப் பெரிதும் கவரும். கற்கவேண்டிய விடயத்தை அமைப்பாக்கி ஒழுங்குபடுத்திக் கொடுத்துவிட்டால் அதன்பின் ஆசிரிய கல்வியியலாளரது பணி அங்கு



எளிதாக்கப்படும். வளர்ந்த கற்போர் தாமாகவே கற்கும் சுபாவமுடையவர்களாதலால் கற்றலைத் தமதாக்கிக்கொள்வர்.

வளர்ந்த ஆசிரிய மாணவர்களும் பாடசாலை மாணவர்களைப் போல் தமது செயற்பாடுகளுக்கு உரிய கணிப்பு கிடைக்கும்போது அதாவது பாராட்டுக் கிடைக்கும் போது மிகுந்த மகிழ்ச்சியுடன் கற்றலைத் தொடர்வதை காணமுடியும். எனவே கற்றலை ஊக்குவிப்பதற்காக பொருத்தமான இடங்களில் ஆசிரிய கல்வியியலாளர் தமது வளர்ந்த ஆசிரிய மாணவர்களின் செயற்பாட்டை பாராட்டத் தவறக்கூடாது. தனக்கு பாராட்டு கிடைப்பதை விரும்புவது மனித இயல்பு. இதற்கு வளர்ந்த ஆசிரிய மாணவர்கள் விதிவிலக்கல்ல. உதாரணமாக கல்வியியற் கல்லூரிக்கு பயன்படும் விதத்தில் ஓர் மாணவன் ஒரு செயற்றிட்டத்தை செய்வானாயின், அதனை கல்லூரியின் பீடாதிபதிக்குத் தெரியப்படுத்தி கல்லூரி ஒன்றுகூடல் நிகழ்வில் அச்செயலை பாராட்டச் செய்யவேண்டியது ஆசிரிய கல்வியியலாளரது கடமையாகும்.

> தேடிக் கற்கும் பழக்கம், பிரச்சினையை தீர்க்கும் திறன் என்பவற்றை வளர்க்கக்கூடிய கற்பித்தல் முறை

ஓர் ஆசிரிய மாணவனிடமுள்ள ஆக்கத் திறனை வெளிக்கொணரவேண்டியது ஆசிரிய கல்வியியலாளரது பணியாகும். எனவே தேடிக் கற்கும் பழக்கத்தை விருத்தி செய்யக் கூடிய விதத்திலும் பிரச்சினையை தீர்க்கும் திறனை வளர்க்கக்கூடிய விதத்திலும் கற்பித்தல் முறை அமைக்கப்பட வேண்டும். இதற்கு ஆசிரிய மாணவர்களை பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபடவைக்கவேண்டும். செயற்பாடுகளினூடான கற்றலையே வளர்ந்த ஆசிரிய மாணவர்கள் அதிகம் விரும்புகிறார்கள். இதற்கு களப் பயணங்கள், பரிசோதனைகள், அரங்க செயற்பாடுகள், விளை யாட்டுக்கள் போன்றவற்றை ஒழுங்கமைத்து செயற்படுத்தவேண்டும். இங்கு அரங்கச் செயற்பர்டுகள் எனும்போது பாடுதல், ஆடுதல், பாத்திரமேற்று நடித்தல் போன்றன அடங்கும். (தொடரும்)

A.Gugan
BSc.(cey), PGDE, MSc.(Phy of Mat),MATE(International)
Lecturer (SLTES III)
J/National College of Education

## வாரத்திற்கு ஒரு புதிர்! 102

சிங்கெனிங்கும் கவிங்கேற்றும் ( Chickening and Havigherst ) வளர்ந்த கற்போரை வயதை அடிப்படையாகக் கொண்டு பாகுபடுத்திய போது, பின் கட்டிளமைப் பருவ வயதெல்லை யாது?

**புதிர் 102 இற்கான விடைகளை 17.02.2014 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:**

**திரு. அ. குகன்**
**ஆசிரியர் பிரிவுA**
**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்,**
**ஆசிரிய கல்வியியலாளர்,**
**யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி,**
**கோப்பாய்.**

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு**
**ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**

**இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட விலங்கியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.ஈஸ்வரமோகனிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.**

பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்.

**புதிர் 101 க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

கே.இராஜகோபால்
அடைக்கலம் தோட்டம்,
கந்தசுவாமி கோயிலடி,
வட்டுக்கோட்டை.

**புதிர் 101 க்கான கேள்வியும் விடையும்:**

பிரதேச செயலர் பிரிவு ரீதியாக 2012ம் ஆண்டுக்குரிய யாழ் மாவட்ட இடைவிலகலை எடுத்து நோக்கும் போது அதிகூடிய இடைவிலகலை கொண்டுள்ள பிரதேச செயலர் பிரிவு எது? சங்கானை

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 102

சரியான விடை:-..................................................

முழுப்பெயர்:-..................................................

முகவரி:-..................................................

தொ.பே. இல:..................................................

கையொப்பம்:..................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்தியஸ்தர் சபைக்கு புதிதாக அறுவர் நியமனம்

(சிவநகர்)

கரைச்சி பிரதேச செயலகப் பிரிவின் மத்தியஸ்தர் சபைக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள 6 உறுப்பினர்களுக்கு நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

நீதி அமைச்சின் மத்தியஸ்தர் சபைகள் ஆணைக்குழு இந்நிய மனங்களை வழங்கியுள்ளது. இத்துடன் கரைச்சி பிரதேச செயலகப் பிரிவின் மத்தியஸ்தர் சபையின் உறுப்பினர்களின் எண் ணிக்கை 31 ஆக அதிகரித்துள்ளது.

இந்நிகழ்வில் கரைச்சி பிரதேச செயலர் உரையாற்றுகையில்,

கரைச்சி பிரதேச செயலகப் பிரிவின் மத்தியஸ்தர் சபை ஒவ் வொரு ஞாயிற்றுக் கிழமைகள் தோறும் கிளிநொச்சி மத்திய கல்லூரியின் ஆரம்ப பாடசாலையில் கூடி இப் பிரதேச மக்களின் பிணக்குகளை இணக்கமாக்கி வருகின்றது.

அதற்கு பலம் சேர்க்கும் வகையில் இந்த நியமனங்கள் அமைந் துள்ளன என்றார். (அ-2-254)

# 22 ஆவது மாநாட்டில் சபாநாயகர் சமல்

பொதுநலவாய நாடுகளின் சபாநாயகர்கள் மற்றும் பிரதான அதிகாரிகளின் 22 ஆவது மாநாட்டில் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ கலந்து கொண்டார் .

கடந்த மாதம் 21 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை நியூசிலாந்தின் வெலின்டன் நகரில் இம்மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டில் இலங்கை பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பாரளுமன்றச் செயலாளர் தம்மிக்க தசநாயக்கவும் இம்மாநாட்டில் கலந்து கொண்டார்.

இம்மாநாட்டின் போது வெளிப்படைத் தன்மை, பாராளுமன்ற சலுகைகள் உட்பட பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. (அ-2)

# பிரிவுத்துயர் பகிர்வு



### கந்தையா வரதராசா

தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா வரதராசா 3 ஆம் திகதி திங்கட் கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 8.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருவடி நிலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி சிவகுமார் புவனமலர்

அச்சுவேலி இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி Essen ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுமார் புவனமலர் நேற்று முன்தினம் புதன்கிழமை அன்று காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு Krematorium Hellweg 95,45276 Essen ,Germany என் னும் முகவரியில் நடைபெறும்.



### வத்சலா செல்வரத்தினம்

தெல்லிப்பழை வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும் லண்டன் Canterbury ஐ வசிப்பிடமாகவும் கொண்ட வத்சலா செல்வரத்தினம் கடந்த 31 ஆம் திகதி வெள்ளிக் கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### மயில்வாகனம் ஆறுமுகம்

இணுவில் கிழக்கு , K.K.S. வீதி யை சேர்ந்த மயில்வாகனம் ஆறுமுகம் 3 ஆம் திகதி திங்கட் கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று நடைபெற்றது.

# சமாதானத்தை விரும்பாத தீய சக்திகள் பிரிவினைவாதத்தை தூண்டுகின்றன

## அமைச்சர் வீரவன்ச தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு அரசியல்வாதிகளுக்கு முஸ்லிம் மற்றும் சிங்கள மக்கள் தேவையில்லை என்ற போதி லும் தெற்கு அரசியல்வாதிகளுக்கு தமிழ் மக்கள் தேவையில்லாமல் போகவில்லை என அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

வடக்கில் சிங்கள, முஸ்லிம் மக்களை மீள்குடியேற்றக் கூடாது என் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளும், வடமாகாண சபையும் கோரி வருகின்றது.

எனினும், 1983ஆம் ஆண்டு கறுப்பு ஜுலையின் பின்னர் மேல் தென் மாகாணங்களில் தமிழர்களை மீள்குடியேற்ற வேண்டாம் என சிங்கள அரசியல்வாதிகள் கோரியதில்லை.

1983ஆம் ஆண்டில் இடம் பெற்ற வன்முறைகளில் கொழும்பைச் சேர்ந்த தமிழர்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேற நேரிட்டது.

எனினும், 1983ஆம் ஆண்டில் மேல் மாகாணத்தில் இருந்த அளவு தமிழ் மக்கள் மட்டுமே இருக்க வேண்டுமென எந்தவொரு சிங்கள அரசியல்வாதியும் வலியுறுத்தியதில்லை.

அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளும், வடமாகாணசபையும் வடக்கில் சிங்கள மக்களை குடியேற்றக் கூடாது என கோரி வருகின்றனர்.

சில தமிழ் ஊடகங்கள் தொடர்ச்சியாக பிரிவினைவாத கோட்பாடுகளை பிரசாரம் செய்து வருகின்றன.

நாட்டில் சமாதானம் ஏற்படுவ தை விரும்பாத சக்திகள் தொடர்ச்சியாக பிரிவினைவாதத்தை தூண்டி வருகின்றனர் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# ஜனாதிபதியை பாதுகாக்க உயிரை பணயம் வைப்பேன்

## பிரதமர் சூளுரை

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்தவை பாதுகாக்க உயிரைப் பணயம் வைத்து செயற்பட போவதாக பிரதமர் டி.எம். ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

கம்பளையில் நடைபெற்ற மக்கள சந்திப்பில் பங்கேற்ற போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

ஜனாதிபதி மற்றும் மஹிந்த சிந்தனையை பாதுகாக்க உயிரைக் கூட தியாகம் செய்யத்தயார்.

கடந்த 30 ஆண்டுகால யுத்தத்தை ஜனாதிபதி முடிவுக்குக் கொண்டு வந்து, நாட்டில் சுபீட்சத்தை ஏற்படுத்தியுள்ளார்.

நாட்டில் ஏற்பட்டு வரும் முன்னேற்றத்தை தாங்கிக் கொள்ள முடியாதவர்கள் சூழ்ச்சித் திட்டங்களை முன்னெடுக்கின்றனர்.

நாட்டின் பெரும்பான்மையான மக்கள் ஜனாதிபதியையும், மஹிந்த சிந்தனையையும் பாதுகாப்பதற்கு உயிர்த் தியாகம் செய்ய காத்திருக்கின்றனர்.

உலகின் மிகக் கொடிய பயங்கரவாத அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகளை ஜனாதிபதி தோற்கடித்தார்.

மனித உரிமைகள் மற்றும் போர்க் குற்றச் செயல்கள் தொடர்பில் அபிவிருத்தி அடைந்த நாடுகள் குரல் கொடுப்பது மக்களின் மீதான அக்கறையினால் அல்ல என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# ஸ்ரீபாத காட்டுப் பகுதியில் தீ

நல்லதண்ண்ணி ஸ்ரீபாத காட்டுப்பகுதிக்கு இனந்தெரியாத நபர்களால் நேற்று பகல் தீ வைக்கப்பட்டுள்ளது.

இதனால் சுமார் 10 ஏக்கர் நிலப்பரப்பு தீயினால் எரிந்து நாசமாகியுள்ளது.

இதேவேளை பிரதேச மக்கள் மற்றும் பொலிஸாரும் தீயணைப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட போதும் அது பயனளிக்கவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் நுவரேலியா மாவட்ட செயலாளர் டீ.பி.ஜி.குமாரசிறி விமானப்படையினரின் உதவியை கேட்டுள்ளதாக தெரிவித்தார். (அ-2)

# பருப்புக்கான இறக்குமதி வரி 17 ரூபாவால் குறைப்பு

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் பருப்புக்கான விசேட இறக்குமதி வரி 17 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது

இந்த வரிக்குறைப்பு நேற்று முதல் நடைமுறைக்கு வருவதாகவும் நிதியமைச்சு தெரிவித்தது. நுகர்வோருக்கு நிவாரணம் வழங்கும் வகையில் பருப்புக்கான விசேட இறக்குமதி வரியைக் குறைக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிதியமைச்சுக்கு வழங்கியுள்ள உத்தரவிற்கமையவே மேற்படி வரிக்குறைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நிதியமைச்சின் உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இதுவரை காலமும் இறக்குமதி செய்யப்படும் பருப்பு கிலோ ஒன்றுக்கு 22 ரூபா விசேட இறக்குமதி வரி அறவிடப்பட்டு வந்தது. அதில் 17 ரூபா குறைக்கப்பட்டுள்ள நிலையில் இனிமேல் 5 ரூபாவே விசேட இறக்குமதி வரியாக இருக்கும் என நிதியமைச்சு தெரிவித்தது.

நுகர்வோர் மற்றும் உள்ளூர் விவசாயிகளுக்கு நன்மைபயக்கும் விதத்திலேயே பருப்புக்கான விசேட இறக்குமதி வரியில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அமைச்சு மேலும் தெரிவித்தது. (அ-2)

# வானசாஸ்திர விழிப்புணர்வுக்கு தேசிய ரீதியில் போட்டிகள்

வானசாஸ்திரம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அகில இலங்கை ரீதியாக போட்டிகளை நடத்த கொழும்பு இசிபத்தான கல்லூரி முன்வந்துள்ளது.

கொழும்பு, காலி கண்டி ஆகிய பகுதிகளுக்கு மாத்திரம் மட்டுபடுத்தப்பட்டிருந்த வானசாஸ்திரத்தை நாட்டின் மூலை முடுக்கெங்கும் எடுத்து செல்லும் நோக்கிலேயே கல்லூரியின் வானியல் அமைப்பு மேற்படி திட்டத்தினை வகுத்திருப்பதாக கல்லூரி அதிபர் ஏ. எம். ஏ. சி. பெரேரா தெரிவித்தார்.

பாடசாலை மாணவர்களுக்கு மூன்று மொழிகளிலும் வானசாஸ்திரம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஆசியாவின் முதலாவது வேலைத் திட்டம் இதுவாகுமெனவும் அவர் கூறினார். கொழும்பு இசிபத்தான கல்லூரியின் தலைமைத்துவத்தின் கீழ் இச்செயற்திட்டமானது நேற்று முதல் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை அனைத்து மாகாணங்களிலும் கட்டம் கட்டமாக நடத்தப்படவுள்ளது.

இது குறித்து ஏற்கனவே மாகாண மட்டத்தில் அனைத்து பாடசாலைகளுக்கும் தெரியப்படுத்தியிருப்பதனால், அவர்களின் ஒத்துழைப்புடன் இரவு வானை அவதானிக்கும் முகாம்கள் அமைக்கப்படவுள்ளன.

வானசாஸ்திரம் குறித்து போதிய தெளிவின்மை மற்றும் அவற்றை அவதானிப்பதற்கான போதிய தொழில்நுட்ப கருவிகள் இல்லாத குளியாப்பிட்டிய, அனுராதபுரம், இரத்தினபுரி, மொனராகலை, தெஹியத்தகண்டிய, யாழ்ப்பாணம் உள்ளிட்ட பல இடங்களில் இரவு முகாம்கள் அமைத்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திய பின்னர் அவர்களுக்கென விசேட பரீட்சைகளும் நடத்தப்படவுள்ளன.

இதுகுறித்து ஏற்கனவே பல விடயங்களையும் தெரிந்து வைத்துள்ள காலி, கொழும்பு, கண்டி ஆகிய இடங்களில் எதிர்வரும் 24 ஆம் திகதியன்று நேரடியாகவே பரீட்சைகள் நடத்தப்படும்.

போட்டி யின் இறுதிச்சுற்று எதிர்வரும் 28ம் திகதி கொழும்பு பல்கலைக்கழக மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது.

இந்நிகழ்விற்காக கல்வியமைச்சர் பந்துல குணவர்தன மற்றும் தொழில்நுட்ப ஆராய்ச்சி அணு சக்தியமைச்சர் பாட்டளி சம்பிக்க ரணவக்க ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-2)

# சி.க.கூ.சங்கத்தின் நிர்வாகிகள் தெரிவு

(கரணவாய்)

கரவெட்டி பிராந்திய சிக்கன கடன் வழங்கும் சங்கங்களின் வருடாந்த பொதுக்கூட்டம் நேற்று நடைபெற்றது.

இதில் தலைவராக கொ.குணசிங்கம், உபதலைவராக திருமதி பத்திப்பிள்ளை ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

நிர்வாக உறுப்பினர்களாக க.ஆகுலநாயகம், பி.பிறேம்தாஸ்சன், இ.இராசேந்திரம், ம.பிரபாகரன் திருமதி தவராசா சிதா ஆகியோர் தெரிவாகினர். (அ-2-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கச் சுரங்கத்தில் தீ விபத்து

தங்கச் சுரங்கத்தில் 2 கிலோ மீற்றர் ஆழத்தில் உள்ள பகுதியில் தொழிலாளர்கள் தங்கத்தைத் தோண்டியெடுக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது அங்கு திடீர் தீவிபத்து ஏற்பட்டது. 17 தொழிலாளரகள் அதில் சிக்கி கொண்டனர். அவர்களில் 8 பேரை மீட்பு படையினர் மீட்டார்கள்.

ஏனைய 9 தொழிலாளர்கள் உள்ளே சிக்கி கொண்டார்கள்.

மிகவும் ஆழமான பகுதிக்குள சிக்கி இருப்பதால் அவர்கள் கதி என்ன என்று தெரிய வில்லை.

தீ விபத்தில் சுரங்கம இடிந்து அந்த இடிபாடுக்குள் அவர்கள் சிக்கி இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

சுரங்கத்தின் உள் பகுதியில புகை மண்டலமாக இருப்பதால் மீட்பு பணிகளை சரியாக செய்ய முடியவில்லை என்று மீட்பு படையினர் கூறினார்கள.

குறித்த சுரங்கம் தென்னாபிரிக்காவில் ஜோகன்ஸ்பர்க் அருகில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)



பிரித்தானியா நாட்டின் சோமர் செட் பகுதியில் கனமழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை இளவரசர் சார்ல்ஸ் நேரில் பார்வையிட்டதைப் படத்தில் காணலாம்.

## பாகிஸ்தானுக்கு பயணம் மேற்கொள்ள வேண்டாம்

### அமெரிக்கா எச்சரிக்கை

பாகிஸ்தான் நாட்டிற்கு எந்தவொரு தேவையில்லாப் பயணத்தையும மேற்கொள்ள வேண்டாம என்று நாட்டு மக்களுக்கு அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது. பாதுகாப்பு விவகாரம் தொடர்பாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் உள்நாடடு மற்றும்வெளிநாட்டு தீவிரவாத அமைப்புகளால் அச்சுறுத்தல் அதிகரித்துள்ள நிலையில் பாகிஸ்தானுக்கு செல்வது சரியானது இல்லை என்று அமெரிக்கா கூறியுள்ளது. அதனுடன் லாகூரில் உள்ள தூதரக சேவைகள் எதுவும் நடைபெறவில்லை. ஆனால் இஸ்லாமாபாத் மற்றும் கராச்சி நகரில் தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகிறது என்று தகவல்கள் தெரிவித்துள்ளன. (2)

# தலைவர்கள் வழிநடத்த தவறினால் மக்கள் தலைமை ஏற்க வேண்டும்

### ஐ.நா.வின் முன்னாள் பொதுச்செயலாளர் கோபி அனான் தெரிவிப்பு

**தலைவர்கள் மக்களை வழி நடத்த தவறினால் மக்கள் தலைமை பொறுப்பேற்று தலைவர்களை வழிநடத்த வேண்டும் எனவும் தலைவர்கள் மக்களின் வழியில் செயற்பட வேண்டும் எனவும் ஐ.நா.வின் முன்னாள் பொதுச் செயலாளர் கோபி அனான் தெரிவித்துள்ளார்.**

தட்பவெப்ப நிலை, புவி வெப்பமயமாதல், பொருளாதார மாற்றங்கள் உள்ளிட்ட உலகம் எதிர்கொண்டிருக்கும் சவால்கள் குறித்து தனியார் தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றிற்கு பேட்டி அளித்த போபோத அவர் இவ்வாறு தெரிவித்தார். ஆப்கானிஸ்தானிலும், ஆபிரிக்காவிலும் அமைதி திரும்பும் எனவும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.


உலக நாடுகள் குறித்தும், அவற்றின் நிலை குறித்தும் உரையாற்றிய கோபிஅனான், நெல்சன் மண்டேலா போன்ற மூத்த தலைவர்கள் ஏழைகளின் நலன் காக்க பெரிதும் குரல் கொடுத்தனர். நாங்கள் தனித்து நின்று எங்கள் பங்கினை அளித்து வருகிறோம். நாங்கள் எந்த ஒரு அரசின் அங்கமும் அல்ல. இருப்பினும் ஒன்று கூடி உலக நாடுகளின் பிரச்சினைகள் மற்றும் அரசுகள் செய்யும் அல்லது செய்ய தவறிய விடயங்கள் குறித்து ஆலோசனை நடத்துவோம் நாம் இயற்கை வளங்களை பாதுகாக்க தவறியதன்விளைவு, இன்று தட்பவெப்ப நிலையில் பல்வேறு முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. ஒரு பக்கம் வெள்ளம், ஒரு பக்கம் வறட்சி குடிநீர், உணவு ஆகியவற்றிற்கு ஏற்பட்டுள்ள து.

தட்டுப்பாடு மனித இனத்திற்கு அச்சுறுத்தலாக உள்ளது. புவியை காக்க இந்தியா, கானா, சீனா உள்ளிட்ட நாடுகள் பெரும் முயற்சி செய்து வருகின்றன.

மக்கள் தொகை பெருக்கத்தால்நமக்கு கூடுதல் உணவு தேவைப்படுகிறது.மக்கள் நீர் ஆதாரங்களை இழந்து வெகு தூரம் சென்று விட்டனர். தட்பவெப்ப நிலை மாற்றத்தால் பல்வேறு உடல்ரீதியான பிரச்சினைகளை நாம் எதிர்கொள்கிறோம் இந்த நிலையை மாற்ற வேண்டிய பணிகளில் அரசாங்கங்கள் இறங்க வேண்டும் என நினை க்கிறேன்

தலைவர்கள் சரியான முறையில் மக்களை வழிநடத்தினாலே பல முக்கிய பிரச்னைகளுக்கு சரியான தீர்வை காணலாம் என நான் நம்புகிறேன். தலைவர்கள் மக்களை வழிநடத்த தவறினால், மக்கள் தான் சமூகத்தின் மீது அக்கறை கொள்ள வேண்டும். அத்தகைய நிலையில் மக்கள் தான் தலைமை ஏற்க வேண்டும். தலைவர்கள் அவர்களை பின்பற்ற வேண்டும். சுற்று சூழல் மாற்ற பிரச்சினைகளில் மக்கள் ஒன்று பட்டு சுற்று சூழல் குறித்த திட்டங்களை வகுத்து, அரசியல் தலைவர்களை இதன்படி நடக்க செய்ய வேண்டும். தலைவர்கள் மக்களை சரியாக வழி நடத்தாத நிலை உலகின் பல பகுதிகளில் நடக்கிறது. பொறுப்பான தலைமையை மக்கள் விரும்புகின்றனர். மக்கள் தங்களை நல்வழிப்படுத்தி, அரசையும் அவ்வழியில் தொடர வலியுறுத்த வேண்டும். அவ்வாறு செய்தால் மட்டுமே நமது குழந்தைகளும், பேரக்குழந்தைகளும் இவ்வுலகில் வாழ முடியும்

நமக்காக, நமது சந்ததிகளுக்காகவும் போராட வேண்டிய சமயம்வந்து விட்டது. மக்களசேவைகளால்மிகப பெரிய சீர்திருத்தங்களை ஏறபடுத்த முடியும். ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகளில் சுமார் 10 ஆண்டுகளாக போர் நடைபெற்றுவருகிறது



அவர்களுக்கு அமைதியும், அரசியல நிலைத்தன்மையும் தேவை. பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சி ஏற்படும பட்சத்தில் அங்கு போர்கள் முடிவுக்கு வரும். அந்த நாடுகள் அயல் நாடுகளுடன்விரு ம்பும் நல்லுறவை ஏற்படுத்த நாங்கள் நிச்சயம் உதவி செய்வோம். இவ்வாறு அவர் தெரிவித்தார். (2)

வீடு வாடகைக்கு தேவை

ஆன்மீக வகுப்புக்கள், பயிற்சிகள் நடாத்த சகல வசதிகளுடன் கூடிய வீடு ஒன்று தேவை.

பெருமாள் கோயில் சுற்றாடலில் அமைந்திருந்தால் மிக விரும்பப்படுகின்றது.

யாழ்.நகரில் அமைந்திருந்தால் நல்லது.

தொடர்புகளுக்கு:-
கோகுலம்,
கந்தாவில் அம்மன் கோவில் வீதி,
கோண்டாவில்.

தொடர்புகளுக்கு: 0778012242

(5528)

# சிரியா போரில் 10 ஆயிரம் குழந்தைகள் உயிரிழப்பு

### ஐ.நா. அறிக்கையில் தெரிவிப்பு

(டமாஸ்கஸ்)

இராணுவம் மற்றும் புரட்சி படைகள் இருதரப்பினருமே குழந்தைகளை கொன்று வருவதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மேலும் புரட்சி படையினர் குழந்தைகளை படையில் சேர்த்து போரிட்டு வருவதாகவும் கூறப்பட்டுள்ளது. 11 வயது சிறுவன் கூட புரட்சி படையில்வீரனாக இணைக்கப்பட்டுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


குழந்தைகளை மிக கொடூரமாக சித்திரவதை செய்து கொன்றதாகவும் இரும்பு தடியால் அடிப்பது, உடலில் மின்சாரத்தை பாய்ச்சுவது, நகத்தை பிடுங்குவது, கற்பழிப்பது போன்ற சித்ரவதைகளையும் செய்வதாகவும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

எனவே குழந்தைகள் பலியாவதை தடுக்க வேண்டும் என்று ஐ.நா. சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இராணுவத்துக்கும், புரட்சி படைகளுக்கும் நடந்துள்ள சண்டையில் அப்பாவி பொதுமக்கள் உள்ளிட்ட 2 இலட்சத்துக்கும் மேற பட்டோர் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# ஆந்திராவை பிரிக்கும் விவகாரத்தில் மத்தியரசு தனியாக செயற்படுகிறது

## சந்திரபாபு நாயுடு குற்றச்சாட்டு



(மும்பை)

"ஆந்திராவை பிரிக்கும் விவகாரத்தில் மத்திய அரசு தன்னிச்சையாக செயல்படுகிறது" என்று தெலுங்கு தேசம கட்சித் தலைவர் சந்திரபாபு நாயுடு குற்றம்சாட்டினார். மும்பையில் பந்த்ரா பகுதியில் சிவசேனா தலைவர் உத்தவ் தாக்கரேயை சந்திரபாபு நாயுடு நேற்று முன்தினம் சந்தித்து பேசினார். பின்னர் அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது, மாநில மக்களின் சம்மதத்துடன் தான் அவர்களின் முன்னேற்றத்துக்கான பணிகளை மேற்கொள்ள வேண்டும். அப்படி செயல்படவில்லை என்றால், அது கூட்டாட்சி முறையாக இருக்காது. அதனால், தேசிய ஒருமைப்பாடுக்கு பிரச்சினையை ஏற்படுத்தும். நமது முன்னோர்கள் அதன் அடிப்படையில் தான் அரசியலமைப்பு சட்டத்தை உருவாக்கி உள்ளனர். இந்தியா ஒரு முதிர்ச்சி பெற்ற மற்றும் பெரிய ஜனநாயக நாடு. அதனால், மத்திய அரசு மிகுந்த நம்பிக்கையுடன மாநிலங்களை அணுக வேண்டும். ஆனால், அரசியலமைப்பு சட்டத்திற்கு புறம்பான செயல்களிலேயே மத்திய அரசு ஈடுபடுகிறது, இது சரியல்ல என்று நாயுடு குற்றஞ்சாட்டினார்.

மகாராஷ்டிராவில் எப்படி அந்த மாநில மக்களின் நலனுக்காக சிவசேனா ஆரம்பிக்கப்பட்டதோ அது போலத்தான் தெலுங்கு மக்களின் முன்னேற்றத்திற்காக ஆரம்பிக்கப்பட்டதுதான் தெலுங்கு தேசம் கட்சி. தெலு ங்கு மொழி பேசும் மக்களின் நலனுக்காகவும் அவர்க ளின சுயமரியாதையை காப்பதற்காகவும் தெலுங்கு தேசம் கட்சி பாடுபட்டு வருவதாக நாயுடு குறிப்பிட் டார்

மாநிலம் பிரிப்பு விவகாரத்தில் மத்திய அரசு, ஆந்திராவின் 2 பிராந்திய மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றும் விதத்தில் செயல்பட வேண்டும். தெலுங்கானாவை பிரித்தால், சீமாந்திரா பிராந்திய மக்களை சமாதானம் செய்ய வேண்டும். இல்லை, மாநிலத்தை பிரிக்காமல் ஒருங்கிணைந்த மாநிலமாகவே நீடிக்க செய்தால் தெலுங்கானா பிராந்திய மக்களை சமாதானம் செய்ய வேண்டும்.

இந்த விவகாரத்தில் காங்கிரஸ், வை.எஸ்.ஆர் காங்கிரஸ் தலைவர் ஜெகனமோகன் ரெட்டி, தெலுங்கானா ராஷ்டிரிய சமிதி (டி.ஆர்.எஸ்) ஆகியவற்றிற்கு இடையே இரகசிய உடன்பாடு இருக்கிறது. ஜெகன்மோகன் ரெட்டி மீது ஊழல் வழக்குகள் உள்ளன. அதற்காக அவர் சிறையிலும் இருந்துள்ளார். சம்மந்தப்பட்ட மாநில மக்களின் கருத்தை அறியாமல் டில்லியில் உட்கார்ந்து கொண்டு தன்னிச்சையாக முடிவு எடுத்து மத் திய அரசு செயற்படுகிறது. அதனால் தான் நாங்கள் எதிர்க்கிறோம். அதற்காகவே சிவசேனாவின் ஆதரவைப் பெற மும்பை வந்துள்ளேன் என அவர் கூறினார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible] காளை இழுக்காது; எனினும்
பாண[illegible] நுபயன்விளைப்பான்என்னுரான்.
–மகாகவி உருத்திரமூர்த்தி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## இழப்பின் துயர் துடைக்க 'பொதுநிதி' உருவாக்கப்பட வேண்டும்

'வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும் இங்கு வாழும் மனிதர்களுக்கு எல்லாம்' என்றார் பாரதி. இந்த உலகில் மிகப்பெரும் துன்பம் பசியாகும்.

எனவேதான் 'தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் இந்த ஜெகத்தினை அழித்திடுவோம்' என்ற சூளுரையை பாரதி விடுத்தான்.

ஆக, எல்லோரும் பசியாறும் வகையில் இந்தப் பாரினில் தொழில் வாய்ப்பும் வேளாண் செய்கையும் விருத்தி செய்யப்பட வேண்டும்.

.எனினும் எங்கள் மண் யுத்தபூமியாகிப் போனதன் காரணமாக எம் விளைநிலங்களில் இப்போது எருக்கிலை முற்றி முறுகிப்படர்ந்து பற்றையாகக் காட்சி தருகின்றது.

காடழித்து, கனனி செய்து–நெல் மூடைகளை வீட்டில் அடுக்கி; உறங்குவதே நெல் மூடைக்கு மேல் என்று வாழ்ந்த எம் வாழ்விடங்கள் தரை மட்டமாகிப் போயிற்று.

கொடும் யுத்தம் இவற்றை மட்டும் பதம் பார்த்திருந்தால் மீண்டும் தொடங்கும் மிடுக்கு என்று மார்தட்டி விளைநிலம் நோக்கி பயணித்திருப்போம்.

ஆனால் கொடிய யுத்தம், இளம் பெண்களை விதவைகளாக்கி, பிஞ்சுக் குழந்தைகளை அநாதைகளாக்கி மேன்முறையீடு செய்ய முடியாத உயிரிழப்பைத் தந்து விட்டது.

இந்தக் கொடுமை வாழும் காலம் முழுவதும் எங்களை வாட்டவே செய்யும்.

அதேநேரம், இழப்பிலும் எழுந்து நிற்பது என்ற உரமூட்டலை– மனத்தைரியத்தை எங்களிடம் நாங்கள் ஏற்படுத்துவது மிகவும் அவசியம்.

அந்த உரம் வெறும் பேச்சாக மட்டும் இருந்தால் அதனால் எந்தப் பிரயோசனமும் ஏற்பட மாட்டா.

பேச்சுக்கள் உணர்ச்சி வசப்படுத்தும் என்பது உண்மைதான். அதற்காக பேச்சு, பசித்திருக்கும் மாந்தர்க்கு சோறிட மாட்டாது. சோம்பல் கலைத்து தொழில் முயற்சி கொடுத்திடமாட்டாது.

எனவே போரினால் பாதிப்படைந்த– இளம் விதவைப் பெண்களைத் தலைமையாகக் கொண்ட குடும்பங்களுக்கு உதவும் வகையிலும் போர்ப் பாதிப்பின் இழப்பை அனுபவிக்கும் ஏனைய குடும்பங்களுக்கு உதவும் பொருட்டும் வடக்கு மாகாணத்தில் பொதுநிதி ஒன்றை ஆரம்பிக்க வேண்டும்.

இந்த முயற்சிக்கு எங்கள் புலம்பெயர் உறவுகளும் உள்நாட்டில் வாழும் செல்வந்தர்களும் தங்கள் தாராளமான பரோபகாரங்களைச் செய்வது அவசியம். இந்த முயற்சியை உடனடியாக முன்னெடுக்க வேண்டும்.

பொதுநிதி ஒன்றை ஆரம்பிப்பதுடன் உதவிக்கான பரிந்துரைகளை வழங்கவும் அதனை அமுல்படுத்தவும் நிறைவேற்று சபை ஒன்றை அமைப்பதும் அவசியமாகும்.

இப் பொதுநிதியை ஆரம்பிக்கும் திட்டத்தை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் வெளிநாட்டில் வாழும் புலம்பெயர் தமிழ் உறவுகளுடன் நல்லுறவைக் கொண்டுள்ளவருமான சி.சிறிதரன் போன்றவர்கள் முன்வர வேண்டும்.

திட்டமிடல் இல்லாத கொள்கை எங்களை மேன் மேலும் துன்பத்திற்குள்ளும் அவலத்துக்குள்ளும் வீழ்த்தும் என்பதால்; வீழ்ந்த எங்கள் இனம் மீண்டெழும் வகையில், ஆக்கபூர்வமான உதவித் திட்டங்களை–அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்போம் வாரீர்.

# டீசலில் அடங்கியுள்ள இரசாயனம் குறித்து ஆய்வுகளை நடத்துங்கள்

(கொழும்பு)

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் டீசலில் அடங்கியுள்ள இரசாயனப் பதார்த்தங்கள் தொடர்பாக உடனடியாக ஆய்வுகளை ஆரம்பிக்குமாறு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தேசிய புற்றுநோய் தடுப்பு நிகழ்ச்சித் திட்ட மருத்துவ நிபுணர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

வளர்முக நாடுகளில் புற்று நோய்களுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. இதற்கு டீசலில் காணப்படும் சில இரசாயனப் பதார்த்தங்களே காரணம் எனக் கூறப்படுகின்றது.

எனவே, இவ்விடயத்தில் ஆய்வுகளை ஆரம்பிக்குமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார். உலகில் புற்றுநோய் பெரும் பிரச்சினையாக வளர்ச்சி அடைந்து வருகின்றது.

இலங்கையில் வருடமொன்றுக்கு 15 ஆயிரம் பேர் புதிதாக புற்றுநோய் சிகிச்சைக்கென பதிவாகின்றனர். இதன்படி நாளொன்றுக்கு மூவர் வாய் மற்றும் நுரையீரல் புற்றுநோய்கள் காரணமாக உயிரிழக்கின்றனர். இதன் காரணத்தினால் புற்றுநோய்களுக்குச் சிகிச்சை அளிக்கவென நாடெங்கிலுமுள்ள பிரதான வைத்தியசாலைகளில் விசேட பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அந்த அடிப்படையில் இவ்வருடம் புற்று நோயாளர்களுக்கான கதிரியக்க சிகிச்சைக்காக 900 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் இந் நோய்க்குரிய சிகிச்சைக்கான மருந்துகளைக் கொள்வனவு செய்ய ஆயிரத்து 500 மில்லியன் ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று அமைச்சின் அதிகாரியொருவர் கூறினார்.

இவ்வாறான நிலையில் தேசிய புற்றுநோய்த் தடுப்புத் திட்ட மருத்துவ நிபுணர்களை அழைத்து சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன கலந்துரையாடினார். இச்சமயமே அவர் மேற்கண்டவாறு அறிவுறுத்தல்களை வழங்கினார். (அ-2)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/ நாவாந்துறை றோ.க.வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர். திறனாய்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு சென்.நீகிலஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில். நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி அமைச்சின் உத்வி செயலாளர் திருமதி செலின் சுகந்தினி செபஸ்தியன், சிறப்பு விருந்தினர்களாக வண.பிதா சந்தியாபிள்ளை பாலேந்திரன், பழைய மாணவர் அல்பிரட் ஸ்ரனிஸ்லெஸ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (செ-2)

# ஊடகத்திறன் போட்டி முடிவுகள்

வடமாகாணகல்வித் திணைக்களமும் கொக்குவில் இந்துக் கல்லூரியின் ஊடகக் கழகமும் இணைந்து நடத்தவுள்ள ஊடகஎழுத்தறிவு தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட வடமாகாண மட்ட ஊடகத்திறன் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன. போட்டிகளில் முதல் மூன்று இடங்களை பெற்றவர்களின விபரங்களை ஊடககழக பொறுப்பாசிரியர் ப.இராஜேஸ்வரன் அறிவித்துளளார். அதன் விபரம் வருமாறு,

**செய்திவாசித்தல்**

**பிரிவு-1**

சுபாங்கினி திருஞானமூர்த்தி (கிளிநொச்சி முருகானந்தா கல்லூரி), பியோமி ஶ்ரீதரன்(உடுவில்மகளிர்கல்லூரி), அபிஷாதயாபரன்(யா/இந்துமகளிர்கல்லூரி), லக்ஷிதிரியங்கா தங்கையா(வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மத்திய மகா வித்தியாலயம்)

**பிரிவு 2**

விஸ்வகுமார் விஸ்ணுஜன் (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), றோசி மரியநேசன (கிளிநொச்சி முருகானந்தா கல்லூரி), நிலுக்ஷி சிவயோகநாதன் (யா/கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்)

**செய்தி அறிக்கை எழுதுதல்**

**பிரிவு 1**

பைரவி ரவீந்திரகுமார் (வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்), வேலழகன் பிரவீன் (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), கேன்சியா ஜெயராஜசேகரன்(யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி )

**பிரிவு 2**

பிரியா யோகேஸ்வரன் (யா/இந்துமகளிர் கல்லூரி), சிரோமிக்கா நடராசா(யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), ஜிந்துஜா சிவகுமார் (யா/கொக்குவில இந்துக் கல்லூரி)

மேற்படி போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு யா/கொக்குவில் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளஊடகஎழுத்தறிவு தினநிகழ்வன்று ஊடக விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனா். (அ)

## தோடு கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நெல்லியடிப் பகுதியில் கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் தொடு கண்டெடுக்கப்பட்டு வலம்புரி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் தகுந்த ஆதாரத்துடன் அலுவலக நேரத்தில் வருகை தந்து பெற்றுக்கொள்ளலாம். (அ-2)

# விசா வழங்கலில் இலங்கையை புறக்கணித்தது இந்தியா

(கொழும்பு)

இலங்கை உள்ளிட்ட எட்டு நாடுகளுக்கு ஒன் அரைவல் விசா வசதி கிடையாது என இந்தியா அறிவித்துள்ளது.

இந்திய சுற்றுலாக் கைத்தொழிலை மேம்படுத்தும் நோக்கில் உலகின் 180 நாடுகளுக்கு ஒன் அரைவல் விசா முறைமை நீடிக்கப்படவுள்ளது.

இதன்பிரகாரம் பாகிஸ்தான்,இலங்கை, ஈரான், ஈராக், சோமாலியா, நைஜீரியா, ஆப்கானிஸ்தான், சூடான் ஆகிய நாடுகளுக்கு இந்த விசா சலுகை நீடிக்கப்படவில்லை.

இதுவரை காலமும் சிங்கப்பூர், பிலிப்பைன்ஸ் உள்ளிட்ட பதினொரு நாடுகளுக்கு மட்டுமே ஒன் அரைவல் விசா முறைமை காணப்பட்டது.

எனினும், சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் நோக்கில் இவ்வாறு 180 நாடுகளின் பிரஜைகளுக்கு ஒன் அரைவல் விசா வழங்க இந்தியா தீர்மானித்துள்ளது.

சில மாதங்களில் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என அறிவிக்கப்படுகிறது.

எவ்வாறெனினும், என்ன காரணத்திற்காக இலங்கை முதலான நாடுகளுக்கு விசா சலுகை வழங்கப்படவில்லை என்பது பற்றிய தகவல்களை இந்தியா வெளியிடவில்லை. (அ-2)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் எஸ்.இளங்கோ தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பாடசாலை பழைய மாணவரும் வட மாகாண அவைத் தலைவருமான சீ.வீ.கே.சிவஞானம், சிறப்பு விருந்தினராக யாழ்.கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.சண்முககுமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக பாடசாலையின் முன்னாள் பிரதி அதிபர் எஸ். உதயகுமார் கலந்து கொள்வார். (செ-2)

# இந்து சமய பண்பாட்டில் பலி நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)


இந்து சமய பண்பாட்டில் பலி நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கந்தர்மடத்தில் அமைந்துள்ள இந்து சமய பேரவையில் யாழ்.பல்கலைக் கழக மருத்துவப் பீட உதவிப் பதிவாளர் இ.சர்வேஸ்வரா தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்டச் செயலக மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள [illegible] வித்தகர் சிவமகாலிங்கம், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் மு.முரளிதரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஆசியுரையை யாழ்.சின்மய மிஷன் வதிவிடஆச்சாரியார் யாக்கிரக சைத்தன்யா சுவாமிகள் வழங்குவார்.

இதில் நூல் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை தலைவர் பேராசிரியர் மா.வேதநாதன் ஆற்ற முதல் பிரதியை பசுக்கள், இடபங்கள் பாதுகாப்பு அமைப்பு கு.கங்கைவேணியன் பெறுவர்.

நூல் மதிப்பீட்டுரையை யாழ்.பல்கலைகழக இந்து நாகரிகத்துறை பேராசிரியர் கலைவாணி இராமநாதன் நிகழ்த்துவார். (அ-2)




**இறைவனால் நேசிக்கப்படுபவர்கள்**

'நிச்சயமாக அல்லாஹ் தூய்மையாளரை நேசிக்கிறான்'

(திருக்குர் ஆன் 2:222)

'எவன் தன் வாக்குறுதியை நிறைவேற்றுகிறானோ, அவனை அல்லாஹ் நிச்சயமாக நேசிக்கிறான்'

(திருக்குர் ஆன்: 3:76)

'அல்லாஹ் பொறுமையாளர்களை நேசிக்கிறான்'

(திருக்குர் ஆன் 3:146)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இல்ல மெய்வல்லுநர் போட்டிகள்

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணி முதல் பாடசாலை மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

அதிபர் டீ.மாதவன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வித் திணைக்களத்தின்மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ். செல்வராஜா கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சிவானந்தராஜா, தேசிய சேமிப்பு வங்கி ஓய்வுபெற்ற முகாமையாளரும் பாடசாலை பழைய மாணவர் சங்க தலைவருமான கே.கமலசேகரம் கலந்து கொள்வார்.

கௌரவ விருந்தினராக ஓய்வு பெற்ற ஆசிரியரும் பெண் சாரணியத்தின் வடமாகாண ஆணையாளருமான திருமதி ஆர். வசந்தகுமார் ஆகியோர் கலந்து கொள்வார்கள். (க-23)

கைதடி குருசாமி வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை மதியம் 1.30 மணிக்கு கல்லூரி அதிபர் திருமதி ப.செல்வநாயகம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் கோ.கயிலாசநாதன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி வலய உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் ந.ஶ்ரீகாந்தா, தென்மராட்சி வலய ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர்அ.மனோரஞ்சிதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (க-2-23)

யா/மல்லாகம் மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு நாளை சனிக்கிழமை பாடசாலை மைதானத்தில் அதிபர் ந.சுப்பிரமணியம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.சண்முககுலகுமார், கௌரவவிருந்தினர்களாக் ஓய்வு பெற்ற சிரேஷ்ட ஆசிரியர்களும் நலன்விரும்பிகளுமான நா.ஜெகதீஸ்வரி, த.நடராஜா ஆகியோரும் சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற இலங்கை வங்கியின் வட பிராந்திய முகாமையாளர் சிவிக்னராஜா கலந்து கொள்ளவுள்ளனர். (அ-2)

(யாழ்ப்பாணம்)

யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வன்மைத் திறனாய்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் கல்லூரி அதிபர் அ.அருணந்திசிவம் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர் இ.ஆனல்ட், கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆ.சு.சற்குணராசா, வடமாகாண சுகாதார அமைச்சின் அபிவிருத்தி உத்தியோகத்தர் கோ.சபேசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-2)

# நெடுந்தீவு பிரதேசத்துக்குட்பட்ட எல்லே போட்டி; சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம் சம்பியன்





நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டு விழாவின் குழு போட்டிகளில் ஒன்றான எல்லே போட்டி அண்மையில் சீக்கீரியாம்பள்ளம் மைதானத்தில் நடைபெற்றது.

ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் சென்.ஜோன்ஸ் விளையாட்டுக் கழகத்தினை எதிர்த்து சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம் மோதியது.

இதில் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம் 6:3 என்ற ரீதியில் வெற்றி பெற்று 2014 ஆம் ஆண்டுக்கான எல்லே வெற்றிக் கேடயத்தினை தனதாக்கிக் கொண்டது. இதில் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம் சார்பாக றஜீன் 2 ஓட்டங்களையும் ஜெக்கப், அருள்நேசன், திருக்குமரன், நிறோஜன் ஆகியோர் தலா ஒரு ஓட்டத்தையும் பெற்றுக் கொடுத்தனர். சென்.ஜோன்ஸ் விளையாட்டுக் கழகம் சார்பாக அருள் றாஜேஸ்வரன் 2 ஓட்டங்களையும் தோப்பிளஸ் ஒரு ஓட்டத்தையும் பெற்றுக் கொடுத்தனர். (கு)

## கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக

கொக்குவில் ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் மாபெரும் மென்பந்தாட்ட கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.இப் போட்டியானது அணிக்கு 6 பேர் 5 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட போட்டியாக நடத்தப்படவுள்ளது.

போட்டி விண்ணப்ப முடிவுத்திகதி 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையாகும்.போட்டிக்கு விண்ணப்பிக்கும் விளையாட்டுக் கழகங்கள் 077 55 30 753, 077 6188 486 என்னும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு போட்டி அமைப்பாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (கு)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## அரச அதிபர் வெற்றிக்கிண்ணம்; வேலணை பிரதேச செயலகம் சம்பியன்

அரச அதிபர் வெற்றிக்கிண்ண பெண்களுக்கான மென்பந்து கிரிக்கெட் போட்டிகளில் வேலணைப் பிரதேச செயலகம் வெற்றி பெற்றது.

யாழ்.மாவட்ட செயலக நலன் புரிச் சங்கத்தினால் பிரதேச செயலக அணிகளுக்கிடையிலான அரச அதிபர் வெற்றிக் கிண்ண பெரு விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றன.

இதன் ஒரு அங்கமாக பெண்களுக்கான மென்பந்து கிரிக்கெட் போட்டிகள் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றது.

அணிக்கு ஆறுபேர் கொண்ட 5 ஓவர் போட்டிகளின் இறுதிப் போட்டியில் வேலணைப் பிரதேச செயலக அணியும் கோப்பாய் பிரதேச செயலக அணியும் மோதின.

நாணயற்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பாடிய கோப்பாய் பிரதேச செயலக அணி 5 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 31 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 32 என்னும் வெற்றி இலக்கோடு துடுப்பாடிய வேலணை பிரதேச செயலக அணி சிறந்த முறையில் துடுப்பெடுத்தாடி ஓட்டங்களை சேகரித்து வந்தது.

ஒரு கட்டத்தில் இறுதிப் பந்தில் 2 ஓட்டங்கள் வெற்றிக்குத் தேவை என்ற நிலையில் இறுதிப்பந்தினை எல்லைக்கோட்டிற்கு அப்பால் விரட்டி வேலணை பிரதேச செயலக அணி அதிபர் வெற்றிக் கிண்ண பெண்களுக்கான 2014 ஆம் ஆண்டுக்கான கிண்ணத்தை தனதாக்கியது. (க-23)



கரவெட்டி பிரதேச செயலக இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான எல்லே போட்டி அண்மையில் இடம்பெற்றது. இதில் இரண்டாம் இடத்தினை பெற்ற நெல்லை பிளாஸ்ரர் அணியை படத்தில் காணலாம். (க-23)

## இல்ல மெய்வல்லுநர் போட்டிகள்

யா/உடுவில் மான்ஸ் தமிழ்க் கலவன் பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை முன்றலில் அதிபர் இரா.ஜெய குமார் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக ஓய்வுநிலை அதிபர் ஐ.விஜயகாந்தன், சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் திருமதி ஜெ.மயில்வாகனம், சுன்னாகம் பொதுநூலகப் பிரதம நூலகர் திருமதி இ.கருணாநிதி' ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். கௌரவ விருந்தினராக ஓய்வு நிலை அதிபர் பொ.கணேஸ்வரலிங்கம் கலந்துகொள்வார். (அ-2)

தெல்லிப்பழை யா/மகாஜனாக் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர்திறனாய்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கல் லூரி மைதானத்தில் அதிபர் ம.மணிசேகரன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பிரித்தானிய தமிழர் விளையாட்டுச் சங்கத் தலைவர் ரி.தர்மகுலசிங்கம், சிறப்பு விருந்தினராக் பிரித்தானிய மகாஜனன் திரு.திருமதி பாலசுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக இக் கல்லூரியின் ஓய்வுபெற்ற உப-அதிபர்களான திருமதி ப.லோகநாதன், இ.சம்பந்தர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-2)

(சாவகச்சேரி)

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி முதல்வர் க.அருந்தவபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வே.பாலசுப்பிரமணியம் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (அ-9-29)

# அந்தரத்தில் பீற்றர்சனின் கிரிக்கெட் வாழ்க்கை?



இங்கிலாந்து அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் கெவின் பீற்றர்சனின் சர்வதேச கிரிக்கெட் வாழ்வு நிறைவுக்கு வந்துள்ளது. இனி அவரை சர்வதேச போட்டிகளில் சேர்த்துக் கொள்வதில்லை என்ற முடிவு இங்கிலாந்து கிரிக்கெட் சபையால் எடுக்கப்பட்டுள்ளது. இங்கிலாந்து கிரிக்கெட் வரலாற்றின் மிகச் சிறந்த துடுப்பாட்ட வீரர் என்ற பெருமையைக் கொண்ட கெவின் பீற்றர்சன் பல சர்ச்சைகளுக்கு மத்தியிலேய அணியில் இடத்தை தக்க வைத்துக் கொண்டு இருந்தார்.

எனினும் இனிமேலும் முடியாது என்ற நிலையில் அணியை விட்டு நீக்கப்பட்டுள்ளார். 9 வருடங்களில் 104 டெஸ்ட் போட்டிகளிலும் 136 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலும், 37 இருபது-20 போட்டிகளிலும் விளையாடியுள்ளார் கெவின் பீற்றர்சன்.

2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28ஆம் திகதி சர்வதேச கிரிக்கெட் அரங்கில் கால் பதித்த கெவின் பீற்றர்சன் விளையாடிய இறுதி சர்வதேசப் போட்டி இறுதி ஆஷஸ் போட்டி ஆகும்.


நேற்றுமுன்தினம் இங்கிலாந்து அணியின் புதிய முகாமைத்துவப் பணிப்பாளர் போல் டோவ்ண்டன், மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் போட்டிகளின் பயிற்றுவிப்பாளர் ஆஷ்லி ஜைல்ஸ், டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளின தலைவர் அலிஸ்டயர் குக், தெரிவுக் குழுவின் தலைவர் ஜேம்ஸ் விட்டேக்கர் ஆகியோர் கூடி, உலக இருபது-20 அணி தொடர்பாகவும், கெவின் பீற்றர்சனின் நிலை தொடர்பாகவும் கலந்துரையாடிய பின்னரே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் கெவின் பீற்றர்சன் மீள அழைக்கப்படலாம் என்ற எதிர்பார்ப்புக்கள் இருந்தன. இந்த நிலையில் 'எனது சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கை ஓய்வுக்கு வநதுள்ளது. இங்கிலாந்து அணியின் ஆடையை அணியும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பெருமை அடைந்தேன். இனி அது இல்லை என்பது துரதிர்ஷ்டமும் கவலையுமாகும்.


இங்கிலாந்து அணிக்காக விளையாடாவிட்டாலும் தொடர்ந்து கிரிக்கெட் விளையாடுவேன்' என 33 வயதான கெவின் பீற்றர்சன் தெரிவித்துள்ளார். 'கெவின் பீற்றர்சன் மிகச் சிறந்த வீரர். அதில் எந்த கேள்வியும் இல்லை. ஆனாலும் அணி அடுத்த கட்டம் நோக்கி நகர வேண்டும். அணியை வளர்க்க வேண்டும்.

எனவே கஷ்டமான முடிவுகள் எடுக்கப்படவேண்டிய நிலை உள்ளது' என இங்கிலாந்து அணியின் முகாமைத்துவப் பணிப்பாளர் போல் டோவ்ண்டன் தெரிவித்துள்ளார். (கு)









சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றபோது... (க-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டைக் காட்டிக் கொடுக்க வேண்டாம்

நாட்டு மக்கள் பெற்ற சமாதானத்தை விட்டுக் கொடுக்காது அரசியல் கட்சி பிரிவினையின்றி ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்று அமைச்சர் சி.பி.ரத்நாயக்க கோரியுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

இலங்கை அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டுகளை சுமத்தி, புலம் பெயர்ந்த தரப்பினரின் விருப்பு வெறுப்புகளை நிறைவேற்ற சிலர் முனைகின்றார்கள்.

அவர்களுக்கு உதவும் நோக்கில் புரட்சியாளர்களாகவும், கிளர்ச்சியை ஏற்படுத்துபவர்களாகவும் தம்மை காட்டிக்கொள்ளும் சிலர் நாட்டை காட்டிக் கொடுப்பதற்கு தயாராகின்றார்கள்.

எனினும், கட்சி நிற பேதங்கள் இன்றி இலங்கை பிரஜைகள் என்ற நிலையில், அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்று அமைச்சர் சி.பி.ரத்நாயக்க தெரிவித்தார்.

தாயகத்தை ஈடுவைத்து அதிகாரத்தை பெறமுனைபவர்கள், போராடிப் பெற்றுக்கொண்ட அமைதியை விட்டுக்கொடுக்க முனைய வேண்டாம் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (செ-11)

## ஆதாரங்கள்...

தன்மை பற்றியும் இவ்வாறான கூட்டுப் புதைகுழி போன்ற யுத்தக் குற்ற ஆதாரங்களை இராணுவம் அகற்றியதாக கூறப்படுவது பற்றியும் அவர் தனது சந்தேகங்களை வெளியிட்டார்.

மக்கள் குடியேறியுள்ள கிராமங்களிலுள்ள எலும்புக் கூட்டு எச்சங்களை தோண்டியெடுத்து அகற்ற எம்மால் முடிந்திருக்குமா என இராணுவ பேச்சாளர் கேள்வி எழுப்பினார்.

வேண்டுமென்றே வைத்திய சலைகள் மீது பீரங்கி தாக்குதல்கள், வல்லுறவு, சித்திரவதை, பாலியல் வன்முறை, சரணடைந்த தமிழ் புலி போராளிகளை கொலை செய்தமை போன்ற சாத்தியமான யுத்த குற்றங்கள் தொடர்பாக சாட்சியங்கள் கூறியதை அவுஸ்திரேலியாவின் பொதுநல பரப்புரை மையம் என்ற தொண்டு நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில் விபரித்திருந்தது.

யுத்தக் குற்றம் நடந்ததாக கூறப்படுவதை விசாரிக்குமாறு கொழும்புக்கு புதிய அழுத்தம் கொடுக்கும் வகையில் அமெரிக்கா இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் பிரேரணை கொண்டுவர திட்டமிட்டுள்ள நிலையில் இந்த அறிக்கை வெளிவந்துள்ளது.

இலங்கை இராணுவத்தின் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு நிறுவன ஒழுங்கமைப்பு தெளிவாக வரையறுக்கப்பட்டிருப்பதனால் குற்றச்சாட்டுக்கள் நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டால் சிரேஷ்ட இராணுவ தளபதிகளும் இலங்கை அரசாங்க அதிகாரிகளும் குற்றவாளிகளாக காணப்படலாம் என இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (செ-11)

## உலகத் தரம் ...

மானிக்கப்பட்டுள்ள போதிலும், அங்கு அவற்றுக்கான நிலப்பரப்புகள போதுமானதான நிலப்பரப்பு இல்லாத நிலை காணப்படுகின்றது.

வடக்கில் கிளிநொச்சியில் அதிகமான நிலப்பரப்பை கொண்டுள்ளதாக பொறியியல் மற்றும் விவசாய பீடங்கள் அமையப் பெற்றுள்ள நிலையில் ஏனைய பீடங்களையும் விரிவாக்கம் செய்வதற்கான நிலப்பரப்பு காணப்படுகின்றது.

இங்கு அதிகளவிலான மாணவர்களை இணைத்துக் கொள்ளும் பொருட்டு விடுதி வசதிகளும் செய்யப்படவுள்ளன.

இந்நிலையில் எமது இலக்கிற்கு அமைவாக அதிகளவான மாணவர்கள் தமது கற்கை நெறிகளை மேற்கொள்ள முடியும்.

பல்கலைக் கழகங்களில் மாணவர்களை இணைத்துக் கொள்ளும் போது, இனம், மதம் மொழி என்ற பாகுபாடுகளுக்கு அப்பாலேயே இணைத்துக் கொள்ளப் படுகின்றார்கள்.

இதன்மூலமே சமூக ஒருமைப்பாடு, சமாதானம், நட்புறவு மற்றும் சட்டம், ஒழுங்கை பேண முடியுமென்பதற்கு அப்பால் ஐக்கியமுள்ள தேசத்தை கட்டியெழுப்ப முடியும்.

கொடூர யுத்தத்தை முடிவிற்குக் கொண்டு வருவதற்கும் தற்போதுள்ள சமாதான சூழலுக்காகவும் வடக்கு கிழக்கைச் சேர்ந்த பல்லாயிரக் கணக்கான பொதுமக்களின் உயிர உடைமைகளை இழக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில், யாழ்ப்பாண பல்கலைக்கழகம் உலகத்தரம் வாய்ந்த கல்வி நிறுவனமாக தரம் உயர்த்தப்பட்டுள்ள நிலையில் இங்கு வெளிநாடுகளைச் சேர்ந்த மாணவர்களும் தமது கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியுமென்பதுடன், 43 நாடுகளைச் சேர்ந்த 100 மாணவர்களுக்கு விடுதி வசதியுடன் தமது கற்கை நெறிகளை மேற்கொள்ள வசதி வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, கிளிநொச்சியில் அமைக்கப்படவுள்ள யாழ்.பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்திற்கான நினைவுக் கல்லினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சகிதம் உயர் கல்வியமைச்சர் எஸ்.பி.திசநாயக்க திரைநீக்கம் செய்து வைத்தார்.

இந்த நிகழ்வில் பொறியியற் பீட பீடாதிபதி கலாநிதி அற்புதராஜா, விவசாய பீடாதிபதி கலாநிதி சிவமதி சிவச்சந்திரன், யாழ்ப்பாண மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் உதயபெரேரா, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், ஈ.பி.டி.பியின் வட மாகாண சபையின் உறுப்பினர் வை.தவநாதன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் மற்றும் விவசாய பீடங்களின் பீடாதிபதிகள், பல்கலைக்கழகத்தின் ஏனைய பீடங்களின் பீடாதிபதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (செ-6)

## 9,905 தமிழ்க்...

வக் கட்டளைத் தளபதிக்கும் இடையில் நேற்று முன்தினம் மாலை பலாலி இராணுவக் கட்டளைத் தலைமையகத்தில் சந்திப்பு ஒன்று இடம் பெற்றது. இந்தச் சந்திப்பிலேயே இராணுவக் கட்டளைத் த்தளபதி மேற்கண்டவாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

அத்தோடு வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்தோர் தொடர்பில் சரியான புள்ளி விவரங்கள் இல்லை. நீங்கள் ஒரு புள்ளி விவரங்களைக் கொண்டு வருகின்றீர்கள். பிரதேச செயலகம் வேறொரு புள்ளி விவரம தருகின்றது.

மீள்குடியேற்ற அமைச்சு இன்னொரு புள்ளி விவரத்தைத் தருகின்றது. எனவே வலி.வடக்கு மீள் குடியமர்வு தொடர்பில் சரியான புள்ளி விவரங்களை முதலில் திரட்டுங்கள்.

வலி.வடக்கிலிருந்து இடம் பெயர்ந்தோரின் எண்ணிக்கையை வேறாகவும், அவர்களின் வம்சம் பெருகியுள்ள குடும்பங்களின் எணணிக்கையை வேறாகவும் தயாரியுங்கள்.

முகாமில் உள்ளவர்கள், உறவினர், நண்பர்கள் வீடுகளிலுள்ளவர்கள், யாழ்ப்பாணத்துக்கு வெளியே உள்ளவர்கள் என்று தனித்தனியான விவரங்களைத் தயாரியுங்கள்.

மீள்குடியமர்வுக்கு விருப்பமானவர்களின் பெயர் விவரங்களைத தனியாகவும் திரட்டுங்கள். இந்தத் தகவலை எவ்வளவு விரைவாகத் திரட்டித் தருகின்றீர்களோ, அவ்வளவு விரைவாக உங்களை, உங்கள் சொந்த இடங்களிலேயே மீளக்குடியமர்த்த முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் வலி வடக்கிலிருந்து இடம் பெயர்ந்த மக்களின் எண்ணிக்கையினை சடுதியாக குறைத்து குறிப்பிட்ட ஒரு தொகுதி மக்களை மட்டும் மீள்குடியேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருதாகவும் இடம் பெயர்ந்த மக்களால் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் மேற்கொள்ளப்பட்ட பதிவு சரியானது எனவும் அந்த பதிவின் அடிப்படையில் மீள்குடியேற்றம் இடம் பெறவேண்டுமெனவும் இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றத்திற்காக தொடர்ந்து பாடுபட்டுவரும் பிரதிநிதிகள் கேட்டுக் கொண்டுள்ளனர். (செ-6)

## பிரான்சில் இன்று...


இந்த நிகழ்வில் இந்த ஆவணப் படத்தை தயாரித்து தமிழர்களுக்கான நீதியை பெற்றுத் தர வேண்டும் என்று உலகமெங்கும் பயணிக்கும் கலம் மக்ரே கேட்டுக் கொள்கிறார். (செ-11)

## மார்ச் 29-ல்...

இதன்படி தென்மாகாணத்தின் காலி மாவட்டத்துக்காக 14 அரசியல் கட்சிகளும் 4 சுயாதீன குழுக்களும் வேட்பு மனுக்களை தாக்கல் செய்துள்ளன.

மாத்தறைக்காக 14 அரசியல் கட்சிகளும் 5 சுயாதீன குழுக்களும் வேட்பு மனுக்களை தாக்கல் செய்துள்ளன.

ஹம்பாந்தோட்டையில் 9 அரசியல கட்சிகளும் 4 சுயாதீன குழுக்களும் வேட்பு மனுக்களை தாக்கல் செய்துள்ளன. (செ-11)




## இலங்கை...

மற்றும் நீரியல்வளத்துறை அதிகாரிகளிடம் கடற்படையினர் ஒப்படைத்தனர். இந்த நிலையில், குறித்த மீனவர்களின் பயண ஒழுங்குகளை மேற்கொண்டு சொந்த இடங்களுக்கு அனுப்பி வைத்ததாகவும் அவர் கூறினார்.

மேலும், இவர்களின் படகுகளை கடல் மார்க்கமாக அவர்களின் இடங்களுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் என்.கணேஷமூர்த்தி தெரிவித்தார். (செ-11)

MOBILE PHONE
REPAIRING COURSE

*நீங்கள் பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தியவரா? சுயதொழில் ஒன்றை எதிர்பார்ப்பவரா? வேலைசெய்துகொண்டு பகுதிநேரமாக வருமானம் ஈட்டவேண்டுமா?*

4 days course

புதுப்பொலிவுடன் யாழ்நகரில
உங்கள் எதிர்காலத்துக்கு
மாதம் 150,000/-க்கு மேல்
வருமானம் ஈட்ட ஒருவாய்ப்பு.

திருத்தும் துறையில் 10வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரும் இலங்கையில் 2000ற்கும் மேற்பட்ட மாணவர்களைஉருவாக்கியமுதற்தர ஆசிரியருமான Ganesh.K.

பாடநெறிக்கான கட்டணத்தை முதல் மாதத்திலேயே சம்பாதிக்கமுடியும். நவீன Mobile Phone Repairing முறைகள் பயிற்றுவிக்கப்படும.

BTEC
BRITISH TECHNOLOGY ENGLISH COLLEGE
#21, Sirampiyadi lane
Jaffna.
TP: 021 790 4468
MO: 0777 444 225
(C-6436)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# COSMIC CONSCIOUSNESS

சித்தர்களும் ஞானிகளும் பல்லாண்டு காலம் தவமிருந்து பெற்ற அற்புதமான தெய்வீகக் கலைகளை உங்களுக்காக மிக எளிய முறையில் வடிவமைத்து வழங்கி வருகின்றோம். இப் பயிற்சிகளை முறையாக மேற்கொள்வதன் மூலம் உடல், மனம் மற்றும் ஆன்மா ஆகியவை சீரடைந்து மன அமைதி, சந்தோஷம், ஆரோக்கிய வாழ்வு மற்றும் நீண்ட ஆயுளும் கிடைக்க வழி செய்கிறது.

இவ் வரிய சந்தர்ப்பத்தைத் தவற விடாது அனைவரும் பங்கு பெற வாரீர்.

**அறிமுக உரை: 08.02.2014 மாலை 5 மணி**

**இடம்: சொர்ணாம்பிகை மண்டபம் (TCT Hall)**

**527, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

மேலும் விபரங்களுக்கு — அனுமதி இலவசம்

## COSMIC CONSCIOUSNESS

☎ 0770858804, 0774547576 (5528)

---



# IELTS Special Class

May - 10ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் IELTS பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் விசேட வகுப்புகள் Saturday & Sunday 8.30 a.m to 11.30 a.m திங்கள் தொடக்கம் வரை காலை 7 மணி முதல் 8.30 மணி வரை 3 மணி -5 மணி வரை நடைபெறும்

- * SPECIALLY IN READING
- * MORE THAN 10 YEARS EXPERIENCE
- * VOCABULARY and GRAMMAR
- * EXTENDED SPEAKING PRACTICE
- * WE ARE "IELTS REGISTRATION CENTER FOR BRITISH COUNCIL" வகுப்புக்கள் - 15.02.2014 ஆரம்பம்

THIS IS NOT A CONVENTIONAL IELTS CLASS WHERE YOU DO PAPERS AND TEACHER GIVES ANSWER KEY. BUT IT IS AN INNOVATIVE TRINING PROGRAM WHICH HAS HELPED MY STUDENTS TO TOUCH BANDS 8 & 8.5

## BRITISH COLLEGE OF ENGLISH

No. 192, Navalar Road, Jaffna (பெருமாள் கோலுக்குச் சமீபமாக) Tel: 0778803887

---

**உடனடியான வேலைவாய்ப்பு**

நீங்கள் 18-50 வயதுடையவரா? (ஆண்-பெண்) சம்பளம் 18000/=/, 25000/=, 32000/= உணவு+ தங்குமிடம் குறைந்த விலைகளுடன் உடனடியான வேலைவாய்ப்புகள். கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் ஜேம்/கோடியல்/நூடில்ஸ்/ தண்ணீர் போத்தல் / PVC/ கோழி இறைச்சி/தேயிலை/ காமென்ட்/ பெயின்ட் மற்றும் பல தொழிற்சாலைகளில் உற்பத்தி /லேபல்/தரம்பிரித்தல்/களஞ்சிய பிரிவுக்கும் ஆட்கள் தேவை. (நண்பர்கள், குழுக்கள் ஒரே தொழிற்சாலைகளில்) வருகை அன்றே வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள். உடன் தொடர்பு (விசேடம் வடக்கு/ கிழக்கு தமிழ்/முஸ்லிம் மக்களுக்கு) **தொடர்பு:-0775561883** (C-6414)

**வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு: 021 321 0815, 021 567 1532**

---

# BRITISH COLLEGE OF HIGHER STUDIES

## After O/L What Next?

### Spoken English With Grammar - Quick Learning Course (1½ Months)

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு. O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது. **வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.**

### Young Learners for English (YLE) (வயதெல்லை : 7 – 12)

இது ஒரு சர்வதேசப் பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்.

### Diploma In English (2Months)

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத் தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர், மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

### A1 Exam-Sponsor Visa/ Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை.

- U.K அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது.
- எமது கல்லூரியிலேயே மாதிரிப் பரீட்சைகள் நடைபெறும்
- சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை.
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது.

### IELTS

Toping centre for registering more IELTS candidates in Jaffna & Approved centre for IELTS online Registration system

We gurantee minimum 6.0 band and above — Duration 2 ½ Months

### B1 Exam-Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

| Batch - 01 | Batch - 02 | Batch - 03 | Batch - 04 |
|---|---|---|---|
| 08.02.2014 | 10.02.2014 | 15.02.2014 | 17.02.2014 |

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

**Jaffna Branch :** NO. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel : 021 222 4550

**Hotlines :** 0777585913, 0777222422, 0714299935, 0777730074

**Vavuniya Branch :** NO. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel : 024 [illegible]

---

சித்தன்கேணியில் ! அரிய சந்தர்ப்பம் !!

# அறிவொளி உயர் கல்லூரி
# ARIVOLEI HIGHER STUDIES

A.H.I. (Registered as a Institute)

சிவன்கோயில் அருகில் சித்தன்கேணி
(ஆங்கில, சிங்கள வகுப்புக்களின் முன்னோடிகள்)

- இலங்கை மற்றும் சர்வதேச பாடத்திட்டங்களிற்கு அமைய அடிப்படையில் இருந்து கற்பிக்கப்படுகின்றது.

- அவதானித்தல்
- எழுதுதல்
- வாசித்தல்
- கதைத்தல்

**CERTIFICATE IN SPOKEN ENGLISH** (பேச்சு ஆங்கில சான்றிதழ் பயிற்சி)

**CERTIFICATE IN SPOKEN SINGALA** (பேச்சு சிங்கள சான்றிதழ் பயிற்சி)

(ஆங்கிலம், சிங்களம் பேசுவதற்கு, எழுதுவதற்கு 100% உத்தரவாதம், 06 மாதங்கள்)

- அடிப்படையிலிருந்து மிக இலகுவாகக் கற்பிக்கப்படுகின்றது.
- ஒழுக்கம், கட்டுப்பாடு, அறிவு, ஆற்றல், அர்ப்பணிப்புடன் கூடிய ஆண், பெண் ஆசிரியர்கள், விரிவுரையாளர்களின் போதனை.
- பிரிவு 01 ற்கான அனுமதிகள் நிறுத்தப்பட்டுள்ளன.
- O/L, A/L பரீட்சைக்கு தோற்றியோர், தோற்ற இருப்போர் உட்பட ஆங்கிலம், சிங்களம் கற்க விரும்பும் அனைவருக்குமானது.
- முற்பதிவு செய்கின்ற 25 மாணவர்கள் மட்டும் ஒரு பிரிவில் அனுமதிக்கப்படுவர்.
- மாணவர்களிற்கு ஏற்ற வகையில் நேர அட்டவணை தரப்படும்.
- புதிய பிரிவு ஆரம்பம் :- 08.02.2014 சனி காலை 10 மணி

'முற்றிலும் மாணவர்களிற்கான ஒரே நிறுவனம்'

எமது :- T.P. : No :- 077 127 9145

நிர்வாகி :- அறிவொளி உயர் கல்லூரி
சிவன் கோயில் அருகில்
சித்தன்கேணி. (C-6420)

---

**VACANCY**

# OPTIMO GROUP SRI LANKA

எமது Optimo Group Companyக்கு யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் 20 பேர் மட்டும் தேவை.

★ மேற்பார்வையாளர் ★ முகாமைத்துவ பயிற்சியாளர்
★ களஞ்சிய மேற்பார்வையாளர் ★ சந்தைப்படுத்துனர்கள்
ஆகியோர் தேவைப்படுகின்றனர்.

வயதெல்லை 18-35 | இலவசமாக சிங்கள & ஆங்கில வகுப்புக்கள் நடைபெறும் | தங்குமிடம் & உணவு இலவசம்

தொடர்புகளுக்கு : 0771906728 (5535)

---

# CAMBRIDGE ENGLISH
# PET — UNIVERSITY OF CAMBRIDGE

- * இது ஓர் Intermediate B1, Level பரீட்சையாகும். U.K இல் பல கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் இதனை ஏற்றுக்கொள்கின்றன
- * நீங்கள் UK இல் திருமணம் செய்வீர்களானால் UK Border Agency அங்கீகரிக்கும் A1 பரீட்சைக்குப் பதிலாக PET Certificate இனை நீங்கள் எப்பொழுது வேண்டுமானாலும் ஒப்படைக்கமுடியும் PET=B1
- * நீங்கள் IELTS பரீட்சை எடுப்பதற்கு விரும்புவீர்களானல், போதிய ஆங்கில அறிவு உங்களிடம் இல்லையேல் முதலில் PET பாட நெறியைப் பின்பற்றிய பின் IELTS வகுப்பில் கற்க இலகுவாக இருக்கும்

பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் நடைபெறும்



**Exam Fee : Rs.8300/=**
**Exam Date: 17.05.2014**

Subjects : Reading,Writing,Listening,Speaking

நீங்கள் ஆங்கிலத்தில் வாழ்நாள் முழுவதும் எழுத, வாசிக்க, பேச இந்த சர்வதேச தரம் வாய்ந்த பாட நெறி உதவும்.

**புதிய பிரிவுகள் 10.02.2014 ஆரம்பம்**

## Course Schedule

| | Mon, Tuse, Wed,Thur | Saturday&Sunday |
|---|---|---|
| Duaration | 10Week | 10Week |
| Time | 8.30-10.30; 10.30-12.30 | 2.00-5.00 |

(C-6407)

## BRITISH COLLEGE OF ENGLISH

No. 192, Navalar Road, Jaffna (பெருமாள் கோலுக்குச் சமீபமாக) Tel: 0778803887

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.02.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.